**பா.து.நக.எண்.பி3/507/2017**

**தீர்மான எண்.489/2017** **நாள்:01–08–2017**

**பாலங்கள் துறை – பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம் 12 (ஆலந்தூர்) பாதசாரி சுரங்கப்பாதை – தென்னக இரயில்வே கேஜ் கன்வர்சன்–இரயில்வே துறையின் – காஞ்சிபுரம் மாவட்டம் – தாம்பரம் செங்கல்பட்டு மார்க்கம் ஆலந்தூர் வட்டம் – கிண்டி புனித தோமையார் மலை இடையில் இருப்புப்பாதையை கடக்கும் வகையில் LC No. 14ல் பாதசாரி சுரங்கப்பாதை (Pedestrian Subway) – மற்றும் பழவந்தாங்கல் மீனம்பாக்கம் இடையில் இருப்புப்பாதையை கடக்கும் வகையில் LC No. 18ல் இருசக்கர வாகன சுரங்கப்பாதை (Two wheeler vehicular subway) தென்னக இரயில்வே பணி மேற்கொள்ள அனுமதி.**

மண்டலம் 12 (ஆலந்தூர்) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் செங்கல்பட்டு மார்க்கம் ஆலந்தூர் வட்டம், (மேட்டுப்பாளையம் லிங்க் ரோடுடன் வேளச்சேரி ரோடு இணைக்கும்) கிண்டி புனித தோமையார் மலை இடையில் உள்ள இருப்புப்பாதை LC No. 14 மற்றும் (GST ROAD உடன் ஆலந்தூர் இணைக்கும்) பழவந்தாங்கல், மீனம்பாக்கம் இடையில் உள்ள இருப்புப்பாதையை கடக்கும் வகையில் LC No. 18 – ஆகிய இரண்டு இருப்புப்பாதைகளை கடக்கும் வழியினை ஆலந்தூர் வட்டாட்சியர் அவர்களின் பரிந்துரையின் பேரில் புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளாட்சி தீர்மானம் பெற்று வழங்குமாறு துணை தலைமைப்பொறியாளர் (Gauge conversion) தென்னக இரயில்வே, சேத்துப்பட்டு, சென்னை–31 அவர்கள் 27.12.2016 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக கோரியிருந்தார்.

அவ்விடத்தில் பாதசாரி சுரங்கப்பாதை அமைக்க உள்ளாட்சி அமைப்பின் தீர்மானம் பெற்று உடன் அனுப்பி வைக்க மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் அவர்கள் 08.08.2016 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக கோரியிருந்தார்.

மேற்கண்ட சந்திக்கடவுகளை மூடி பாதசாரி சுரங்கப்பாதை அமைக்க மாவட்ட ஆட்சியர் அனுமதியை வழங்கும் முறையே இதுவரை கடைப்பிடித்து வருவதாகவும் பெருநகர சென்னை மாநகராட்சியின் பாலங்கள் துறையில் இத்தகைய அனுமதி வழங்கப்பட்டது இல்லை என்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் அனுமதி பெற்றுக் கொள்ளுமாறு சாலை (ம) பாலங்கள் துறை கண்காணிப்பு பொறியாளர் அவர்களின் 06.02.2017 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பொருள் மீது எவ்வித நடவடிக்கையும் நிலம் (ம) உடைமைத்துறையின் வரம்பில் இல்லையெனவும், மேலும் இவ்விடத்தில் சுரங்கப்பாதை அமைப்பதற்கு உள்ளாட்சி தீர்மானம் பெற்று அனுப்புமாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரால் கேட்டுக் கொண்டுள்ளபடியால் மன்றத் தீர்மானம் பெறுவதற்காக தெற்கு வட்டார ஆணையர் மூலமாக மன்றத்திற்கு அனுப்புமாறு நிலம் (ம) உடைமைத்துறையின் 28.02.2017 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

ஆகவே, மேற்கண்ட இந்த பாதையை கடக்கும் வழியில், (மேட்டுப்பாளையம் லிங்க் ரோடுடன் வேளச்சேரி ரோடு இணைக்கும்) கிண்டி புனித தோமையார் மலை இடையில் உள்ள இருப்புப்பாதை LC No.14 மற்றும் (GST ROAD உடன் ஆலந்தூர் இணைக்கும்) பழவந்தாங்கல், மீனம்பாக்கம் இடையில் உள்ள இருப்புப்பாதையை கடக்கும் வகையில் LC No.18– ஆகிய இரண்டு இருப்புப்பாதைகளை கடக்கும் பாதசாரிகள் சுரங்கப்பாதை அமைந்தால் சாலை உபயோகிப்பவர்களின் நேரம் மிச்சமாகும். மேலும், இந்த இரண்டு இருப்புப்பாதைகளிலும் தற்போது இலகு ரக வாகனங்கள், (Light Motor Vehicle) கடந்து செல்வதால் இங்கு பாதசாரிகள் சுரங்கப்பாதை அமைப்பதற்கு பதிலாக வரையறுக்கப்பட்ட வாகன சுரங்கப்பாதை (Limited Use Subway) அமைக்க வேண்டியும் மேலும் இங்கு வரையறுக்கப்பட்ட வாகன சுரங்கப்பாதை (Limited Use Subway) அமைக்க இயலுமா என்ற சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து முடிவு செய்த பின் அதனடிப்படையில் பாலங்கள் துறை மூலமாக உள்ளாட்சி தீர்மானம் மற்றும் சிறப்பு அதிகாரி தீர்மானம் பெற்று அனுப்பலாம் எனவும் தெற்கு வட்டார துணை ஆணையர்அவர்களால் பாலங்கள் துறைக்கு அனுப்பப்பட்ட 25.04.2017 நாளிட்ட குறிப்பில் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி பாலங்கள் துறையின் மூலம் 24.05.2017 அன்று இரயில்வே துறை, சென்னை குடிநீர் (ம) கழிவுநீர் அகற்று வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகிய துறை அதிகாரிகளுடன் இணைந்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் கீழ்கண்டவாறு பரிந்துரைக்கப்பட்டது.

**பா.து.நக.எண்.பி3/507/2017**

1. (மேட்டுப்பாளையம் லிங்க் ரோடுடன் வேளச்சேரி ரோடு இணைக்கும்) கிண்டி புனித தோமையார் மலை இடையில் உள்ள இருப்புப்பாதை LC No. 14ல் சாலையின் அகலம் சாய்வுதளம் அமைப்பதற்கு ஏதுவாக இல்லை. மேலும், மேற்கு பக்கம் உள்ள சாலையின் அகலம் 6.30 மீட்டர் மட்டுமே உள்ளது. சென்னை குடிநீர் (ம) கழிவுநீர் அகற்று வாரியத்தின் 600 மிமீ விட்டமுள்ள பாதாள கழிவுநீர் குழாய் சாலையின் மத்திய பகுதியில் செல்கிறது. மேலும், தண்ணீர் குழாய் மற்றும் மழைநீர் வடிகால் சாலையின் ஓரத்தில் உள்ளது, ஆகவே இங்கு இலகு ரக வாகன சுரங்கப்பாதை அமைக்க இயலாது. மேலும் இந்த சந்திக்கடவின் வடக்கு பகுதியில் 500மீ தொலைவில் இரயில்வே மேம்பாலம் (மடுவன் கரை) உள்ளது. ஆகையால் படிகட்டுகளுடன் கூடிய பாதசாரிகள் சுரங்கப்பாதை அமைக்கலாம் என கருதப்படுகிறது.
2. (GST ROAD உடன் ஆலந்தூர் இணைக்கும்) பழவந்தாங்கல், மீனம்பாக்கம் இடையில் உள்ள இருப்புப்பாதையை கடக்கும் வகையில் LC No. 18ல் அகலமான சாலைகள் இருமருங்கிலும் உள்ளதால், இருசக்கர வாகன சுரங்கப்பாதை அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளது. மேலும் இந்த சந்திக்கடவின் தெற்கு பகுதியில் 500மீ தொலைவில் இரயில்வே சுரங்கப்பாதை உள்ளது. மேலும் சந்திக்கடவின் மேற்கு பகுதி சாலை Airport Authority of India-விற்கு சொந்தமானதாகும். எனவே இப்பகுதியில் இருசக்கர வாகன சுரங்கப்பாதை அமைப்பதற்கு Airport Authority of India அவர்களிடமிருந்து தடையின்மை சான்று பெறப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள, சந்திக்கடவு எண் 14ல் பாதசாரிகள் சுரங்கப்பாதை மற்றும் சந்திக்கடவு எண் 18ல் இருசக்கர வாகன சுரங்கப்பாதை அமைக்கப்பட்டால், சாலை உபயோகிப்பாளர்களின் நேரம் மற்றும் எரிபொருள் மிச்சமாகும். மேலும், கடவுப்பாதையை கடப்பதனால் ஏற்படும் விபத்துகள் முற்றிலுமாக தவிர்க்கப்பட்டு பாதுகாப்பான போக்குவரத்து உறுதி செய்யப்படும்.

எனவே,

1. சந்திக்கடவு எண் 14ல், இரயில்வே பகுதியில் இரயில்வே துறையால் பாதசாரிகள் சுரங்கப்பாதை அமைப்பதற்கு ஏதுவாக இச்சந்திக்கடவினை மூடுவதற்கு அனுமதியும்,
2. சந்திக்கடவு எண் 18ல், இரயில்வே பகுதியில் இரயில்வே துறையால் இருசக்கர வாகன சுரங்கப்பாதை அமைப்பதற்கு ஏதுவாக இச்சந்திக்கடவினை மூடுவதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி– நிலைக்குழு (பணிகள்), மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.07.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"இனம் 1 மற்றும் 2க்கு சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பது.ந.க.எண்.டி3/ SD/WDCN10/00265/2017**

**தீர்மான எண்.490/2017** **நாள்:01–08–2017**

## தானபத்திரம்

மண்டலம்–10, கோட்டம்–135ல் திரு.P. இளங்கோ அவர்கள் பழைய கதவு எண்.109, புதிய கதவு எண்.190, லேக்வியூ ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை–600 033 பிளாட் எண்.1/5, R.S.No.177/2, T.S.No.67, Block No.42, கோடம்பாக்கம் கிராமம் என்ற இடத்திற்கு கட்டிட தகர்ப்பு மற்றும் மனை உட்பிரிவு அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, அம்மா மாளிகை, ரிப்பன் கட்டிடத்தில் SD/WDCN10/00265/2017 நாள்.31.05.2017ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் கட்டிட தகர்ப்பு மற்றும் மனை உட்பிரிவு வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு Lake View Road அமைய பெற்றுள்ளது. "சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் II" ன் படி, Lake View Road 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தான பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி வழங்க இயலும். ஆகவே மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 40.85 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

தான பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

1. மனை உரிமையாளர் திரு.P. இளங்கோ அவர்களிடம் பழைய கதவு எண்.109, புதிய கதவு எண்.190, லேக்வியூ ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை–600 033 பிளாட் எண்.1/5, R.S.No.177/2, T.S.No.67, Block No.42, கோடம்பாக்கம் கிராமம் என்ற இடத்தில் சாலை விரிவாக்கத்திற்கு தானபத்திரம் மூலம் 40.85 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.65,000/–யை மனை உரிமையாளரிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.07.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பொ.சு.பூ.த.து.ந.க.எண்.எம்7/ 739 /2017**

**தீர்மான எண்.491/2017** நாள்:01–08–2017

**பொது சுகாதாரம் பூச்சி தடுப்பு துறை – மண்டலம்–12ற்குட்பட்ட பகுதிகளில் – பூச்சி தடுப்பு களப் பணியை மேற்கொள்ள தற்காலிக தினக்கூலி பணியாளர்களை – 01.09.2017 முதல் ஓராண்டிற்கு – வெளி நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–12ற்குட்பட்ட கோட்டங்களில் பூச்சி தடுப்பு பணியை மேற்கொள்ள ஒரு சிறுவட்டத்திற்கு (Sector) ஒரு தொழிலாளர் என ஒரு நாளைக்கு 80 வீடுகள் மற்றும் 1 வாரத்திற்கு 500 வீடுகள் என பிரிக்கப்பட்டு கொசு தடுப்பு பணியில் பணியமர்த்தப்பட்டனர். இவர்கள் செக்டாரில் வீடுவீடாக சென்று ஒவ்வொரு வீட்டிலுள்ள நீர்த்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத்தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசு வளர்ச்சி ஏற்படாதவண்ணம் கொசு ஒழிப்பு களப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா மற்றும் மூளைக்காய்ச்சல் போன்ற நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், மண்டலம்–12ல் கொசுவினால் ஏற்படும் தொற்று நோய்களை பரவுவதை தடுக்கும் பொருட்டும், கொசு உற்பத்தியைத் தடுக்கவும், கொசு மருந்து அடிக்கும் பணியை மேற்கொள்ளவும், கொசுப்புகை பரப்பும் இயந்திரங்களை இயக்கவும் நிரந்தர தொழிலாளர்கள் பற்றாக்குறையினால் கூடுதலாக தற்காலிக தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்து பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி 11.08.2017–வுடன் முடிவுறும் தருவாயில் உள்ளது. மேலும் 01.09.2017 முதல் ஓராண்டிற்கு பூச்சி தடுப்பு களப் பணியை மேற்கொள்ள கீழ்கண்டவாறு தற்காலிக தினக்கூலி பணியாளர்களை ஒப்பந்த முறையில் நியமிப்பது அவசியமாகிறது.

| வ. எண். (1) | மண் டலம் (2) | தற்காலிக தொழிலாளர்களின் எண்ணிக்கை (3) | மாதாந்திர ஊதியம் (வரிகள் மற்றும் தொழிலாளர்கள் சலுகைகள் உட்பட) (4) | மதிப்பீட்டு தொகை (5) |
|---|---|---|---|---|
| 1. | 12 | 177 | 13473.99 | 2,86,18,754.76 |

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 12.06.2017 நாளிட்ட செயல்முறை ஆணையில் தற்காலிக தொழிலாளர்களுக்கு தினக்கூலியாக ஒரு நாளைக்கு ரூ.320/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளவாறு பொது சுகாதாரம் பூச்சி தடுப்பு களப் பணியில் ஈடுபடுத்த நியமிக்கபடும் தற்காலிக தினக்கூலி தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ. 320 வீதம் X 31 நாட்களுக்கு = ரூ.9920/– என கணக்கிடப்பட்டு குறைந்தபட்ச ஊதியத்துடன், இன்சூரன்ஸ் (Employees State Insurance), சேம நல நிதி (Employees Provident Fund), சேவை வரி (Service Tax) மற்றும் ஒப்பந்ததாருக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக் கட்டணம் (Administrative Charges) போன்ற சலுகைகள் வழங்க வேண்டியுள்ளது.

எனவே,

1. மேற்படி கலம்–5ல் கண்டுள்ளவாறு மதிப்பீட்டு செலவீன தொகையின்படி மண்டலம்–12ற்கு தகுதி வாய்ந்த வெளிநிறுவனம் மூலம் தற்காலிக தினக்கூலி தொழிலாளர்களை 01.09.2017 முதல் ஓராண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திட நிர்வாக அனுமதியும்,
2. மண்டலம்–12ற்கு மாநகர நல அலுவலர் மூலம் தலைமையிடத்தில் ஒப்பம் கோரி நேர் செய்யவும்,

<u>பொ.சு.பூ.த.து.ந.க.எண்.எம்7/ 739 /2017</u>

3. மண்டலம்–12ற்கு மதிப்பீட்டு செலவீன தொகையுடன் ஒப்பந்ததாரர் தெரிவிக்கும் நிர்வாக கட்டணம் சேர்த்து செலவீனத்தை மேற்கொள்ளவும்,
4. இப்பணிக்கான செலவீன தொகையை மண்டலம்–12ற்குண்டான "Payment of Casual Labours" கணக்கு தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யவும் மற்றும் செலவீனத்தை தீர்வு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.07.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"இனம் 1 முதல் 4 வரை சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**ம.அ.13.ந.க.எண்.சி3/5003/2017**

**தீர்மான எண்.492/2017** **நாள்:01–08–2017**

**மண்டலம்–13 – வார்டு–172ல் மேற்கு கால்வாய்கரை சாலையில் மிகவும் சிதிலமடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–13, வார்டு–172ல் மேற்கு கால்வாய்கரை சாலையில் மிகவும் சிதிலமடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து விட்டு அவ்விடத்தில் குழந்தைகள் நல மையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து அகற்ற பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி அவர்களின் அனுமதி பெற வேண்டியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

மண்டலம்–13 வார்டு–172

| | |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மேற்கு கால்வாய்கரை சாலையில் மிகவும் சிதிலமடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள அங்கன்வாடி கட்டிடம். |
| கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 1985 |
| கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு | 78.00ச.மீ |
| கட்டிடத்தின் பரப்பளவு | 78.00ச.மீ |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ஏதும் இல்லை. |
| கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | இல்லை |
| கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட உள்ளது | குழந்தைகள் நல மையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

எனவே, மண்டலம்–13, வார்டு–172ல் மேற்கு கால்வாய்கரை சாலையில் மிகவும் சிதிலமடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.07.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**<u>ம.அ.3.ந.க.எண்.989/2017</u>**

**தீர்மான எண்.493/2017** **நாள்:01–08–2017**

**<u>மண்டலம்–3, (மாதவரம்) – வார்டு–24 சூரப்பட்டு பிரதான சாலையிலுள்ள புழல் ஊராட்சி ஒன்றியத்தால் கட்டப்பட்ட புத்தகரம் பஞ்சாயத்து அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–3,(மாதவரம்), வார்டு–24 சூரப்பட்டு பிரதான சாலையிலுள்ள புழல் ஊராட்சி ஒன்றியத்தால் கட்டப்பட்ட புத்தகரம் பஞ்சாயத்து அலுவலக கட்டிடம் 2003 ஆம் ஆண்டு அலுவலக பயன்பாட்டிற்காக சுமார் 45 சதுர மீட்டரில் தரைதளம் மட்டும் ரூ.60 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ளது. மேலும், தற்போது இக்கட்டிடம் பல்வேறு இயற்கை சீற்றங்களாலும், சூரப்பட்டு பிரதான சாலையில் செல்லும் வாகனங்களின் அதிர்வுகளாலும் சுவர்கள் விரிசலிட்டு மேற்கூரை சேதமடைந்து மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. மேற்கு கால்வாய்கரை சாலையில் மிகவும் சிதிலமடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து விட்டு அவ்விடத்தில் குழந்தைகள் நல மையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து அகற்ற பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி அவர்களின் அனுமதி பெற வேண்டியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

மண்டலம்–3(மாதவரம்) வார்டு–24

| | |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | சூரப்பட்டு பிரதான சாலையிலுள்ள புழல் ஊராட்சி ஒன்றியத்தால் கட்டப்பட்ட புத்தகரம் பஞ்சாயத்து அலுவலக கட்டிடம் |
| கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 2003 |
| இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் பரப்பளவு | 45.00ச.மீ |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.43,172.90 |
| கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | ஆம் |
| கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட உள்ளது | வார்டு அலுவலகம் கட்டப்படும். |
| கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. |

எனவே, இந்த கட்டிடத்தை இடித்து விட்டு புதிதாக கட்டடத்துறை மூலம் ஒருங்கிணைந்த 24வது வார்டு அலுவலக கட்டிடம் கட்டலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ.43,172.90 ஆகும். மேலும் இக்கட்டிடம் இடிக்கும் போது இவ்விடத்தில் இயங்கிய அலுவலகங்கள் தற்போது தற்காலிகமாக செயல்பட்டு வரும் வார்டு–24 அலுவலகத்திற்கு மாற்றப்படும்.

எனவே, மண்டலம்–3,(மாதவரம்), வார்டு–24 சூரப்பட்டு பிரதான சாலையிலுள்ள புழல் ஊராட்சி ஒன்றியத்தால் கட்டப்பட்ட புத்தகரம் பஞ்சாயத்து அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 17.07.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**பே.சா.து.ந.க.எண்.பி1/4642/2015**

**தீர்மான எண்.494/2017** **நாள்:01–08–2017**

**பேருந்து சாலைகள் துறை – மண்டலம் 9, கோட்டம் – 114ல் உள்ள காமராஜர் சாலையில் அண்ணா சதுக்கம் பேருந்து நிறுத்தத்திற்கு நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிழற்குடை மற்றும் கழிவு நீர் வடிகால் வாயும் அமைக்கும் பணிக்கு – ஒப்பங்கள் கோரப்பட்டது – குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். தாமஸ் ஐயாதுரை இன்ஃப்ராஸ்ட்ரக்சர் (பி) லிட் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது – வரைபடத்தில் சில மாறுதல்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் திருத்திய மதிப்பீட்டிற்கு அனுமதி.**

மண்டலம்–9, கோட்டம்–114ல் உள்ள காமராஜர் சாலையில் அண்ணா சதுக்கம் பேருந்து நிறுத்தத்திற்கு நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிழற்குடை மற்றும் கழிவு நீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு 2014–15ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ரூ.2,76,30,000/– மதிப்பீட்டிற்கு ஆட்சி முறை ஒப்பளிப்பு மன்றத்தீர்மான எண்.693/2015, நாள்.27.11.2015ல் பெறப்பட்டு, ஒப்பங்கள் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். தாமஸ் ஐயாதுரை இன்ஃப்ராஸ்ட்ரக்சர் (பி) லிட் அவர்களுக்கு ரூ.2,08,84,080.00க்கு பணிகள் அளிக்க மன்றத்தீர்மான எண்.272/2016, நாள்.26.02.2016ல் பெறப்பட்டு 29.02.2016 அன்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் பணி ஏதும் ஆரம்பிக்கப்படவில்லை.

எற்கனவே மேற்கண்ட பணிக்காக கலந்தாலுனர் நியமிக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபடத்தில் மாறுதல்கள் மேற்கொள்ள வேண்டி வருவதால், அதற்கான திருத்திய வரைபடம் பெற்று மதிப்பீடுகளை மாற்ற வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளது. இதனை கருத்தில் கொண்டு இப்பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டினை திருத்தம் செய்து திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறலாம் என கருதி திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டதில் பழைய மதிப்பீட்டைவிட குறைவாக உள்ளதால் இப்பணிக்காக பெறப்பட்ட ஒப்பந்தத்தை திருவாளர்கள். தாமஸ் ஐயாதுரை இன்ஃப்ராஸ்ட்டரக்சர்(பி) லிட் அவர்களைக் கொண்டே மேற்கொள்ளலாம் எனக் கருதப்படுகிறது.

எனவே,

1) மண்டலம்–9, கோட்டம்–114ல் உள்ள காமராஜர் சாலையில் அண்ணா சதுக்கம் பேருந்து நிறுத்தத்திற்கு நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிழற்குடை மற்றும் கழிவு நீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்ட மன்றத்தீர்மான எண்.693/2015, நாள்.27.11.2015ல் இரத்து செய்வதற்கு ஒப்புதலும்,
2) மண்டலம்–9, வார்டு எண்–14ல் உள்ள காமராஜர் சாலையில் அண்ணாசதுக்கம் பேருந்து முனையத்திற்கு டென்சில் ரூபிங் (tensile Roofing) அமைக்கும் பணிக்கு 2016–17ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டிற்கு ரூ.1,05,00000/–க்கு ஒப்புதலும்,
3) மேற்கண்ட பணிக்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் திருவாளர்கள். தாமஸ் ஐயாதுரை இன்ஃப்ராஸ்ட்ரக்சர் (பி) லிட் அவர்களைக் கொண்டே திருத்திய மதிப்பீட்டின்படி இப்பணியினை மேற்கொள்ள ஒப்புதலும்,
4) மண்டலம் 9, கோட்டம் – 114ல் உள்ள காமராஜர் சாலையில் அண்ணா சதுக்கம் பேருந்து நிறுத்தத்திற்கு நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிழற்குடை மற்றும் கழிவு நீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட திருத்திய திட்ட மதிப்பீட்டின்படி பணியாணை வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி– நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.07.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“ இனம் 1 முதல் 4 வரை சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**B.R.R.C.No.B1/1815/2017**

**Resolution No.495/2017** **Date:01-08-2017**

**Greater Chennai Corporation – Bus Route Roads Department – Proposed junction improvement at the junction of TTK Road and Cathedral Road, and Dr.Radhakrishnan Salai in ward – 118 & 119, Zone – 9 – additional length to be carried out – Order issue.**

The tender was awarded to the contractor M/s. J.S. Sons, to have the traffic improvement works at the cost of Rs.4.19 crores to a total length of 2000m (1000 x 2) both sides.

The work is for the construction of footpath, with granite slab and kerb, supply and fixing bollards, construction of duct with HDPE, PVC pipe and table top.

In this connection, this work was being executed under the technical input from ITDP and traffic police. During the routine inspection it is found that the footpath if it is extended along the TTK road to the total length of 900 m (450m x 2) both sides, it is more useful with continuity in the pathway to have pedestrian safety.

The approximate additional cost that could be incurred to have the footpath extended as per the necessary will be around 1.04 crores, which is well within the 25% of the allowed work that could be taken up over and above the awarded tender value.

In view of the reasons highlighted above, footpath is necessary as per the guidance and inputs given by traffic police and ITDP.

Hence,

1) To execute the additional value of work not more than 25%, which comes to Rs.1.04 Crore and to pay the contractor M/s J.S & Sons by extending the original proposal of having footpath Dr.Radhakrishnan Salai – TTK Road to a length of 900 meters.
2) to exempt the contractor from executing the supplementary agreement as the nature of work is same
3) To ratify for having executed the work in anticipation of sanction and to extend the contractor period up to 31.08.2017

Sl.no 1 to 3 are above, Orders of the Special Officer-Standing Committee(Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested Commissioner's note date 24.07.2017 is read.

**" Sl.No 1 to 3 are approved by the Special Officer-Standing Committee(Works), Standing Committee(Taxation and Finance) and Council".**

******

**ம.அ.5.வ.து.ந.க.எண்/4546/2017**

**தீர்மான எண்.496/2017** நாள்:01–08–2017

**வருவாய் துறை – மண்டலம்–5 – வார்டு எண். 58 – சைடனாம்ஸ் ரோடு வணிக வளாகக் கட்டடம் – இடிக்க அனுமதியும் இருப்பு பொருள் வைக்க பயன்படுத்தவும் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, வருவாய் துறை, மண்டலம்–5, வார்டு எண்.58 சைடனாம்ஸ் ரோடு வணிக வளாகக் கட்டடத்தில் உள்ள கடைகளின் விவரம் பின்வருமாறு

| சைடனாம்ஸ் ரோடு வணிக வளாகம் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ எண் | வணிக வளாக ஒதுக்கீடு எண் (கணிப்பொறி) | குத்தகைதாரர் | மாத வாடகை ரூ. | நிலுவைத் தொகை ஜூன்–2017 ரூ. | குறிப்பு |
| 01 | N05-N058-008-1 | பாலகிருஷ்ணன் | 3057 | 18342 | குத்தகைதாரர் |
| 02 | N05-N058-008-2 | ராமசந்திரன் | 3199 | 22396 | குத்தகைதாரர் |
| 03 | N05-N058-008-3 | குரே தாஸ் பிளைவுட்ஸ் | 3107 | 21749 | குத்தகைதாரர் |
| 04 | N05-N058-008-4 | வெங்கட சுப்பிரமணியம் | 3218 | 9654 | குத்தகைதாரர் |
| 05 | N05-N058-008-5 | ஜெயந்தி | 3199 | 9597 | குத்தகைதாரர் |
| 06 | N05-N058-008-6 | சீத்தைய்யா | 3428 | 6856 | குத்தகைதாரர் |
| 07 | N05-N058-008-7 | ஏ.பி.எம் மம்முட்டி | 2880 | 11520 | குத்தகைதாரர் |
| 08 | N05-N058-008-8 | ஏ.பி.எம் மம்முட்டி | 2880 | 11520 | குத்தகைதாரர் |
| 09 | N05-N058-008-9 | ஏ.பி.எம் மம்முட்டி | 3321 | 13284 | குத்தகைதாரர் |
| 10 | N05-N058-008-10 | ஏ.பி.எம் மம்முட்டி | 3321 | 13284 | குத்தகைதாரர் |
| 11 | N05-N058-008-11 | ஏ.பி.எம் மம்முட்டி | 3057 | 12228 | குத்தகைதாரர் |
| 12 | N05-N058-008-12 | மாவீர்பரசுல்மர்தா | 3057 | 9171 | குத்தகைதாரர் |
| 13 | N05-N058-008-13 | கே.எம். முரளி | 3107 | 43427 | குத்தகைதாரர் |
| 14 | N05-N058-008-14 | எஸ். நரேந்தர் மோடி | 3057 | 6114 | குத்தகைதாரர் |
| 15 | N05-N058-008-15 | பாரத் ஆர். பட்டேல் | 3057 | 9171 | குத்தகைதாரர் |
| 16 | N05-N058-008-16 | சுனில்குமார் தீர் | 3363 | 10089 | குத்தகைதாரர் |
| 17 | N05-N058-008-17 | ராஜூப் தீர் | 3433 | 10299 | குத்தகைதாரர் |
| 18 | N05-N058-008-18 | ஏ.பி.எம் மம்மூட்டி | 3363 | 10089 | குத்தகைதாரர் |
| 19 | N05-N058-008-19 | சி. தேவகி | 4074 | 12222 | குத்தகைதாரர் |

இக்கட்டிடத்தின் கிழக்கு பக்கமாக தற்போது (CMRL) சென்னை மெட்ரோ இரயில் பணிக்காக சிமெண்ட் கலவை கலக்கும் நிலையம் இயங்கி வருகிறது.

கள ஆய்வு செய்ததில், மேற்குறிப்பிட்டுள்ள பகுதியில் காணப்படும் கட்டடமானது மிகவும் சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் காணப்படுகிறது. **11954** சதுரடி பரப்பளவில் மேற்கண்ட இக்கட்டிடத்தில் **19** கடைகள் இயங்கி வருகிறது.

எனவே,

1. மேற்குறிப்பிட்ட பாழடைந்த நிலையில் காணப்படும் இக்கட்டத்தினை இடிக்க தக்க மேல்நடவடிக்கையினை பொறியியல் துறை மூலமாக மேற்கொள்ளவும்,

**ம.அ.5.வ.து.ந.க.எண்/4546/2017**

2. மேற்குறிப்பிட்ட கடைகளுக்கான வாடகை உரிமத்தினை 30.06.2017 முதல் ரத்து செய்து கடைகளை பயன்படுத்திவருவோருக்கு 30 நாட்கள் அறிவிப்பு வழங்கி, கடைகளை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுக்க சட்டப்படியான உரிய மேல்நடவடிக்கையினை மேற்கொள்ளவும்,
3. இதே இடத்தில் புதியதாக வணிக வளாக கட்டிடம் கட்டப்படும் வரையில், இப்பகுதியினை (CMRL) இருப்பு பொருள் வைக்கும் வசதிக்காக பயன்படுத்திக் கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(பணிகள்) நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 24.07.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“இனம் 1 முதல் 3 வரை சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**ம.அ.5.வ.து.ந.க.எண்/1273/2017**

**தீர்மான எண்.497/2017** **நாள்:01–08–2017**

**வருவாய் துறை – மண்டலம்–5 – வார்டு எண். 057, மல்லைய்யா மார்க்கெட் வணிக வளாகக் கட்டடம் இடிக்கவும் மற்றும் குப்பை சேகரிக்கும் மையமாக (ஆர்.ஆர்.சி) பயன்படுத்துவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, வருவாய் துறை, மண்டலம்–5, வார்டு எண்.57, மல்லைய்யா மார்க்கெட் வணிக வளாகக் கட்டடத்தில் உள்ள கடைகளின் விவரம் பின்வருமாறு

**மல்லைய்யா மார்க்கெட் வணிக வளாக கட்டிடம்**

| S No | S.C.ID.NO (AS IN ERP) | ALLOTTEE NAME | OCCUPIER | MONTHLY RENT IN RS | ARREAR AMOUNT UPTO MAY-2017 IN RS | REMARKS |
|---|---|---|---|---|---|---|
| 01 | N05-N054-350-1 | தயாளன் | ஜெய்–ஜெய் பெஸ்ட் சென்டர் | 403 | 43391 | உப–குத்தகைதாரர் |
| 02 | N05-N054-350-2 | ஜஸ்வந்தம்மாள் ஜெயின் | மார்லேஜா சார்ட்டபிள் | 403 | 463 | உப–குத்தகைதாரர் |
| 03 | N05-N054-350-3 | வெங்கட்ராவ் | ஹோண்டா ஆட்டோ சென்டர் | 403 | 0 | உப–குத்தகைதாரர் |
| 04 | N05-N054-350-4 | ஆனந்தராவ் | வேலு கூல்பார் | 403 | 1852 | உப–குத்தகைதாரர் |
| 05 | N05-N054-350-5 | நாராயணராவ் | ஸ்ரீபாலாஜி ட்ராவல்ஸ் | 403 | 0 | உப–குத்தகைதாரர் |
| 06 | N05-N054-350-6 | பவன்லால் | ஹோண்டா ஆட்டோ சென்டர் | 403 | 74192 | உப–குத்தகைதாரர் |

கள ஆய்வு செய்ததில், மேற்கொண்ட இக்கட்டத்தின் தரைதளத்தில் ஆறு கடைகள் இயங்கி வருகிறது. முதல் தளத்தில் நூலகம் மூடப்பட்டுள்ளது. இதர பகுதியானது பெருநகர சென்னை மாநகராட்சி பயன்பாட்டில் உள்ளது.

எனவே,

1. கடைகளுக்கான வாடகை உரிமத்தினை 15.06.2017 முதல் ரத்து செய்து கடைகளை பயன்படுத்தி வருவோருக்கு 30 நாட்கள் அறிவிப்பு வழங்கி, கடைகளை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுக்க சட்டப்படியான உரிய மேல் நடவடிக்கையினை மேற்கொள்ளவும்,
2. மேற்குறிப்பிட்ட பகுதியில் காணப்படும் கட்டடமானது மிகுந்த பாழடைந்த நிலையில் காணப்படுகிறது. 2052 சதுர அடி பரப்பளவில் உள்ள மேற்குறிப்பிட்ட வணிக வளாக கட்டடமானது மிகவும் பாழடைந்து இடிந்து விழும் நிலையில் காணப்பட்டு வருவதால் மேற்குறிப்பிட்ட கட்டித்தினை இடிக்க பொறியியல் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும்,
3. இதே இடத்தில் புதியதாக வணிக வளாக கட்டிடம் கட்டப்படும் வரையில், இப்பகுதியில் குப்பை சேகரிக்கும் மையமாக (Resource Recovery Center) பயன்படுத்திக் கொள்ளவும்,

<u>ம.அ.5.வ.து.ந.க.எண்/1273/2017</u>

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(பணிகள்) நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.07.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“இனம் 1 முதல் 3 வரை சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/5259/2001**

**தீர்மான எண்.498/2017** நாள்:01–08–2017

**நிலம் மற்றும் உடைமைத்துறை – பழைய மண்டலம்–5, (புதிய மண்டலம்–8), பிளாக்–10, வார்டு–102–ல் செனாய் நகர், மேற்கு பூங்கா சாலை, சென்னை–30ல் 2800 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் அஞ்சல் நிலையத்திற்காக குத்தகைக்கு விடப்பட்டது – குத்தகை காலம் முடிவடைந்துவிட்ட நிலையில் – அனுமதியற்ற அனுபோகதாரரிடமிருந்து 10 சதவீதம் ஏற்கெனவே உயர்வு செய்யப்பட்ட பயன்பாட்டு இழப்பீட்டு தொகையை வசூலிப்பதற்கு அனுமதி.**

1989–ஆம் ஆண்டு நிலம் மற்றும் உடைமைத்துறை உருவாக்கப்பட்ட பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய்த் துறை மூலமாக குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்கள், கட்டிடங்களின் விவரங்களை அறிய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான குத்தகை நிலம்/கட்டிடம் நிலம் மற்றும் உடைமைத்துறை மூலமாக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், வாடகை செலுத்துவதற்காக வருவாய்த் துறையால் பெறப்படும் தபால்களை நிலம் மற்றும் உடைமைத்துறைக்கு அனுப்பவேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

இதன் தொடர்பாக வாடகைக் காசோலைகளுடன் தனி நபர்கள் மற்றும் அரசுத்துறைகளிடமிருந்து வரப்பெற்ற தபால்கள் இத்துறைக்கு வருவாய்த் துறையால் அனுப்பப்பட்டன. அவ்வாறு பெறப்பட்ட தபால்களிலிருந்து குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டிடங்களின் விவரங்களை அறிந்துக் கொள்ள முடிந்தது.

மண்டல அலுவலர்–5 (புதிய மண்டலம்–8) 20.09.2002 நாளிட்ட தமது குறிப்பில் வார்டு எண்.67, மேற்கு பார்க் சாலையிலுள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில், வாடகை அடிப்படையில் அஞ்சலக அலுவலகம் இயங்கிவருவது அறியப்பட்டது என்றும் இது சம்பந்தமாக அஞ்சலக கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மேற்கொண்ட விசாரணையில் மேற்குறிப்பிட்ட நிலம் மற்றும் கட்டிடம் 01.06.1964–ல் பெருநகர சென்னை மாநகராட்சியில் இருந்து பெறப்பட்டது என்றும், ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரங்களை கேட்ட போது அதற்குரிய ஆவணங்களை ஆவண துறையில் இருந்து பெற்று அனுப்பி வைக்கப்படும் என்றும் தபால் துறை தெரிவித்ததாக குறிப்பிடபட்டுள்ளது.

மேலும், தொடர்புடைய கட்டிடத்தினை வாடகை அடிப்படையில் பெற்றதற்கான ஒதுக்கீடு ஆணை விவரத்தினை அளிக்க தபால் துறையிடம் பலமுறை கோரப்பட்டதில் ஒதுக்கீடு விவரங்கள் ஏதுமில்லை என தபால்துறை தெரிவித்துவிட்டது.

இது தொடர்பாக (பழைய மண்டலம்–5), புதிய மண்டலம்–8–ன் கருத்து கோரப்பட்டதில், 01.06.1964–ம் ஆண்டிலிருந்து இத்தபால் நிலையமானது 2800 சதுர அடியில் நிலம் மற்றும் கட்டிடம் மேற்படி விலாசத்தில் இயங்கி வருவதாக தெரியவருகிறது என்றும், இக்கட்டிட விவரம் ஏதும் மண்டல அலுவலக சொத்து பதிவேட்டில் பதியப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தபால் நிலையம் பயன்படுத்திவரும் மொத்த இடத்திற்கும் மாதம் ஒன்றிற்கு வாடகையாக ரூ.235/– மட்டுமே செலுத்தி வருவதாக தெரியவருகிறது. கட்டிடத்தின் விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| தளம் | ஆஸ்பெஸ்ட்டாஸ் கூரை | சிமெண்ட் தளம் |
|---|---|---|
| தரைதளம் | 436 சதுர அடி | 2364 சதுர அடி |
| முதல் தளம் | 869 சதுர அடி | 224 சதுர அடி |

இப்பொருள் குறித்து சம்பந்தப்பட்ட தபால்துறை அலுவலருடன் 25.11.2004 அன்று இத்துறையில் நடத்தப்பட்ட கலந்துரையாடலில், மேற்படி கட்டிடத்திற்கான வாடகை பல காலமாக உயர்த்தப்படாமல், செலுத்தப்பட்டுவருவதாகவும், பெருநகர சென்னை மாநகராட்சி வாடகை உயர்த்தி அதன் விவரத்தினை தெரிவித்தால், அதனை செலுத்துவதற்கான மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என அஞ்சல் அலுவலக முதுநிலை கண்காணிப்பாளரின் 26.05.2005 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

(1) மாவட்ட வருவாய் அலுவலரின் மூலம் மண்டல அலுவலர்–5க்கு அனுப்பிய 10.02.2005 நாளிட்ட குறிப்பில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி 1964–ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகைத் தொகையினை ஒவ்வொரு வருடமும் 10 விழுக்காடு உயர்த்தி வாடகைத் தொகையினை செலுத்திட தபால் துறையினைக் கோருவதற்கும்,

(2) மேற்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிட விவரத்தினை மண்டல வார்டு பொறியாளர் அலுவலகத்தின் அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்திட மண்டல அலுவலர்–5 (புதிய மண்டலம்–8) அவர்களுக்கு அறிவுரை வழங்கவும்;

(3) மேற்படி கட்டிடம் (பழைய மண்டலம்–5), புதிய மண்டலம்–8–ன் பயன்பாட்டிற்காக தேவைப்படுமா அல்லது தொடர்ந்து தபால்துறைக்கு ஒதுக்கீடு செய்யலாமா என்பது குறித்து கருத்தினை அளிக்க மண்டல அலுவலர்–5 (புதிய மண்டலம் –8) அவர்களைக் கோரிடவும் ஆணையரால் 04.02.2005 நாளன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

10.02.2005 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் 01.06.1964–ம் ஆண்டு முதல் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகைத் தொகையினை ஒவ்வொரு வருடமும் 10 விழுக்காடு உயர்த்தி, உயர்த்தப்பட்ட வாடகை தொகையை செலுத்தப்பட வேண்டும் என்று அஞ்சல்துறை முதுநிலை கண்காணிப்பாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 10.02.2005 நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகைத் தொகையினை ஒவ்வொரு வருடமும் 10 விழுக்காடு உயர்த்தி, அதன்படி 01.06.1964 முதல் 2004–ம் ஆண்டு வரையிலான பயன்பாட்டு இழப்பீட்டு தொகை ரூ.13,75,741/– செலுத்த வேண்டும் என்று இவ்வலுவலக கேட்பு கடிதம் மூலம் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டது, மற்றும் 25.01.2006–ல் மீண்டும் நினைவூட்டுக் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

துணை ஆணையர்(வமநி) அவர்களின் 03.06.2011 நாளிட்ட குறிப்பில் 01.06.1964–ம் ஆண்டு முதல் 31.03.2011–ம் ஆண்டு வரை பயன்பாட்டு இழப்பீட்டு கட்டணம் 10 சதவீதம் உயர்த்தி கணக்கீடு செய்ததில் செலுத்தப்பட வேண்டிய பயன்பாட்டு இழப்பீட்டு தொகை 24,58,777/–ஆகும். இந்நிலுவை தொகை உடன் செலுத்துமாறு 03.06.2011 கேட்பு அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் செனாய் நகர் அஞ்சல் துறை முதுநிலை கண்காணிப்பாளர் மூலம் செலுத்தப்பட்டுள்ள தொகை ரூ.1,32,540/–ஆகும்.

சென்னை மாநகர மண்டலம், அஞ்சல் தலைவர் (பொது) இந்திய தபால் துறை அவர்களின் 21.03.2012 நாளிட்ட கடிதத்தில் மேற்படி கட்டிடம் மற்றும் நிலத்தை கிரயத்தின் அடிப்படையில் தபால் துறைக்கு மாற்றம் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

இப்பொருள் குறித்து மேற்கண்ட இடத்தை இளநிலை பொறியாளர்/நிமஉது, அவர்கள் 08.05.2012 அன்று கள ஆய்வு செய்து மாவட்ட வருவாய் அலுவலர்/நிமஉது அவர்களுக்கு ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதில் பழைய மண்டலம்–5 (புதிய மண்டலம்–8), கோட்டம்–102ல் செனாய் நகர், கிளப் மேற்கு சாலை, தபால் நிலையம் மற்றும் தரை தளத்துடக் கூடிய கட்டிடம் உள்ளதாகவும், நிலம் (ம) உடைமைத்துறையில் பராமரிக்கப்படும் நிரந்தர நில பதிவேட்டில் கீழ்க்கண்டவாறு பதிவாகியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

| | | |
|---|---|---|
| கிராமம் | – | அமைந்தகரை |
| பிளாக் எண் | – | 10 (வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது) |
| தெருவின் பெயர் | – | கிளப் மேற்கு ரோடு |
| சர்வே களம் எண் | – | 11 |
| பழைய சர்வே எண் | – | 49/பாகம் |
| முனிசிபல் டோர் எண் | – | 103 |
| விஸ்தீரணம் | – | ஹெக்டேர்–0/ஏர்–06/ச.மீ.98.0 |
| முனிசிபல் ரிஜிஸ்டர் | – | சென்னை மாநகராட்சி |
| உபயோகம் | – | மாடி வீடு (செனாய் நகர் தபால் நிலையம்) |

மேலும், தற்பொழுது செயல்பட்டு கொண்டிருக்கும் செனாய்நகர் அஞ்சல் அலுவலகம் குத்தகை அடிப்படையில் இயங்கி வருவதாகவும் நிலம் மற்றும் கட்டிடத்தை தபால் துறைக்கு மாற்றம் செய்து அரசு நிர்ணயம் செய்யும் நில கிரயத்தை செலுத்தவும் இசைவினை தெரிவித்துக் கொள்வதாக கள ஆய்வு மற்றும் ஆவண பதிவேட்டின் மூலமாக தெரிவித்துள்ளார்.

அஞ்சல் துறை முதுநிலை கண்காணிப்பாளரின் 30.10.2015–ம் நாளிட்ட கடிதத்தில் குத்தகைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மேற்படி நிலம் மற்றும் கட்டிடத்திற்கு ஒவ்வொரு வருடமும் உயர்த்தப்பட்ட 10 சதவீத பயன்பாட்டு இழப்பீட்டு தொகை தொடர்பான ஆணையரின் செயல்முறை ஆணையின் நகலை அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/5259/2001</u>

மேலும், செனாய் நகர் அஞ்சல் துறையினர் 1964ம் ஆண்டு முதல் நிர்ணயிக்கப்பட்ட வாடகை தொகையினையே உயர்த்தப்படாமல் இன்று வரை மாத வாடகையாக ரூ.235/– மட்டுமே செலுத்தி வருவதாக தெரியவருகிறது. ஒவ்வொரு வருடமும் 10 சதவீதம் குத்தகை தொகை உயர்த்தப்பட்டுள்ளது என்பதை பயன்பாட்டு இழப்பீட்டாளருக்கு 11.2.2005–அன்று முதல் கடிதம் மூலம் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இந்நேர்வில், 01.04.2011–ம் ஆண்டு முதல் 31.03.2017 வரை செனாய் நகர் அஞ்சல் துறைக்கு ஒவ்வொரு ஆண்டும் குத்தகை தொகையில் 10 சதவீதம் உயர்த்தி, செலுத்தப்பட வேண்டிய மொத்த பயன்பாட்டு இழப்பீட்டு தொகை மற்றும் 01.06.2007 முதல் 31.03.2017 வரை சேவை வரி கீழ்கண்ட அட்டவணையின்படி கணக்கிடப்பட்டுள்ளது.

**<u>கணக்கீட்டு பட்டியல்</u>**

| பயன்பாடு | | இடத்தின் விவரம் | | பரப்பளவு சதுர அடியில் |
|---|---|---|---|---|
| **அரசு துறை** அஞ்சல் அலுவலகம் | | **மண்டலம்–8, பிளாக்–10, வார்டு–102–ல் செனாய் நகர், அஞ்சல் நிலையத்திற்காக குத்தகைக்கு ஒதுக்கீடு** | | **2800 சதுர அடி** |
| வ. எண். | வருடம் | 10% உயர்த்தப்பட்ட வாடகை /மாதம் | இழப்பீட்டுத் தொகை ரூ. | சேவை வரி ரூ. |
| 1 | 01.04.2011 முதல் 31.03.2012 (சேவை வரி 10.30 %) | 20722×12 | 248664 | 25612 |
| 2 | 01.04.2012 முதல் 31.03.2013 (சேவை வரி 12.36 %) | 22794×12 | 273528 | 33808 |
| 3 | 01.04.2013 முதல் 31.03.2014 (சேவை வரி 12.36%) | 25073×12 | 300876 | 37188 |
| 4 | 01.04.2014 முதல் 31.03.2015 (சேவை வரி 12.36%) | 27580×12 | 330960 | 40907 |
| 5 | 01.04.2015 முதல் 31.05.2015 (சேவை வரி 12.36%) | 30338x2 | 60676 | 7500 |
| 6 | 01.06.2015 முதல் 31.08.2015 (சேவை வரி 14 %) | 30338x3 | 91014 | 12742 |
| 7 | 01.09.2015 முதல் 31.10.2015 (சேவை வரி 14) | 30338x2 | 60676 | 8495 |
| 8 | 01.11.2015 முதல் 14.11.2015 (சேவை வரி 14 %) | 30338×14/30 | 14158 | 1982 |
| 9 | 15.11.2015 முதல் 30.11.2015 (சேவை வரி 14.5 %) | 30338×16/30 | 16180 | 2346 |
| 10 | 01.12.2015 முதல் 31.3.2016 (சேவை வரி 14.5 %) | 30338×4 | 121352 | 17596 |
| 11 | 01.04.2016 முதல் 31.5.2016 (சேவை வரி 14.5 %) | 33372×2 | 66744 | 9678 |
| 12 | 01.06.2016 முதல் 31.03.2017 (சேவை வரி 15 %) | 33372×10 | 333720 | 50058 |
| | | | 19,18,548 | 2,47,912 |
| மொத்தம் | | | 21,66,460 | |
| இதுவரை செலுத்திய பயன்பாட்டு இழப்பீட்டு தொகை | | | 10,810 | |
| செலுத்த வேண்டிய பயன்பாட்டு இழப்பீட்டு தொகை | | | 21,55,650 | |

எனவே, தற்போது (பழைய மண்டலம்–5) புதிய மண்டலம்–8, வார்டு–102–ல் செனாய் நகர், மேற்கு பூங்கா சாலை, சென்னை–30ல் உள்ள பெருநகர மாநகராட்சிக்கு சொந்தமான 2800 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் செனாய் நகர் அஞ்சல் துறை மாவட்ட அஞ்சலகம் பயன்படுத்திய பயன்பாட்டு இழப்பீட்டு தொகை 01.06.1964 முதல் கீழ்கண்டவாறு பட்டியல் இடப்பட்டுள்ளது.

<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/5259/2001</u>

| வ. எண் | வருடம் | செலுத்த வேண்டிய பயன்பாட்டு இழப்பீட்டு தொகை | நிலுவைத் தொகை |
|---|---|---|---|
| 1. | 01.06.1964 முதல் 31.03.2011 வரை | – | ரூ. 24,58,777/– |
| 2. | 01.04.2011 முதல் 31.03.2017 வரை பயன்பாட்டு இழப்பீட்டு தொகை<br>01.04.2011 முதல் 31.03.2017 வரை சேவை வரி | ரூ19,18,548/–<br>ரூ2,47,912/– | ரூ.21,66,460/– |
| 3. | 01.06.1964 முதல் 31.03.2017 வரை செலுத்த வேண்டிய பயன்பாட்டு இழப்பீட்டு தொகை | | ரூ.46,25,237/– |
| 4. | அஞ்சலகம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலச்செலுத்து சீட்டு விவரத்தின்படி செலுத்தப்பட்டுள்ள தொகை | | (–) ரூ.10,810/– |
| 5. | 01.06.1964 முதல் 31.03.2017 வரை செலுத்த வேண்டிய மொத்த பயன்பாட்டு இழப்பீட்டு தொகை | | ரூ. 46,14,427/– |

எனவே, 01.06.1964 முதல் 31.03.2011 வரை செலுத்த வேண்டிய பயன்பாட்டு இழப்பீட்டு தொகை ரூ. 24,58,777/– மற்றும் 01.04.2011 முதல் 31.03.2017 வரை செலுத்தப்பட வேண்டிய பயன்பாட்டு இழப்பீட்டு தொகை ரூ. 21,66,460/– ஆகும். இதுவரை செனாய்நகர் அஞ்சல் அலுவலகம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலச்செலுத்து சீட்டு விவரத்தின்படி செலுத்தப்பட்டுள்ள தொகை ரூ.10810/–ஆகும். எனவே, 01.06.1964 முதல் 31.03.2017 வரை செனாய்நகர் அஞ்சல் அலுவலகம் மூலம் செலுத்தப்பட வேண்டிய மொத்த பயன்பாட்டு இழப்பீடு தொகை ரூ. 46,14,427/– ஆகும்.

எனவே,

1. இப்பயன்பாட்டு இழப்பீட்டு தொகையை ஒரு வாரக்காலத்திற்குள் வருவாய் அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி (Revenue Officer, Greater Chennai Corporation) என்ற பெயரில் காசோலையாகவோ அல்லது வரைவுவோலையாக செலுத்துமாறும்,
2. மேற்கண்ட நிலம் மற்றும் கட்டிடத்திற்கான வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ததற்கான ஒதுக்கீட்டு ஆணை மற்றும் உரிய ஆவணங்களை சமர்பிக்குமாறும்,
3. மேலும் கட்டிடம் அஞ்சல் துறையின் பயன்பாட்டிற்கு தொடர்ந்து தேவைப்படுமெனில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தினை தொடர்ந்து பயன்படுத்திக்கொள்ள அனுமதி அளிக்கக்கோரி முறையான கோரிக்கையினை அளிக்குமாறும் முதுநிலை கண்காணிப்பாளர், மாவட்ட அஞ்சல் அலுவலர், சென்னை (வடக்கு) அவர்களை கேட்டுக் கொள்ளவும்,
4. மண்டலம்–5, (புதிய மண்டலம்–8) வார்டு–102, செனாய் நகர், மேற்கு பூங்கா சாலையில் அமைந்துள்ள பெருநகர மாநகராட்சிக்கு சொந்தமான 2800 சதுர அடி நிலத்தை அஞ்சல் துறை பயன்படுத்தி வருவதற்கு 1964ஆம் ஆண்டிலிருந்து 10 சதவீதம் வாடகை தொகையினை உயர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 24.07.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“இனம் 1 முதல் 4வரை சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**ம.அ.6.ந.க.எண்.அ1/1093/2017**

**தீர்மான எண்.499/2017** நாள்:28–07–2017

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம் –6 – தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்ய அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பழைய மண்டலம்–4 மற்றும் பழைய மண்டலம்–3ல் சில பகுதிகள் இணைக்கப்பட்டு தற்சமயம் பெருநகர சென்னை மாநகராட்சியின் புதிய மண்டலம்–6 உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, பழைய மண்டலம்–4 சார்ந்த தணிக்கை தடைகளுக்கான பதில் அறிக்கை கீழ்காணுமாறு தயாரித்து தணிக்கை தடை நீக்கம் செய்ய சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பத்தி எண் | தணிக்கை தடையின் சுருக்கம் | தணிக்கை தடையின் விளக்கம் |
|---|---|---|---|
| 1. | 19<br>2010–11 | கேடும் குற்றமும் பயக்கும் தொழில் உரிமம் புதுப்பிக்காதவர்கள் கட்டணங்கள்–2010–2011ம் ஆண்டு வசூல் செய்யப்படவில்லை – தொகை ரூ.623831/– பொறுப்பு அலுவலர் 1.திரு.கே.ரவி, உதவி வருவாய் அலுவலர் 01/04/2010–31.03.11<br>2. திரு. இருதயதுல்லா உ.வ.அலுவலர் 1.4.10,31.3.11 | பழைய மண்டலம்–4ன் கோட்டம்–50 முதல் 63 வரை வார்டுகளின் 2010–11ம் ஆண்டிற்கான தொழில் உரிமங்கள் புதுப்பிக்காதவர்கள் பட்டியல் இணைப்பு–4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. தொழில் உரிமங்கள் புதுப்பிக்காதவர் பட்டியல் சம்பந்தமான தணிக்கை பத்தியாகும்.<br>இந்த தணிக்கை ஆண்டில் திரு.எஸ்.ரவி, உதவி வருவாய் அலுவலர் வார்டு எண்.50 முதல் 54 மற்றும் 62 ஆகிய 6 வார்டுகளில் மட்டுமே பணிபுரிந்தார்.<br>தொழில் உரிமம் புதுப்பித்தல் பொறுத்தவரை முந்தைய தணிக்கையாண்டில் நடைபெற்ற தொழில்கள் அடுத்த தணிக்கையாண்டில் நடைபெறாத காரணத்தினால் பல இனங்கள் புதுப்பிக்க வாய்ப்பில்லை.<br>மேலும், காலம் கடந்து புதுப்பிக்கும் தொழில் உரிமங்களுக்கு 50 சதவீதம் மற்றும் 100சதவீதம் அபாரத் தொகையுடன் உரிமம் புதுப்பிக்கப்படுகிறது.<br>தீபாவளி மற்றும் கார்த்திகை திருவிழா காலங்களில் பெறப்படும் தற்காலிக பட்டாசு உரிமங்கள் விற்பனை அதே இடங்களில் செய்யப்படுவதில்லை என்பதால் அவ்வினங்கள் தொடர்ச்சியாக புதுப்பிக்கப்படுவதில்லை.<br>சில உரிமங்களின் புதுப்பித்தலில் கட்டிட உரிமையாளர்களுக்கும் தொழில் நடத்துவோருக்கும் இடையே ஏற்படும் சட்டப்பிரச்சினைகள், சென்னை மாநகராட்சி சட்ட விதிகளுக்கு புறம்பாக நடத்தப்படும் தொழில் உரிமங்கள் ரத்து செய்வது போன்ற நிகழ்வுகளால் உரிமம் புதுப்பித்தல் இயலாத நிலை ஏற்படும்.<br>2010–2011ம் ஆண்டு தணிக்கையாண்டில் வில்லிவாக்கம் மேம்பால கட்டுமான பணி மற்றும் வார்டு 63ல் உச்சநீதிமன்ற உத்தரவின்படி சாலை ஆக்கிரமிப்புகள் கட்டிடங்கள் அகற்றப்பட்டு நெடுஞ்சாலை விரிவாக்க பணி போன்ற நிகழ்வினால் சில உரிமங்கள் ரத்து செய்யப்பட்ட நிலையும் ஒரு காரணமாகும்.<br>இதே பொருள் கொண்ட தணிக்கைப் பத்திகள் 2011–12 மற்றும் 2012–13 தணிக்கையாண்டுகளில் தொடர்ந்து எழுப்பப்பட்டுள்ளது.<br>தொழில்வரி மற்றும் உரிமக் கட்டணம் வசூலிக்கும் பணி உரிமம் ஆய்வாளர்களின் தலையாய கடமை ஆகும். |

<u>ம.அ.6.ந.க.எண்.அ1/1093/2017</u>

| | | | |
|---|---|---|---|
| | | | இதன் அடிப்படையில் திரு.எஸ்.ரவி உதவி வருவாய் அலுவலர் பெயரை இத்தணிக்கை பத்தியிலிருந்து நீக்கம் செய்யலாம். |
| 2. | <u>35</u><br>2011–12 | கேடும் குற்றமும் பயக்கும் தொழில் உரிமம் புதுப்பிக்காதவர்கள் கட்டணங்கள்–2011–12ம் ஆண்டு வசூல் செய்யப்படவில்லை தொகை ரூ.8,56,980<br>பொறுப்பு அலுவலர்<br>1. திரு.கே.ரவி, உதவி வருவாய் அலுவலர் 1.4.2010, 31.3.2011<br>2. திரு.கிரிதர், உதவி வருவாய் அலுவலர்<br>3. சம்பந்தப்பட்ட கோட்ட உரிமம் ஆய்வர்கள் | (அ). மண்டலம்–6ல் 2011–12 வருட தணிக்கையில் உரிய காலத்திற்குள் புதுப்பிக்காத நிறுவனங்களின் பட்டியல் இணைப்பு–6 நிலுவை உரிமங்கள் கோட்டம் 50 முதல் 63 முடிய என தணிக்கைப் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.<br>திரு.எஸ்.ரவி உதவி வருவாய் அலுவலர் இந்த தணிக்கையாண்டில் கோட்டம்–50 முதல் 54 மற்றும் 62 ஆகிய 6 கோட்டங்களில் மட்டுமே (கொளத்தூர் சட்டமன்ற தொகுதி) பணிபுரிந்துள்ளார்,<br>தொழில் உரிமம் புதுப்பித்தல் பொறுத்தவரை முந்தைய தணிக்கையாண்டில் நடைபெற்ற தொழில்கள் அடுத்த தணிகையாண்டில் பலவித காரணங்களால் நடைபெறாத நிலையில் உரிமங்கள் புதுப்பிக்க வாய்ப்பில்லை.<br>மேலும் காலம் கடந்து புதுப்பிக்கும் தொழில் உரிமங்களுக்கு 50 சதவீதம் மற்றும் 100 சதவீதம் அபாரத் தொகையுடன் உரிமம் புதுப்பிக்கப்படுகிறது.<br>தீபாவளி மற்றும் கார்த்திகை தீபம் திருவிழா காலங்களில் பெறப்படும் தற்காலிக பட்டாசு உரிமங்களின் உரிமங்கள் விற்பனை அதே இடங்களில் செய்யப்படுவதில்லை என்பதால் அவ்வினங்கள் தொடர்ச்சியாக புதுப்பிக்கப்படுவதில்லை.<br>சில உரிமங்களின் புதுப்பித்தலில் கட்டிட உரிமையாளர்களுக்கும் தொழில் நடத்துவோருக்கும் இடையே ஏற்படும் சட்டப்பிரச்சினைகள், சென்னை மாநகராட்சி சட்ட விதிகளுக்கு புறம்பாக நடத்தப்படும் தொழில் உரிமங்கள் ரத்து செய்வது போன்ற நிகழ்வுகளால் உரிமம் புதுப்பித்தல் இயலாத நிலை ஏற்படும். 2010–2011ம் ஆண்டு தணிக்கையாண்டில் வில்லிவாக்கம் மேம்பால கட்டுமான பணி மற்றும் வார்டு 63ல் உச்சநீதிமன்ற உத்தரவின்படி சாலை ஆக்கிரமிப்புகள் கட்டிடங்கள் அகற்றப்பட்டு நெடுஞ்சாலை விரிவாக்க பணி போன்ற நிகழ்வினால் சில உரிமங்கள் ரத்து செய்யப்பட்ட நிலையும் ஒரு காரணமாகும்.<br>மண்டலம்–3ல் திரு.எஸ்.ரவி உதவி வருவாய் அலுவலராக தன் பணிகாலத்தில் பணிபுரியவில்லை இப்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டவைகளின் நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.<br>இந்த தணிக்கை பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளினால் நிதி இழப்பு எதுவும் ஏற்படவில்லை. எனவே திரு.எஸ்.ரவி, உதவி வருவாய் அலுவலர் பெயரை பொறுப்பிலிருந்து பத்தி எண் 35 (அ) (ஆ) நீக்கம் செய்யலாம். மேலும் இப்பத்தியானது உரிமம் ஆய்வாளர்கள் சார்ந்தது இத்தணிக்கையாண்டில் திரு.பி.கே.இளவரசு, வரி மதிப்பீட்டாளராக பணிபுரிந்துள்ளதால் இப்பத்தி நாளன்று திரு.பி.கே.இளவரசு, வரி மதிப்பீட்டாளர் அவர்களின் பெயரினை நீக்கம் செய்யலாம். |

<u>ம.அ.6.ந.க.எண்.அ1/1093/2017</u>

| | | | |
|---|---|---|---|
| 3. | <u>19</u><br>2011–12 | மண்டலம்–6, திரு.வி.க.நகர் 2011–12ம் ஆண்டு தணிக்கை – சொத்துவரி–அரையாண்டுக்கான சொத்துவரி நிர்ணயம் – குறைவாக வகித்தது – வசூலிக்கப்படல் வேண்டும் ரு.15,846/–<br>பொறுப்பு அலுவலர்<br>1. திரு.ரவி, உதவி வருவாய் அலுவலர்<br>2. திரு.கிரிதர், உதவி வருவாய் அலுவலர்<br>3. சம்பந்தப்பட்ட கோட்ட வரி மதிப்பிட்டாளர்கள் | மண்டலம்–6, திரு.வி.க.நகர் 2011–12ம் ஆண்டு இத்தணிக்கை பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 6 எண்ணிக்கையிலான சொத்துக்களின் சொத்துவரி குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. என்பதின் விவரங்களை கணினியில் ஆய்வு செய்ததில் மேற்கண்ட சொத்துக்களின் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது சரியாக உள்ளது என கண்டறியப்பட்டது. அதற்கான ஒளி நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டு (கணக்கீட்டு தாளும்) பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>இந்நிகழ்வில் நிதி இழப்பு எதுவும் இல்லை என்பதால் இத்தணிக்கை தடையை நீக்கம் செய்யலாம். |
| 4. | <u>21 (அ)</u><br>2011–12 | மண்டலம்–6, வருவாய் துறை 2011–12 சொத்துவரி புதிய மதிப்பீடு – ஒரே நபருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சொந்த கட்டிடங்களில் உரிமையாளர் சொந்த உபயோகம் குடியிருப்பு பகுதி என 25 சதவீதம் தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது – இழப்பு தொகை வசூலிக்கப்படல் வேண்டும் – ரூ.2691<br>பொறுப்பானவர்<br>1.திரு.எஸ்.ரவி, உ.வ. அலுவலர்<br>2.திரு.கிரிதர் உ.வ. அலுவலர்(ம)<br>3.சம்பந்தப்பட்ட வரி மதிப்பீட்டாளர்கள் | மண்டலம்–6, திரு.வி.கநகர் 2011–2012ம் ஆண்டு தணிக்கை பத்தி 21(அ)வில் குறிப்பிட்டுள்ள சொத்துவரி விதிப்பு இனங்கள் அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகும்<br>கட்டிட உரிமையாளர்கள் அடுக்குமாடி குடியிருப்பினை கட்டி முடித்தவுடன் அதனை விற்பனை செய்ய குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு பெறுதல் அவசியம் கருதி சொத்துவரி விதிக்க விண்ணப்பம் செய்வர்.<br>கோட்ட வரி மதிப்பீட்டாளர்கள் இவ்வடுக்குமாடி குடியிருப்பினை கள ஆய்வு மேற்கொள்ளும் நேரம் அனைத்து குடியிருப்புகளும் குடியேறாமல் காலியாக இருப்பதால் either completion or occupation என்ற சென்னை மாநகராட்சி சட்ட விதிகளின் படி சொத்துவரி நிர்ணயம் செய்யப்படும்.<br>மேற்கண்ட அடுக்குமாடி குடியிருப்பினை புதிதாக வாங்கும் உரிமையாளரின் பெயரில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்படும் நிலையில் இந்நிகழ்வில் நிதி இழப்பு ஏதுவும் ஏற்பட வாய்ப்பில்லை. எனவே இத்தணிக்கை பத்தியினை நீக்கம் செய்யலாம். |
| 5. | <u>29 (1)</u><br>2005– | மண்டலம்–3, சமூக நலக்கூடங்களில் வாடகை வசூல்–காசோலையாகவோ வங்கி வரைவோலையாகவோ வசூலிக்கப்படாமல் ரொக்கமாக வசூலிக்கப்பட்டது. கருவூலத்தில் செலுத்தப்படாதது – வாடகை வசூலின் கட்டணம் மற்றும் சேவை வரிவசூல் மற்றும் செலுத்திய விவரம் அலுவலர்களால் உடனுக்குடன்/அப்பொழுது சரிபார்க்கப்படாதது– | சமூக நலக்கூடங்களின் வாடகை வசூல் செய்வது குறித்தான பணிகள் வரிமதிப்பீட்டாளருக்கு ஒதுக்கப்படவில்லை. இது சம்பந்தமாக இருக்கை எழுத்தர், வரிவசூலிப்பவர், மேலாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர்களின் பணியாகும் இந்த தணிக்கைத் தடைகளில் சுட்டிக்காட்டடப்பட்ட நிகழ்வின் போது திரு.மைக்கேல் ஆல்பிரட் அவர்கள் மண்டலம்–3ல் வரிமதிப்பீட்டாளராக பணிபுரிந்தவர். இந்த சமூக நலக்கூட வாடகை வசூல் பணிகள் வரி மதிப்பீட்டாளருக்கு ஒதுக்கப்படவில்லை, சொத்து வரி மதிப்பீடு செய்வது, சொத்துவரி வசூல் செய்வது மட்டுமே வரிமதிப்பீட்டாளரின் பணிகளாகும் இத்தடையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முறைகேடுகளில் ஈடுபட்ட எழுத்தர் திரு. பாலாஜி பாபு, நிரந்தர பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். |

| | | | |
|---|---|---|---|
| | | மாநகராட்சிக்கு இழப்பு ரூ.24,64,501.00 பிடித்தம் செய்யப்பட வேண்டும்– இழப்பிற்கு காரணமான பணியாளர் மற்றும் அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வரிவசூலிப்பாளர்கள் திரு.கோபால் மற்றும் சங்கர் ஆகியோருக்கு தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளது. வரி மதிப்பீட்டாளர் இதற்கு பொறுப்பாக மாட்டார் என்பதலும் இதே தணிக்கைத் தடைநாளன்று திரு.கிருஷ்ணமூர்த்தி, திரு.ஜே.பாலகிருஷ்ணன் வரி மதிப்பீட்டாளர்களை பொறுப்பு நீக்கம் செய்யப்பட்டுள்ளதாலும் (தணிக்கை தொ.க.எண்.6/2016/ஈ2/15 நாள். 10.16 எனவே, இத்தணிக்கை தடையிலிருந்து திரு.மைக்கேல் ஆல்பிரட், முன்னாள் வரி மதிப்பீட்டாளர் அவர்களை பொறுப்பு நீக்கம் செய்யலாம். |
| 6. | 31 (இ) 2011–12 | வருவாய் துறை–தொழில்வரி காசோலைகள் மூலம் வசூலித்தது–வங்கியினால் மறுக்கப்பட்ட தொழில் வரி(ம) அபராத தொகை வசூலிக்கப்படாமை இழப்பு ரூ.3,30,419/– | இப்பத்தி உரிம ஆய்வாளருக்கான பத்தியாகும். திரு.பி.கே.இளவரசு அவர்கள் இத்தணிக்கையாண்டில் வரி மதிப்பீட்டாளராக பணி புரிந்துள்ளதால் திரு.பி.கே.இளவரசு வரி மதிப்பீட்டாளர் என்பவரை பத்தியின் பொறுப்பிலிருந்து நீக்கம் செய்யலாம். |

மேற்கண்ட தணிக்கைத் தடைகள் கணக்கு மற்றும் நிலைக்குழுவால் நீக்கம் செய்யப்பட வேண்டியது அவசியமாகும். தற்போது நிலைக்குழுக்கள் ஏதும் இல்லாத நிலையில் சிறப்பு அதிகாரி மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். எனவே, மேற்படி சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதில்களை ஏற்று தணிக்கை தடைகளை நீக்க சிறப்பு அதிகாரி– நிலைக்குழு (கணக்கு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.07.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"வ.எண் 1 முதல் 6 வரை உள்ள தணிக்கைத்தடைகளை நீக்க சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(கணக்கு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**வ.து.ந.க.எண்.ஜி4/6534/16**

**தீர்மான எண்.500/2017** நாள்:28–07–2017

**வருவாய் துறை – வாகன நிறுத்தும் இடங்கள் தெரிவு செய்யப்பட்டது – வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்திட மின் ஒப்ப முறையில் ஒப்பம் கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது – ஒப்பந்தப்புள்ளி எவரும் வழங்கவில்லை – மறு ஒப்பந்தம் கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருதல் – தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்திற்கு கால நீட்டிப்பு செய்ய அனுமதி**

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்ட வாகன நிறுத்தக் கட்டண வசூலிக்கும் பணிக்காலம் 31.12.2016 அன்று முடிவடைந்ததால் கால நீட்டிப்பு செய்ய வேண்டி சிறப்பு அதிகாரி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் மூலமாக மன்றத் தீர்மான எண்.60/2016 நாள்: 30.12.2016ன்படி 92 இடங்களில் வாகன நிறுத்தக் கட்டண வசூல் செய்ய 01.01.2017 முதல் 30.04.2017 வரை கால நீட்டிப்பு செய்து அனுமதி பெறப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மான எண்.249/2017 நாள்: 28.04.2017ன்படி தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்திற்கு வாகன நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் பணிக்காலம் 01.05.2017 முதல் 31.07.2017 வரை 92 இடங்களுக்கு கால நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்பார்வை பொறியாளர் பேருந்து சாலைகள் துறை அவர்களின் 24.04.2017 நாளிட்ட கடிதத்தில் சென்னை நகரில் உள்ள முக்கிய 12 பிரதான சாலைகளில் தானியியங்கி வாகன நிறுத்துதல், பெட்டகம் கட்டுதல் பராமரித்தல் பின் 7 வருடத்திற்கு பின் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் திருவாளர்கள் மில்லினியம் சினர்ஜி லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு கீழ்கண்டுள்ள இடங்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வாகனம் நிறுத்துமிடத்தின் பெயர் | பணி முடிவுறும் நாள். |
|---|---|---|
| 01 | வடக்கு மாட தெரு, மயிலாப்பூர் | 10.02.2016 |
| 02 | தியாகராய சாலை, தியாகராய நகர் | 10.02.2016 |
| 03 | சி.எஸ்.ஐ.ஆர்.சாலை, தரமணி | 10.02.2016 |
| 04 | அண்ணா நகர் 3வது நிழற்சாலை (கந்தசாமி கல்லூரி எதிரில்) | 20.02.2018 |
| 05 | சாந்தி காலனி (சுந்தரம் மெடிக்கல் பவுண்டேஷன் அருகில்) | 20.02.2018 |
| 06 | அண்ணா நகர் 2வது நிழற்சாலை (தெற்கு பக்கம்) | 20.02.2018 |
| 07 | கிளப் ஹவுஸ் ரோடு | 20.12.2018 |
| 08 | 3வது நிழற்சாலை (அண்ணா நகர் – எஸ்.எஸ் சூப்பர் மார்கெட் அருகில்) | 20.02.2018 |
| 09 | ஜி.என்.செட்டி சாலை – விருதுநகர் ஹோட்டல் அருகில் மற்றும் ராமகிருஷ்ணா விளையாட்டுதிடல் முதல் ரோகித் ஹோட்டல் வரை | 20.02.2018 |
| 10 | பாண்டி பஜார் எதிரில் | 20.02.2018 |
| 11 | சர்தார் பட்டேல் ரோடு– காந்தி நகர் | 20.02.2018 |
| 12 | ஒயிட்ஸ் ரோடு | 20.02.2018 |

மேற்கண்ட நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்ட 12 சாலைகளில் வடக்கு மாட தெரு மயிலாப்பூர், தியாகராயா சாலை, தியாகராயா நகர் சி.எஸ்.ஐ.ஆர்.சாலை தரமணி ஆகிய சாலைகளில் வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யும் பணிக்காலம் முடிவுற்றுள்ளது. மீதம் உள்ள 9 சாலைகளில் வாகன நிறுத்தக் கட்டணப் பணியினை சரிவர செயல்படுத்தாத காரணத்தினால் ரத்து செய்தும் மற்றும் தானியியங்கி இயந்திரங்களை அந்தந்த மண்டலத்தில் உள்ள உதவி வருவாய் அலுவலரிடம் ஒப்படைக்க ஆணையர் ஆணை பெறப்பட்டு உடனடியாக மேற்கண்ட இடங்களில் வாகன நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் பணியினை உடனடியாக நிறுத்தவும் மற்றும் தானியியங்கி இயந்திரங்களை அந்தந்த மண்டலத்தில் உள்ள உதவி வருவாய் அலுவலரிடம் ஒப்படைக்கும்படி அந்நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

**வ.து.ந.க.எண்.ஜி4/6534/16**

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்திற்கு வழங்கப்பட்ட கால நீட்டிப்பு 31.07.2017 அன்று முடிவடைவதால் அப்பணிகளை தொடர்ந்து வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யும் பணியினை மேற்கொள்வதற்கு கால நீட்டிப்பு செய்யவும், மேலும் திருவாளர்கள் மில்லினியம் சினர்ஜி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்ட 12 பிரதான சாலைகளில் தானியியங்கி வாகன நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் பணியினை ரத்து செய்வதால் அச்சாலைகளில் தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகம் மூலம் வாகன நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் பணி வழங்குவதற்கும்,

1. திருவாளர்கள். மில்லினியம் சினர்ஜி பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட 12 சாலைகளில் வாகன நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் பணியினை 3 சாலைகளின் பணிக்காலம் முடிவுற்றதாலும், 9 சாலைகளில் பணிகள் சரிவர செயல்படுத்தாத காரணத்தினால் ரத்து செய்ததாலும், 12 சாலைகளில் வாகன நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் பணியினை தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்திற்கு ஏற்கனவே பின்பற்றி வந்த நடைமுறைப்படி வசூலிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கும்,
2. தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகம் மேற்கொண்டு வந்த வாகன நிறுத்தக் கட்டண வசூல் பணிக்காலம் 31.07.2017 அன்றுடன் முடிவடையவுள்ளதால் 92 இடங்களில் வாகன நிறுத்தக் கட்டணத்தினை இது நாள் வரை பின்பற்றி வந்த நடைமுறைப்படி தொடர்ந்து வசூலிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்திற்கு 01.08.2017 முதல் 31.10.2017 வரை கால நீட்டிப்பு செய்து அனுமதி வழங்குவதற்கும்.

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி– நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.07.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“இனம் 1 மற்றும் 2க்கு சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**பொ.சு.பூ.த.து.ந.க.எண்.எம்7/525/2017**

**தீர்மான எண்.501/2017** நாள்:28–07–2017

**பொது சுகாதாரம் பூச்சி தடுப்பு துறை – மண்டலம்–7 – பூச்சி தடுப்பு களப் பணிக்கு நிரந்தர பணியாளர் பற்றாக்குறை காரணமாக 220 தற்காலிக தினக்கூலி தொழிலாளர் வேண்டி தகுதி வாய்ந்த வெளி நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு பணியமர்த்தும் பொருட்டு ஒப்பம் கோரப்பட்டது – ஒப்பம் பெறப்பட்டது – குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர். வரதன் இன்ஃப்ராஸ்டரக்சர்ஸ் அவர்களுக்கு ஒப்பந்த பணியை வழங்க அனுமதி.**

| | | | |
|---|---|---|---|
| 1. | பணியின் விவரம் | : | பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரம் பூச்சி தடுப்பு துறை, வெளி நிறுவனங்கள் மூலம் கொசு ஒழிப்பு பணிக்கு தற்காலிக பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தும் பணி. |
| 2. | மன்றத்தின் தீர்மான எண். / நாள் | : | 122/2017 நாள்: 11.03.2017 |
| 3. | திட்ட குறியீட்டு எண். | : | பொருந்தாது. |
| 4. | பணியின் செலவீனம் (6 மாதத்திற்கு) | : | ரூ.1,77,85,666.80பை |
| 5. | எந்தெந்த பத்திரிகைகளில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டன/நாள் | : | பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர்–23, இதழ்–1154, நாள்: 13.04.2017<br>இந்தியன் எக்ஸ்பிரஸ் நாள்: 13.04.2017<br>தினத்தந்தி, நாள் :13.04.2017 |
| 6. | ஒப்பம் படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் | : | 05.05.2017 |
| 7. | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள். | : | 05.05.2017 |
| 8. | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளி லிருந்து ஒப்பம் பெறவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | : | ஆம் |

ஒப்ப நாளான 05.05.2017 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழிநுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1. திருவாளர். வரதன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ்
2. திருவாளர். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட்
3. திருவாளர். ஜே.கே. டிரான்ஸ்
4. திருவாளர். பிரேமா லாஜிஸ்டிக்ஸ்
5. திருவாளர். சிட்டி பெஸ்ட் கன்ட்ரோல் சர்வீசஸ்

தொழிநுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஐந்து ஒப்பந்ததாரர்களில் திருவாளர். வரதன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ், திருவாளர். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் இருவரும் சமர்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இருவரும் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதிவாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 22.05.2017 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் வருமாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. | ஒப்பந்த நிலை |
|---|---|---|---|---|
| 1. | திருவாளர். வரதன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் | 1,77,85,666.80 | 1,93,02,147.22 | L-I |
| 2. | திருவாளர். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் | 1,77,85,666.80 | 2,00,62,665.22 | L-II |

**பொ.சு.பூ.த.து.ந.க.எண்.எம்7/525/2017**

மேற்படி ஒப்பத்தில் ஒப்பந்ததாரர் திருவாளர். வரதன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் அவர்களிடம் 25.05.2017 அன்று நடைபெற்ற விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு பின் ரூ.1,91,89,815.22ற்கு விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்தார். விலை ஏற்புடையதாக இல்லாததால் மேலும் விலைக் குறைப்பு செய்ய வேண்டி 24.07.2017 அன்று ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆணையர் அவர்களின் ஆணைக்கிணங்க திருவாளர். வரதன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் நிறுவனம் இறுதி ஒப்பத் தொகையாக ரூ.1,91,01,771.22–ஐ அளித்துள்ளது. இவ்ஒப்ப விலையை ஏற்க ஒப்பம் கூர்ந்தாய்வு குழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

இவற்றை ஒப்பக் கூர்ந்தாய்வு குழுமம் கவனமாக ஆராய்ந்ததில் பொது சுகாதாரம், பூச்சி தடுப்பு பணியினை தொய்வின்றி மேற்கொள்ள வேண்டியிருப்பதை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். வரதன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் அவர்களுக்கு ரூ.1,91,01,771.22–ற்கு ஒப்ப தொகைக்கான பணியை வழங்க பரிந்துரை செய்தது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர். வரதன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் அவர்களுக்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998ன் படி பணியின் அலுவலக மதிப்பீட்டைவிட (+) 5.99% அதிகமாக ஒப்ப தொகை ரூ.1,91,01,771.22–ற்கு பணியினை வழங்க சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 27.07.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“பணியினை வழங்க சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**பொ.சு.பூ.த.து.ந.க.எண்.எம்7/526/2017**

**தீர்மான எண்.502/2017** நாள்:28–07–2017

**பொது சுகாதாரம் பூச்சி தடுப்பு துறை – மண்டலம்–11 – பூச்சி தடுப்பு களப் பணிக்கு நிரந்தர பணியாளர் பற்றாக்குறை காரணமாக 181 தற்காலிக தினக்கூலி தொழிலாளர் வேண்டி தகுதி வாய்ந்த வெளி நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு பணியமர்த்தும் பொருட்டு ஒப்பம் கோரப்பட்டது – ஒப்பம் பெறப்பட்டது – குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர். வரதன் இன்ஃப்ராஸ்டரக்சர்ஸ் அவர்களுக்கு ஒப்பந்த பணியை வழங்க அனுமதி.**

| | | | |
|---|---|---|---|
| 1. | பணியின் விவரம் | : | பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரம் பூச்சி தடுப்பு துறை, வெளி நிறுவனங்கள் மூலம் கொசு ஒழிப்பு பணிக்கு தற்காலிக பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தும் பணி. |
| 2. | மன்றத்தின் தீர்மான எண். / நாள் | : | 149/2017 நாள்: 20.03.2017 |
| 3. | திட்ட குறியீட்டு எண். | : | பொருந்தாது. |
| 4. | பணியின் செலவீனம் (6 மாதத்திற்கு) | : | ரூ.1,46,32,753.14பை |
| 5. | எந்தெந்த பத்திரிகைகளில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டன/நாள் | : | பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர்–23, இதழ்–1154, நாள்: 13.04.2017<br>இந்தியன் எக்ஸ்பிரஸ் நாள்: 13.04.2017<br>தினத்தந்தி, நாள் :13.04.2017 |
| 6. | ஒப்பம் படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் | : | 05.05.2017 |
| 7. | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள். | : | 05.05.2017 |
| 8. | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளி லிருந்து ஒப்பம் பெறவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | : | ஆம் |

ஒப்ப நாளான 05.05.2017 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ் கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்நிலையில் தொழிநுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1. திருவாளர். நெல்லை மோட்டார்ஸ்
2. திருவாளர். வரதன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ்
3. திருவாளர். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட்
4. திருவாளர். ஜெ.பி. எண்டர்பிரைசஸ்
5. திருவாளர். சிட்டி பெஸ்ட் கன்ட்ரோல் சர்வீசஸ்

தொழிநுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஐந்து ஒப்பந்ததாரர்களில் திருவாளர். வரதன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ், திருவாளர். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் இருவரும் சமர்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இருவரும் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதிவாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 22.05.2017 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் வருமாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. | ஒப்பந்த நிலை |
|---|---|---|---|---|
| 1. | திருவாளர். வரதன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் | 1,46,32,753.14 | 1,58,80,402.94 | L-I |
| 2. | திருவாளர். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் | 1,46,32,753.14 | 1,65,06,101.84 | L-II |

<u>பொ.சு.பூ.த.து.ந.க.எண்.எம்7/526/2017</u>

மேற்படி ஒப்பத்தில் ஒப்பந்ததாரர் திருவாளர். வரதன் இன்ஃராஸ்ட்ரக்சர்ஸ் அவர்களிடம் 25.05.2017 அன்று நடைபெற்ற விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு பின் ரூ.1,57,87,984.34ற்கு விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்தார். விலை ஏற்புடையதாக இல்லாததால் மேலும் விலைக் குறைப்பு செய்ய வேண்டி 24.07.2017 அன்று ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆணையர் அவர்களின் ஆணைக்கிணங்க திருவாளர். வரதன் இன்ஃராஸ்ட்ரக்சர்ஸ் நிறுவனம் இறுதி ஒப்பத் தொகையாக ரூ.1,57,15,548.14–ஐ அளித்துள்ளது. இவ்ஒப்ப விலையை ஏற்க ஒப்பம் கூர்ந்தாய்வு குழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

இவற்றை ஒப்பக் கூர்ந்தாய்வு குழுமம் கவனமாக ஆராய்ந்ததில் பொது சுகாதாரம், பூச்சி தடுப்பு பணியினை தொய்வின்றி மேற்கொள்ள வேண்டியிருப்பதை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். வரதன் இன்ஃராஸ்ட்ரக்சர்ஸ் அவர்களுக்கு ரூ.1,57,15,548.14–ற்கு ஒப்ப தொகைக்கான பணியை வழங்க பரிந்துரை செய்தது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர். வரதன் இன்ஃராஸ்ட்ரக்சர்ஸ் அவர்களுக்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998ன் படி பணியின் அலுவலக மதிப்பீட்டைவிட (+) 5.99% அதிகமாக ஒப்ப தொகை ரூ.1,57,15,548.14–ற்கு பணியினை வழங்க சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 27.07.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“பணியினை வழங்க சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

## L.C.C.No. LC1/2949/2012

**Resolution No.503/2017 Date:01-08-2017**

**Legal Cell – Establishment – 37 Standing Counsels appointed – 4 standing counsels was posted - one as Additional Government pleader and 3 as Government Advocate by the Government - relieving them from Greater Chennai Corporation Standing Counsel duties – Order issue.**

Council Resolution No. 601/16, Dated:10.09.2016 and Orders of the Commissioner dated 10.09.2016, 37 Standing Counsels were appointed for 1 year from 26.06.2014 to 25.06.2015, 26.06.2016 to 25.06.2017 and lastly extended for further one year from 10.09.2016 to 09.09.2017 by the appointment committee.

Further, as per the Orders of the Appointment Committee Resolution No. 39/16 dated 29.02.2016, 10 Standing Counsels was appointed for the period of one year due to administrative reason the Department could not issue order to them.

Now the following 4 Standing Counsels were appointed and assuming charges, one as Additional Government Pleader and 3 as Government Advocate by the Government. Hence, they have to be relieved from the duties of standing counsel, Greater Chennai Corporation.

| Sl.No. | Name of the Standing Counsels | Allotted Court | Promoted As |
|---|---|---|---|
| 1. | Th.P.V. Selvakumar | High Court | Addl.Government Pleader |
| 2. | Th. V.S. Ramesh | City Civil Court | Government Advocate |
| 3. | Th. P. Muthukumar | City Civil Court | Government Advocate |
| 4. | Th. O. Selvam | Labour Court | Government Advocate |

Therefore orders of the Special Officer-Council are requested to relieve the above Standing Counsels from Greater Chennai Corporation. Commissioner’s note date 31.07.2017 is read.

**“ The above Subject and note are already approved by the Special Officer-Council dated on 31.07.2017. Hence this subject approved.”**

******

**பொ.து.ந.க.எண்.ஈ4/21674/2017**

**தீர்மான எண்.504/2017** நாள்:01–08–2017

**மத்திய வட்டார அலுவலகம்– மண்டலம்–10 – திரு.எஸ். அசோக்சுதாகர் உதவி பொறியாளர் என்பவர்– அனுமதியின்றி கட்டிய கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காதது – குற்றசாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது – விளக்கம் பெறப்பட்டது – இறுதி ஆணை வழங்கப்பட்டது – மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.**

மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் 07.06.2017 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–10ல், கோட்டம்–142க்குட்பட்ட சைதாப்பேட்டை கிழக்கு ஜோன்ஸ் சாலை, கதவு எண்.34/66, பிளாக் எண்.37 என்ற முகவரியில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் பெருநகர சென்னை மாநகராட்சி வரைபடம் அனுமதியின்றி விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்தை குறித்து உயர்நீதிமன்றத்தில் 24.11.2016 அன்று விழிப்பு குழுமத்தின் மூலம் கள ஆய்வு செய்யப்பட்டு மேற்படி முகவரியில் உள்ள கட்டிடத்திற்கு PPA/10/2669/2013 & BBA/10/3355/2013 கட்டிட அனுமதி (Stilt + 2nd floor) பெற்று மேற்படி கட்டிடத்தின் உரிமையாளர் தரைதளம், ஐந்து மாடி மற்றும் 6வது மாடியில் நீச்சல் குளம் அமைக்க கட்டிடம் கட்டியுள்ளது அறியப்பட்டதாகவும், மேலும் மேற்படி கட்டிடம் சம்பந்தமாக பொதுமக்கள் தரப்பிலிருந்து புகார் மனுக்கள் பெறப்பட்ட பிறகும் மண்டலம்–10 பகுதி–30 கோட்டம்–142ல் உதவி பொறியாளர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துள்ளார். மேற்படி கட்டிடம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் வழக்கு (W.P.No.30066/2016 ) சம்பந்தமாக மண்டலம்–10 செயற்பொறியாளர், அவர்கள் அக்கட்டித்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பதில் மனு தாக்கல் செய்யப்பட்ட பிறகும், திரு.அசோக்சுதாகர், உதவி பொறியாளர், கோட்டம்–142 என்பவர் வெறும் மூன்று மற்றும் நான்காம் தளத்திற்கு மட்டுமே சீல்வைத்துள்ளதாக கண்டறியப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விதி மீறிய கட்டிடம் மீதான நடவடிக்கை சம்பந்தமாக திரு.எச்.முருகன் செயற்பொறியாளர் மண்டலம்–10 மற்றும் திரு.ரா.ரங்கநாதன், உதவி செயற்பொறியாளர், பகுதி–30 ஆகியோர்களிடம் விசாரணை செய்ததில், திரு.அசோக்சுதாகர், உதவி பொறியாளர், கோட்டம்–142 என்பவர் விதி மீறிய கட்டிடம் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை தன்னிச்சையாகவும், உயர் அதிகாரிகளிடம் எவ்வித ஆலோசனையும் பெறாமல் கட்டிட உரிமையாளருக்கு ஆதரவாக செயல்பட்டுள்ளார் என விசாரணையில் கடிதம் மூலம் தெரிவித்துள்ளதால்,

திரு.அசோக்சுதாகர், உதவி பொறியாளர், கோட்டம்–142 என்பவர் மேற்படி விதி மீறிய கட்டிடம் சம்பந்தமாக வழக்கு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் நிலையில் சட்டப்படியான நடவடிக்கை எடுக்காமல் கட்டிட உரிமையாளருக்கு சாதகமாக நடவடிக்கை எடுத்துள்ளதால், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதால் மண்டலம் –10ல் உதவி பொறியாளராக பணிபுரியும் திரு.அசோக்சுதாகர், என்பவருக்கு 1983 ஆண்டின் சென்னை மாநகராட்சி பணியாளர்கள் வகுப்பு 3 மற்றும் 4–ம் நிலை பணியாளர்கள் துணை விதி 9(1)ன் கீழ் குற்றசாட்டு குறிப்பாணை வழங்கி கீழ்கண்டவாறு விளக்கம் பெறப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திரு.எஸ்.அசோக்சுதாகர், உதவி பொறியாளர், மண்டலம்–10 அவர்களின் விளக்கம்**

**குற்றச்சாட்டு–1**

கோட்டம்–142க்குட்பட்ட சைதாப்பேட்டை கிழக்கு ஜோன்ஸ் சாலை கதவு எண்.34/66, பிளாக் எண்.37 என்ற முகவரியில் (Stilt + 2nd floor) வரை மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில் தரைதளம், ஐந்து மாடி மற்றும் 6வது மாடியில் நீச்சல் குளம் அமைக்க கட்டிடம் கட்டியதன் மீது நடவடிக்கை எடுக்காதது.

**தனியர் அளித்த விளக்கம்**

இந்த குற்றச்சாட்டில் குறிப்பிட்டுள்ள அனுமதிக்கு புறம்பாக கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது பெறப்பட்ட புகார் மனுக்கள் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு முதலில் 3, 4 தளங்களில் இருந்த குடியிருப்பு அகற்றப்பட்டது 5வது தளம் காலியாக இருந்த காரணத்தினால் இவற்றிற்கு 09.11.2016 அன்று சீல் வைக்கப்பட்டது. தரைத்தளம் , முதல் தளம் மற்றும் இரண்டாவது தளங்களில் இருந்த குடியிருப்புகளை அகற்றப்பட்டு 28.11.2016 அன்று கட்டிட முழுமைக்கும் சீல் வைக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

**பொ.து.ந.க.எண்.ஈ4/21674/2017**

**குற்றச்சாட்டு–2**

மேற்படி கட்டிடம் சம்பந்தமாக பொதுமக்கள் தரப்பிலிருந்து புகார் மனுக்கள் பெறப்பட்ட பிறகும் அதன் மீது தாங்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதது. தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கோட்டத்தினை ஆய்வு செய்யாதது.

**தனியர் அளித்த விளக்கம்**

பொதுமக்கள் புகார் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும், கோட்டத்தினை தவறாமல் ஆய்வு செய்யப்படுகின்றது என்று தெரிவித்துள்ளார்.

**குற்றச்சாட்டு–3**

தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கோட்டத்தினை ஆய்வு செய்யாதது.

**தனியர் அளித்த விளக்கம்**

தன்னுடைய கோட்டத்தை தவறாமல் தினமும் ஆய்வு செய்து வருகின்றேன் என்று தாழ்மையுடன் தெரிவித்துள்ளார்.

**குற்றச்சாட்டு–4**

இச்செயல் தங்களுக்கு பணியின்மீது உள்ள அக்கறையின்மையும் சென்னைமாநகராட்சி அவப்பெயர் ஏற்பட காரணமாக இருந்ததுள்ளது.

**தனியர் அளித்த விளக்கம்**

தான் தன்னுடைய பணியில் உரிய அக்கறையுடனும் சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படா வண்ணமும் பணிபுரிந்து வருகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

மேற்படி தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு இறுதி ஆணையாக "ஆறு மாத காலம் ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும், (So increment cut of six months without cumulative effect as punishment) அமலாக்கம் சம்பந்தமாக தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என எச்சரிக்கப்படுகிறார் (Strict warning to follow enforcement activity properly)" மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் 09.03.2017 நாளிட்ட செயல்முறை மூலம் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து தனியர் 60 தினங்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம் என்பதின் அடிப்படையில் 13.02.2017 அன்று பெற்று கொண்ட குறிப்பாணைக்கு, 13.04.2017 அன்று சிறப்பு அதிகாரி அவர்களுக்கு தனது மேல்முறையீட்டு மனுவினை பின்வருமாறு சமர்பித்துள்ளார்.

1. அனுமதியின்றி விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்தில் முதலில் 3, 4 தளங்களில் இருந்த குடியிருப்பு அகற்றப்பட்டு இவற்றிற்கும் காலியாக இருந்த 5வது தளத்திற்கும் 09.11.2016 அன்று சீல் வைக்கப்பட்டது. முதல் தளம் மற்றும் இரண்டாவது தளங்களில் இருந்த குடியிருப்புகளை அகற்றுவதில் கால தாமதம் ஏற்பட்ட காரணத்தினால் இவை முழுவதுமாக அகற்றப்பட்டு, 28.11.2016 அன்று கட்டிட முழுமைக்கும் சீல் வைக்கப்பட்டது. குடியிருப்புக்குள் உள்ள தளங்களில் குடியிருப்புகளை அகற்றாமல் சீல்வைக்க இயலாது என்பதாலும் கட்டிட உரிமையாளர்கள் குடியிருப்பை அகற்ற உரிய நடவடிக்கையை எடுக்காத காரணத்தினாலும் முதல் மற்றும் இரண்டாவது தளங்களில் தாமதாக 28.11.2016 அன்று சீல் வைக்கப்பட்டது. முதல் மற்றும் 2வது தளத்தில் இருந்த குடியிருப்புகளை அகற்ற கட்டிட உரிமையாளர் கால தாமதம் ஏற்படுத்தியதால் அவற்றிக்கு சீல் வைக்கும் பணியில் தாதமம் ஏற்பட்டது. மேலும் எந்த நிலையிலும் நான் கட்டிட உரிமையாளருக்கு ஆதரவாக செயல்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.
2. பொதுமக்கள் புகார் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் இப்பணி முடிவடைய தவிர்க்க முடியாத காரணத்தினால் சிறிது கால தாமதம் ஏற்பட்டது என்றும் தெரிவித்துளார். தன் கோட்ட பணியினை தவறாமல் ஆய்வு செய்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.
3. தன் பணிக்கு ஒதுக்கப்பட்ட கோட்டத்தினை தவறாமல் தினமும் ஆய்வு செய்கிறேன் என்றும் இப்பணியில் எவ்வித தொய்வும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.
4. தான் என்னுடைய பணியை அக்கறையுடன் மேற்கொள்கிறேன் என்றும் என்னால் சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படாவண்ணம் பணிபுரிந்து வருகிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், தான் சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்த நாள் முதல் இதுவரை எவ்வித தவறும் செய்யாமலும் மாநகராட்சி பணிக்கு எவ்வித குந்தமும் ஏற்படா வகையிலும் பணியாற்றி வருவதால், தனது விளக்கத்தினை ஏற்று மேற்குறிப்பிட்ட ஆணையை ரத்து செய்ய வேண்டி கேட்டுக்கொண்டுள்ளார்.

<u>பொ.து.ந.க.எண்.ஈ4/21674/2017</u>

இந்நேர்வில் மத்திய வட்டார துணை ஆணையர், தனது 09.03.2017 நாளிட்ட செயல்முறை ஆணையில் தனியருக்கு "ஆறு மாத காலம் ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும், (So increment cut of six months without cumulative effect as punishment) அமலாக்கம் சம்பந்தமாக தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என எச்சரிக்கப்படுகிறார் (Strict warning to follow enforcement activity properly)" என தண்டனை வழங்கியுள்ளார்கள். மேலும், 9(1) பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பிரிவின்படி சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களுக்கு மேல்முறையீடு செய்ய வழிவகை உள்ளது. அதன்படி, திரு.எஸ்.அசோக்சுதாகர், உதவி பொறியாளர், கோட்டம்–142, மண்டலம்–10 என்பவர் சென்னை மாநகராட்சி, வகுப்பு 3 மற்றும் 4ஆம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி, 1983ல் அளித்துள்ள மேல்முறையீட்டு மனுவின் மீது சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களின் பரிசீலனைக்காகவும், இறுதி ஆணைக்காவும் சமர்ப்பித்த ஆணையரது 22.07.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"There is no supporting proof to reduce the punishment. Therefore appeal is rejected** என சிறப்பு அதிகாரி– மன்றம் அவர்களால் ஆணை அளிக்கப்பட்டது".

******

**பொ.து.ந.க.எண்.ஈ2/26028/2016**

**தீர்மான எண்.505/2017** நாள்:01–08–2017

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–13, கோட்டம்–182 திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை–41 என்ற முகவரியில் உள்ள சொத்திற்கு 2/2002–2003 முதல் 1/2014–2015 வரையிலான காலத்திற்கு சொத்துவரி ரூ.22,013/– வசூல் செய்யாமல் இருந்தது– திரு.முகமது கவுஸ், வரி மதிப்பீட்டாளர், மண்டலம்–13 அவர்கள் மீது சென்னைமாநகராட்சி பணியாளர்கள் 3 மற்றும் 4 நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது – இறுதியாணை வழங்கியது –தனியரின் மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–13, வார்டு–182 திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை–41 என்ற முகவரியில் உள்ள சொத்திற்கு 2/2002–2003 முதல் 1/2014–2015 வரையிலான காலத்திற்கு சொத்துவரி ரூ.22,013/– வசூல் செய்யாமல் இருந்த குற்றத்திற்காக, திரு.முகமது கௌஸ், வரி மதிப்பீட்டாளர், மண்டலம்–13 அவர்கள் மீது சென்னை மாநகராட்சி பணியாளர்கள் 3 மற்றும் 4 நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1983 துணை விதி 9(2)ன் கீழ், குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு, தனியரின் விளக்கம் பெறப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், அனைத்து குற்றச்சாட்டுகளும் நிருபணமாவதாக விசாரணை அலுவலரின் அறிக்கை பெறப்பட்டு, இறுதி ஆணை வழங்கப்பட்டது.

தனியர் மீது ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், அதற்கு அவர் அளித்த விளக்கம், விசாரணை அலுவலரின் அறிக்கை மற்றும் விசாரணை அறிக்கையின் மீது தனியர் அளித்த மேல்விளக்கம் பின்வருமாறு:

**குற்றச்சாட்டு–1:**

மண்டலம்–13, கோட்டம்–182, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை–41 என்ற முகவரியில் உண்டான சொத்திற்கு 2/2002–2003 முதல் 1/2014–2015 வரையிலான காலத்திற்கு ரூ.22013/– அளவில்சொத்துவரி வசூல் செய்யாமல் விட்டு விட்டது. இந்த சொத்துவரியினை வசூல் செய்வதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் மெத்தனமாக இருந்துவிட்டது.

**குற்றச்சாட்டு–1ற்கான விளக்கம்:**

தான் கடந்த டிசம்பர் மாதம் 2012ஆம் ஆண்டு வருவாய் துறை மண்டலம்–10ல் இருந்து பணியிடமாற்றம் செய்யப்பட்டு மண்டலம்–13 வருவாய் துறையில் பணியமர்வு செய்யப்பட்டதாகவும், பொதுவாக சொத்துவரி வசூல் மேற்கொள்வது வரிவசூலிப்பாளர்களின் பணியாகும் ரூ.50,000/–க்கும் மேற்பட்ட சொத்துவரி நிலுவையில் உள்ள இனங்களில் தனி கவனம் செலுத்தி வரிவசூல் செய்ய வேண்டியது வரிமதிப்பீட்டாளர்கள் பணியாகும் எனவும், அதன்படி தனது கவனம் ரூ.50,000/–க்கும் மேற்பட்ட சொத்துவரி நிலுவையில் உள்ள இனங்களில் சொத்துவரி வசூல் செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டதால் தன்னால் இந்த சொத்துவரி வசூலில் கவனம் செலுத்த இயலவில்லை எனவும், எனினும் வரிவசூலிப்பாளரிடம் அனைத்து சொத்து உரிமையாளர்களிடம் தாக்கீதுகள் வழங்குமாறு அறிவுறுத்தி வந்துள்ளதாகவும், இந்த வீட்டின் உரிமையாளர் வேறு இடத்தில் குடியிருந்து வருவதாலும், இந்த வீடு எப்போதும் பூட்டியே உள்ள நிலையில் தன்னால் அப்பகுதியில் கள ஆய்வு செய்யும்போதும் சொத்து உரிமையாளரை சந்திக்க இயலவில்லை எனவும், மேலும் அருகில் உள்ள குடியிருப்போரிடம் விசாரித்த போதும் தன்னால் அவரின் முகவரியை அறிய இயலவில்லை எனவும், மேலும் தனக்கு நான்கு கோட்டங்களில் (176,180, 181 மற்றும் 182) உள்ள வருவாய் துறை சம்மந்தமான பணிகள், புதிதாக சொத்துவரி மதிப்பீடு செய்ய வேண்டி பெறப்படும் மனுக்கள் மீது நடவடிக்கைகளை மேற்கொண்டு சொத்துவரி மதிப்பீடு குழுமத்திற்கு அனுப்பி அதற்கான ஆணையினை பெற்றுத் தருதல், சொத்துவரி மதிப்பீடு தொடர்பாக பெறப்படும் மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல் சொத்துவரி தொடர்பான பதிவுகளை முறைப்படுத்தும் பொருட்டு, வருவாய் துறை தலைமையிடத்தில் இருந்து இடப்பட்ட பணிகளான Zero Collection, Zero Demand, Double bill, Advance Tax, Data given by CMWSSB, Exempted properties Assessment, Assessment of PPA & CMDA Applications Court Cases Central Government Properties State Government Properties பத்தாயிரம் சதுர அடிக்கும் அதிக பரப்பளவு கொண்ட கட்டிடங்களை மறுமதிப்பீடு செய்து வரிவிதிக்கும் பணி, ஆகியவற்றில் கவனம் செலுத்தி அப்பணிகளை முடிக்க வேண்டி இருந்ததாலும் மேற்கண்ட பணிகளை நான்கு கோட்டங்களில் மேற்கொள்ள வேண்டி இருந்ததாலும் குறிப்பிட்ட சொத்தின் உரிமையாளரிடம் முன்னதாகவே சொத்துவரி வசூல் செய்ய இயலவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

எனினும், நீண்ட காலமாக வரிசெலுத்தாமல் உள்ள இனங்களை கண்டறிந்து சொத்துவரி வசூல் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டதில் குறிப்பிட்ட சொத்தின் உரிமையாளரும் நீண்ட காலமாக சொத்துவரி செலுத்தவில்லை என்பதை அறிந்து அவ்வீட்டை அணுகியதில், அவ்வீடானது நீண்ட காலம் பூட்டியே இருந்தது அருகில் உள்ள குடியிருப்புகளில் விசாரித்த போதும் எவருக்கும் உரிமையாளரின் முகவரி தெரியவில்லை எனவும், தான் தமிழ்நாடு மின் வாரியத்தினை அணுகி மின் கட்டணம் தொடர்பான பதிவுகளை பார்த்தபோது உரிமையாளர் நீண்ட காலமாக குறைந்த பட்ச கட்டணத்தை செலுத்தி வருவதும் தெரிய வந்ததாகவும், தான் உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி இதுபோன்ற சொத்து உரிமையாளர்களுக்கு சொத்துவரியினை செலுத்த கோரி தாக்கீது தயாரித்து வழங்க மண்டல அளவில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது என தெரிவித்துள்ளார்.

<u>குற்றச்சாட்டு–1ன் மீது விசாரணை அலுவலரின் அறிக்கை:</u>

அந்தந்த கோட்டத்திற்குட்பட்ட சொத்து வரிமதிப்பீடு மற்றும் வரிவசூல் செய்யும் பணி வரிமதிப்பீட்டாளரின் பொறுப்பாகும். மேலும், ஒவ்வொரு அரையாண்டிலும் முதல் இரண்டு மாதங்கள் வரிவசூலர் தெருவாரியாக நிலுவையிலுள்ள வரியினை வசூல் செய்ய வாரண்ட் நோட்டீஸ் அளிப்பது போன்ற நடவடிக்கைகள் மேற்கொண்டு வசூல் செய்கிறாரா என்பதை மேற்பார்வையிடுவது வரிமதிப்பீட்டாளரின் கடமையாகும்.

மேலும், இவர் மண்டலம்–13ல் 2012 ஆம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருகிறார். மேற்படி சொத்துக்கு 2002–2003 முதல் சொத்துவரி வசூல் செய்யாமல் இருந்துள்ளதை ஆய்வு செய்திருக்க வேண்டியது இவரது பொறுப்பாகும். ஆனால் 2014 ஆம் ஆண்டு விழிப்பு பணி அலுவலர் விசாரணைக்கு பிறகே வரிவசூல் செய்யப்பட்டுள்ளது. எனவே, வரிவசூல் செய்ய எவ்வித நடவடிக்கை எடுக்காமல் மெத்தனமாக இருந்துள்ளது தெரிய வருகிறது. தனியரின் விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. **எனவே, குற்றச்சாட்டு –1 நிரூபணம் ஆகிறது.**

<u>குற்றச்சாட்டு–2:</u>

விழிப்புக்குழு விசாரணைக்கு பின்னரே 29.04.2014 அதன் கட்டிட உரிமையாளர்களுக்கு வாரண்ட் நோட்டீஸ் அளித்தது.

<u>குற்றச்சாட்டு–2ற்கான விளக்கம்:</u>

பொதுவாக சொத்துவரி வசூல் மேற்கொள்வது வரிவசூலிப்பாளர்களின் பணியாகும் எனவும், ரூ.50,000/–க்கும் மேற்பட்ட சொத்துவரி நிலுவையில் உள்ள இனங்களில் தனி கவனம் செலுத்தி வரிவசூல் செய்ய வேண்டியது வரிமதிப்பீட்டாளர்கள் பணியாகும் எனவும், நீண்ட காலமாக வரி செலுத்தாமல் உள்ள இனங்களை கண்டறிந்து சொத்துவரி வசூல் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டதில் குறிப்பிட்ட சொத்தின் உரிமையாளரும் நீண்ட காலமாக சொத்துவரி செலுத்தவில்லை என்பதை அறிந்து அவ்வீட்டை அணுகியதில் அவ்வீடானது நீண்ட காலம் பூட்டியே இருந்தது எனவும், அருகில் உள்ள குடியிருப்புகளில் விசாரித்த போது எவருக்கும் உரிமையாளரின் முகவரி தெரியவில்லை எனவும், தான் தமிழ்நாடு மின் வாரியத்தினை அணுகி மின் கட்டணம் தொடாபான பதிவுகளை பார்த்த போது உரிமையாளர் நீண்ட காலமாக குறைந்த பட்ச கட்டணத்தை செலுத்தி வருவதும் தெரியவந்தது எனவும், தான் உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி இதுபோன்ற சொத்து உரிமையாளருக்கு சொத்துவரியினை செலுத்த கோரி தாக்கீது தயாரித்து வழங்க நடவடிக்கை மேற்கொண்டிருந்த நிலையில், விழிப்பு பணி அலுவலர் குறிப்பிட்ட சொத்தின் நிலுவை குறித்து விசாரணை மேற்கொண்டார் எனவும், இந்நிலையில் இரு நிகழ்வுகளும் ஒருங்கிணைந்து விழிப்பு பணி அலுவலரின் விசாரணைக்கு பின்னரே தாக்கீது வழங்கியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது எனவும், மேற்கண்ட நடவடிக்கைகளை முன்பே தன்னால் எடுக்கப்பட்டிருந்ததால் இக்குற்றச்சாட்டினை மறுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

<u>குற்றச்சாட்டு–2ன் மீது விசாரணை அலுவலரின் அறிக்கை:</u>

தனியர் அளித்துள்ள விளக்கத்தில் தனக்கு குற்றச்சாட்டுக் குறிப்பாணை 27.01.2015 வழங்கியதற்கு முன்னரே அதாவது 05.07.2014 அன்று சொத்துவரி நிலுவைத்தொகையினை வசூல் செய்யப்பட்டுவிட்டதாக தெரிவித்துள்ளார். ஆனால் விழிப்பு பணி அலுவலரின் விசாரணை பிறகே வரி வசூல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது தெரிய வருகிறது. எனவே, தனியரின் விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. **குற்றச்சாட்டு –2 நிரூபணம் ஆகிறது.**

<u>குற்றச்சாட்டு–3:</u>

சென்னை மாநகராட்சி சொத்து வரி வசூலில் இழப்பு ஏற்பட காரணமாக இருந்தது.

**குற்றச்சாட்டு–3ற்கான விளக்கம்:**

குறிப்பிட்ட சொத்தின் உரிமையாளரும் நீண்ட காலமாக சொத்துவரி செலுத்தவில்லை என்பதை அறிந்து அவ்வீட்டை அணுகியதில் அவ்வீடானது நீண்ட காலம் பூட்டியே இருந்தது எனவும், அருகில் உள்ள குடியிருப்புகளில் விசாரித்த போது எவருக்கும் உரிமையாளரின் முகவரி தெரியவில்லை எனவும், தான் தமிழ்நாடு மின் வாரியத்தினை அணுகி மின் கட்டணம் தொடர்பான பதிவுகளை பார்த்தபோது உரிமையாளர் நீண்ட காலமாக குறைந்தபட்ச கட்டணத்தை செலுத்தி வருவதும் தெரியவந்தது எனவும், சொத்தின் உரிமையாளர் அவ்வீட்டிற்கே வருவதில்லை என்பதும் மின் கட்டணத்தை மட்டும் செலத்தி வருவது தெரிய வந்ததால் சொத்தின உரிமையாளரை சந்திக்க வாய்ப்பில்லை என்பதை அறிந்தும், குடியிருப்பின் கதவில் வாரண்ட் நோட்டீஸ் ஒட்டியதன் பின்னர் நீண்ட முயற்சிக்கு பிறகு அவர் செலுத்த வேண்டி முழு நிலுவைத் தொகையும் **05.07.2014** (Receipt No 2014-15 /N13/0248914) மற்றும் **06.07.2014** (Receipt No 2014-15 /N13/0252875) ஆகிய நாட்களில் வரி வசூல் செய்யப்பட்டது எனவும், எவ்விதமான இழப்பும் சென்னை மாநகராட்சிக்கு ஏற்படவில்லை என்பதால் இக்குற்றச்சாட்டையும் மறுக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

**குற்றச்சாட்டு–3ன் மீது விசாரணை அலுவலரின் அறிக்கை:**

தனியரின் விளக்கத்தில் நிலுவைத்தொகை அனைத்தையும் வசூல் செய்து விட்டதாக தெரிவித்திருந்தாலும், புகார் வந்த பிறகே வரிவசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வினத்தில் வரிவசூல் செய்யாமல் 12 ஆண்டுகளுக்கு பிறகே வசூல் செய்துள்ளதால் சென்னை மாநகராட்சிகு சொத்துவரி வசூலில் இழப்பாகவே கருதப்படுகிறது. எனவே, தனியரின் விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. **குற்றச்சாட்டு – 3 நிரூபணம் ஆகிறது.**

**குற்றச்சாட்டு–4:**

தங்களின் இச்செயல் பணியில் தங்கள் கவனக்குறைவினையும், மெத்தனமாக செயல்படுவதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

**குற்றச்சாட்டு–4ற்கான விளக்கம்:**

சென்னை மாநகராட்சியில் வருவாய் துறையில் நான்கு கோட்டங்களில் வரிமதிப்பீட்டாளராக பணிபுரிந்து வரும் தான் தனது அன்றாட பணிகளையும், அவ்வப்பொழுது உயர் அதிகாரிகள் உத்தரவிடும் பணிகளையும் எவ்வித சுணக்கமும் இல்லாமல் பணியாற்றி வருவதாகவும், மேலும் குறிப்பிட்ட சொத்தின் நிலுவை தொகையானது ரூ.50,000/–க்கும் குறைவாக இருந்ததால் தனது நேரடி கவனத்திற்கு வரவில்லை எனவும், நீண்ட கால நிலுவை தொகை என்பதன் அடிப்படையில் வீடு பூட்டி இருந்த நிலையில் சொத்தின் உரிமையாளரை கண்டறியவும் நிலுவைத் தொகை வசூலிக்கவும், தன்னால் இயன்ற அதிகபட்ச பணியினை செய்துள்ளேன் எனவும், நீண்ட முயற்சிக்கு பிறகு நிலுவை தொகையினை வசூலித்துள்ளேன் எனவும், மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டினை மறுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**குற்றச்சாட்டு–4ன் மீது விசாரணை அலுவலரின் அறிக்கை:**

தனியர் மண்டலம் – 13 ல் 2012 ஆம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருகிறார். மேலும், சொத்து வரிமதிப்பீடு மற்றும் வரிவசூல் செய்யும் பணி அந்தந்த கோட்டத்திற்குட்பட்ட வரிமதிப்பீட்டாளரின் பொறுப்பாகும். மேலும், ஒவ்வொரு அரையாண்டிலும் முதல் இரண்டு மாதங்கள் வரிவசூலர் தெருவாரியாக நிலுவையிலுள்ள வரியினை வசூல் செய்ய வாரண்ட் நோட்டீஸ் அளிப்பது போன்ற நடவடிக்கைகள் மேற்கொண்டு வசூல் செய்கிறாரா என்பதை மேற்பார்வையிடுவது வரிமதிப்பீட்டாளரின் கடமையாகும்.

2002–2003 முதல் நீண்டகால நிலுவையிலுள்ள குறிப்பிட்ட சொத்துவரியினை வசூல் செய்யாமல் இருந்துள்ளதை ஆய்வு செய்திருக்க வேண்டும். ஆனால் 2014 ஆம் ஆண்டு விழிப்பு பணி அலுவலர் விசாரணைக்கு பிறகே வரிவசூல் செய்யப்பட்டுள்ளது, தனியர் அளித்துள்ள விளக்கங்களில் இருந்து தெரியவருகிறது. எனவே, தனியர் தனது பணியில் கவனக்குறைவும், மெத்தனமாக செயல்பட்டுள்ளதும் ஊர்ஜிதமாகிறது. **எனவே, தனியரின் விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. குற்றச்சாட்டு–4 நிரூபணம் ஆகிறது.**

**குற்றச்சாட்டு–5:**

தாங்கள் சென்னை மாநகராட்சி பணிகள் (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 ன்படி விதி எண்.20 க்கு முற்றிலும் மாறுபாடாக செயல்பட்டது.

**பொ.து.ந.க.எண்.ஈ2/26028/2016**

**குற்றச்சாட்டு-5ற்கான விளக்கம்:**

தன்னுடைய 29 வருட பணிக்காலத்தில் எந்தவிதமான புகார் இன்றியும், சென்னை மாநகராட்சியின் நற்பெயருக்கு எவ்வித களங்கமும் இன்றி செயல்பட்டு வருகிறேன் எனவும், சென்னை மாநகராட்சி பணிகள் (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதி 1970, விதி எண்.20க்கு மாறாக செயல்படவில்லை எனவும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

தான் டிசம்பர் மாதம் 2012 ஆம் ஆண்டு முதல் மண்டலம்-13 வருவாய் துறைக்கு வரிமதிப்பீட்டாளராக பணியில் சேர்ந்ததாகவும், அன்று முதல் வரி வசூலருடன் இணைந்து முழு மூச்சாக வரிவசூல் செய்த மண்டலம்-13 நெம்பர்-1 என்ற நிலைக்கு வருவதற்காக மிகவும் கடினமாக உழைத்தேன் எனவும், தன்னுடைய பணிக்காலத்தில் எந்த விதமான புகாருக்கு இடம் அளிக்காமல் மேல் அதிகாரியின் உத்தரவினை ஏற்று, மிகவும் அவர்களை மதித்து, அவர்கள் அளித்த பணிகளை சிறப்பாக செய்து முடித்து உள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார்.

சொத்தின் உரிமையாளரை அணுகி வரித்தொகையை செலுத்துமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும், அதற்கு அவர் காலியாக பூட்டு போட்டு மூடி வைத்துள்ள வீட்டிற்கு ஏன் வீட்டுவரி செலுத்த வேண்டும் என்று தன்னிடம் கேள்வி எழுப்பினார் எனவும், பின்னர் அவருக்கு பலமுறை விளக்கம் அளித்து சொத்துவரி கண்டிப்பாக கட்ட வேண்டும் என்று தெரிவித்து வரி செலுத்துமாறு கேட்டுக் கொண்டு, பிறகு அவரிடம் அவர் தங்கியிருந்த இடத்திற்கு பலமுறை சென்றும் மற்றும் தொலைபேசியில் அவரை பலமுறை பேசிய பிறகே அவர் 05.07.2014 (Receipt No 2014-15 /N13/0252875) ஆகிய நாட்களில் தன்னால் வரிவசூல் செய்யப்பட்டது.

மேற்கூறிய விளக்கங்களை ஏற்றுக்கொண்டு குற்றச்சாட்டிலிருந்து தன்னை விடுவிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார். இனிவரும் காலங்களில் இதுபோன்று எதுவும் நிகழா வண்ணம் தன்னுடைய பணியை சிறப்பாக செய்து முடிப்பேன் என தெரிவித்துள்ளார்.

**குற்றச்சாட்டு-5ன் மீது விசாரணை அலுவலரின் அறிக்கை:**

குற்றச்சாட்டுகள் 1,2,3 மற்றும் 4 நிரூபணம் ஆனதால், **குற்றச்சாட்டு-5 நிரூபணம் ஆகிறது.**

**குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர் அளித்துள்ள மேல்விளக்கம்:**

நான் மண்டலம்-13 ல் வரி மதிப்பீட்டாளராக பணிபுரிந்து வருகிறேன். மண்டலம்-13 வார்டு - 182ல் திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை - 41 என்ற முகவரியில் உள்ள ஒரு கட்டிடத்திற்கு 2/2002-2003 முதல் 1/2014-2015 வரையிலான காலத்திற்கு ரூ.22,013/- வசூலிக்கப்படவில்லை என என் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டது. இவ்வினம் தொடர்பாக மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் மற்றும் உடைமைத்துறை) அவர்கள் விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டு, நேர்முக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணை அலுவலர் என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்து நிரூபணமாவதாக அறிக்கை அளித்துள்ளார். அவ்வறிக்கையின் மீது எனது மேல் விளக்கத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.

நான் கடந்த டிசம்பர் மாதம் 2012 ஆம் ஆண்டு தான் வருவாய் துறை பழைய மண்டலம்-10ல் இருந்து பணியிடமாற்றம் செய்யப்பபட்டு புதிய மண்டலம்-13 வருவாய் துறையில் பணியமர்வு செய்யப்பட்டேன். பொதுவாக சொத்துவரி வசூல் மேற்கொள்வது வரி வசூலிப்பாளர்களின் பணியாகும். ரூ.50,000/- க்கும் மேற்பட்ட சொத்துவரி நிலுவையில் உள்ள இனங்களில் தனி கவனம் செலுத்தி வரி வசூல் செய்ய வேண்டி அவ்வப்பொழுது உயர் அதிகாரிகளால் பணிக்கப்படும் போது அவர்களின் ஆணைக்கிணங்க வரிமதிப்பீட்டாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி எனது கவனம் ரூ.50,000/- க்கும் மேற்பட்ட சொத்துவரி நிலுவையில் உள்ள இனங்களில் சொத்துவரி வசூல் செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டதால் என்னால் இந்த சொத்துவரி வசூலில் கவனம் செலுத்த இயலவில்லை. எனினும் வரிவசூலிப்பாளரிடம் அனைத்து சொத்து உரிமையாளர்களிடம் தாக்கீதுகள் வழங்குமாறு அறிவுறுத்தி வந்துள்ளேன். எனக்கு நான்கு கோட்டங்களில் (176,180,181 மற்றும் 182) உள்ள வருவாய் துறை சம்மந்தமான பணிகள், புதிதாக சொத்துவரி மதிப்பீடு செய்ய வேண்டி பெறப்படும் மனுக்கள் மீது நடவடிக்கைகளை மேற்கொண்டு சொத்துவரி மதிப்பிடு குழுமத்திற்கு அனுப்பி அதற்கான ஆணையினை பெற்றுத் தருதல், சொத்துவரி மதிப்பீடு தொடர்பாக பெறப்படும் மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல் சொத்துவரி தொடர்பான பதிவுகளை முறைப்படுத்தும் பொருட்டு, வருவாய்துறை தலைமையிடம் மூலம் இருந்து இடப்பட்ட பணிகளான Zero Collection, Zero Demand, Double bill, Advance Tax, Data given by CMWSSB, Exempted properties Assessment, Assessment of PPA & CMDA Applications, Court cases, Central / State Government Properties, பத்தாயிரம் சதுர அடிக்கும் அதிக பரப்பளவு கொண்ட கட்டிடங்களை மறுமதிப்பீடு செய்து வரிவிதிக்கும் பணி, ஆகியவற்றில் கவனம் செலுத்தி அப்பணிகளை முடிக்க வேண்டி இருந்ததாலும், மேலும் சட்டமன்ற,

பாராளுமன்ற மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய்துறை மூலமாகவே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளில் வரிமதிப்பீட்டாளர்களின் பணியானது முக்கிய பங்கவகிக்கிறது. இயற்கை சீற்றத்தால் ஏற்படும் பேரிடர்களில் பாதிக்கப்படும் பொது மக்களுக்கு தேவையான உணவு பொட்டலங்களை தயாரித்து வழங்கும் பணிகளும் வருவாய்துறை மூலமாகவே மேற்கொள்ளப்படுவதால் அப்பணிகளிலும் வரிமதிப்பீட்டாளர்களின் பணியானது முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் பொருட்டு கடுமையான பணி பளுவின் காரணமாக குறிப்பிட்ட சொத்தின் உரிமையாளரிடம் முன்னதாகவே வரி வசூலிப்பவர் சொத்துவரி வசூல் செய்வதை உறுதி செய்திட இயலவில்லை.

எனினும், நீண்ட காலமாக வரிசெலுத்தாமல் உள்ள இனங்களை கண்டறிந்து சொத்துவரி வசூல் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டதில் குறிப்பிட்ட சொத்தின் உரிமையாளரும் நீண்ட காலமாக சொத்துவரி செலுத்தவில்லை என்பதை அறிந்து அவ்வீட்டை அணுகியதில், அவ்வீடானது நீண்ட காலம் பூட்டியே இருந்தது அருகில் உள்ள குடியிருப்புகளில் விசாரித்தபோதும் எவருக்கும் உரிமையாளரின் முகவரி தெரியவில்லை எனவும், தான் தமிழ்நாடு மின் வாரியத்தினை அணுகி மின் கட்டணம் தொடர்பான பதிவுகளை பார்த்தபோது உரிமையாளர் நீண்ட காலமாக குறைந்த பட்ச கட்டணத்தை செலுத்தி வருவதும் தெரிய வந்தது, நான் உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி இதுபோன்ற சொத்து உரிமையார்களுக்கு சொத்துவரியினை செலுத்த கோரி தாக்கீது தயாரித்து வழங்க மண்டல அளவில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது.

விசாரணை அலுவலர் தனது அறிக்கையில் விழிப்புக்குழும ஆய்வுக்கு பிறகு தான் சொத்துவரி நிலுவை வசூலிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். ஆனால் குறிப்பிட்ட சொத்தானது நீண்ட காலமாக பூட்டியிருந்த நிலையில், நான் பெரு முயற்சி எடுத்து மின்சார வாரியம் மூலம் சொத்து உரிமையாளரின் அலைபேசி எண்ணை கண்டறிந்து, அதன் மூலம் அவரது முகவரியறிந்து, வரி நிலுவையினை வசூலித்ததை சீர்தூக்கி பார்க்கவில்லை. இந்த ஒரு இனம் மட்டும் வசூலிக்கப்படாமல் நிலுவையில் இருந்ததால் என் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு, நிரூபணமாவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது மிகுந்த வேதனை அளிப்பதாக உளளது. எனவே, ஐயா அவர்கள் என் மீது கருணை கூர்ந்து என் மீதான குற்றச்சாட்டுக்களில் இருந்து என்னை விடுவிக்குமாறு வேண்டியுள்ளார்.

நான் உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி இதுபோன்ற சொத்து உரிமையாளருக்கு சொத்துவரியினை செலுத்த கோரி தாக்கீது தயாரித்து வழங்க நடவடிக்கை மேற்கொண்டிருந்த நிலையில் விழிப்பு பணி அலுவலர் குறிப்பிட்ட சொத்தின் நிலுவை குறித்து விசாரணை மேற்கொண்டார். இந்நிலையில் இரு நிகழ்வுகளும் ஒருங்கிணைந்து விழிப்பு பணி அலுவலரின் விசாணைக்கு பின்னரே தாக்கீது வழங்கியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. மேற்கொண்ட நடவடிக்கைகளை என்னால் முன்பே எடுக்கப்பட்டு சொத்து வரியும் **05.07.2014** (Receipt No.2014-15/ N13/0248914) மற்றும் **06.07.2014** (Receipt No.2014-15/ N13/0252875) ஆகிய நாட்களில் முழுமையாக வசூலிக்கப்பட்டு விட்டதால், என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை நீக்கறவு செய்யுமாறு பணிந்து வேண்டியுள்ளார்.

ஐயா, என்னுடைய பணிக்காலத்தில் எந்த விதமான புகாருக்கு இடம் அளிக்காமல் இதுநாள்வரை எந்தவிதமான காரணம் கேட்கும் குறிப்பாணை, அல்லது குற்றச்சாட்டு குறிப்பாணைகளோ, எந்த ஒரு காரணத்திற்காக வழங்கப்படவில்லை எனவும் நான் கடந்த **1985** முதல் வரிவசூல் பதவியில் தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை வரிவசூலராகவும். அதன் பின்னர் உரிமம் ஆய்வாளர், மற்றும் தற்போது வரிமதிப்பீட்டாளராக வருவாய்துறையில் மட்டுமே சிறப்பான முறையில் சுமார் **30** ஆண்டுகளுக்கும் மேலாக எந்த விதமான ஒழுங்கு நடவடிக்கைகளுக்கும் உட்படாமல், மேல் அதிகாரிகளின் உத்தரவினை மிகவும் மதித்து, அவர்கள் உத்தரவிட்ட பணிகளை சிறப்பாக செய்து முடித்து உள்ளேன். மேற்சொன்ன சொத்திற்கான சொத்து வரி முழுமையாக வசூலிக்கப்படாமல் விட்டதால், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு எவ்விதமான இழப்பும் ஏற்படவில்லை என்பதை சீர்தூக்கி பார்த்து கருணையுடன் பரிசீலித்து என் மீதான குற்றச்சாட்டுக்களை கைவிடுமாறு மிகவும் பணிவுடன் வேண்டியுள்ளார்.

மேற்காணும், திரு.முகமது கௌஸ், வரி மதிப்பீட்டாளர், மண்டலம்–**13** அவர்கள் மீது ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், அதற்கு குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர் அளித்துள்ள விளக்கம், விசாரணை அலுவலரின் அறிக்கை, விசாரணை அறிக்கையின் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர் அளித்துள்ள கூடுதல் விளக்கம் மற்றும் ஆவணங்கள் ஆகியவை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில், தனியர் தனது பொறுப்பிலிருந்தும், கடமையிலிருந்து தவறியதால், தனியர் மீது ஏற்படுத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகிறது. நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்கு

தண்டனையாக **தனியரின் ஊதிய உயர்வினை இரண்டு ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும் (Stoppage of increment for two years without cumulative effect)** மற்றும் வசூல் செய்யாமல் இருந்த சொத்துவரி ரூ.22013/–ல் மூன்றில் ஒரு பங்குத் தொகையான ரூ.7338/–ஐ தனியரின் ஊதியத்திலிருந்து மாதம் ரூ.1000/– வீதம் 7 மாத தவணைகளிலும் மற்றும் 8வது மாத தவணையில் ரூ.338/– வீதமும் பிடித்தம் செய்யவும் இறுதியாணை வழங்கப்பட்டது.

தற்போது, திரு.முகமது கவுஸ், வரி மதிப்பீட்டாளர், மண்டலம்–13, அவர்கள் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை எதிர்த்து சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களுக்கு அளித்துள்ள மேல்முறையீட்டு மனுவில், வருவாய் துறை மண்டலம்–13 ல், டிசம்பர் 2012 ல் வரி மதிப்பீட்டாளராக பணி அமர்த்தப்பட்டேன். வரி மதிப்பீட்டாளராக பணி புதிய கட்டிடங்களுக்கு வரி மதிப்பீடு செய்வதும், கூடுதலான கட்டிய கட்டிடங்களுக்கு வரி மதிப்பீடு செய்வதும் மற்றும் வரிவதிப்பு இல்லாமல் விடுபட்ட கட்டிடங்களை ஆய்வு செய்து வரி விதிப்பதாகும். வரி வசூல் செய்வதற்கென்று ஒவ்வொரு வார்டுக்கும் வரி வசூலர் பணியமர்த்தப்பட்டு அவர் மூலம் வரி வசூல் செய்யப்படுகிறது. வரிமதிப்பீட்டாளர் மேல் அதிகாரி அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட இடங்களில் மட்டும் வரி வசூல் பணியை கூடுதலாக பணியை செய்து வருகிறார். மேலும், வரி வசூல் பணியில் ரூ.50,000/– க்கு மேற்பட்ட நிலுவை தொகை மட்டுமே வரி மதிப்பீட்டாளரால் வசூல் செய்யும் நிலைமை உள்ளது. ஏனெனில் ரூ.50,000/– மேல் உள்ள இனங்களின் நிலுவை தொகை குறித்த விவரம் மட்டுமே உயர் அதிகாரி அவர்களால் அளிக்கப்படுகிறது. வரி வசூல் செய்த விவரம் தினமும் அளிக்க வேண்டிய நிலை உள்ளது. ஏனெனில் சென்னை மாநகராட்சிக்கு தினமும் வருவாய் அதிகம் தேவைப்படும் நிலையில் இது போன்று நிகழ்வுகளில் வரி மதிப்பீட்டாளர் ஈடுபடுத்தப்படுகிறார்கள். சென்னை மாநகராட்சியில் உள்ள எல்லா வார்டுகளிலும் வரி வசூலர் மூலம் வரி வசூல் செய்யும் நிலைதான் உள்ளது.

மேலும், இரண்டாம் அறையாண்டு 2/2002–03 ல் இருந்து கடந்த 10 வருடங்களாக நிலுவையாக உள்ள தொகையினை முன்னர் பணியாற்றிய வரி வசூலரும், வரி மதிப்பீட்டாளரும் எவரும் வசூல் செய்யாமல் டிசம்பர் 2012 வரை நிலுவையாக உள்ளது. நான் டிசம்பர் 2012 ல் மண்டலம்–13 ல் பணி அமர்த்தப்பட்டு பிறகு நிலுவை தொகை குறித்த விவரம் எதுவும் தெரியாத நிலையில் என்னால் வரிவசூலரிடமும் சொல்லி வசூல் செய்ய இயலவில்லை. வரி வசூலரும் இதுகுறித்து விவரம் ஏதும் எனக்கு அளிக்கவில்லை.

எல்லா வார்டுகளிலும் வரி வசூல் செய்யும் பணி வார்டு வரிவசூலர் பணியாகும். பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வரவேண்டிய அதிக தொகையுள்ள வரி நிலுவையில் இருந்தால் வருவாய் இழப்பு ஏற்படும் என்ற நிலையில் வரிவசூல் பணியை பிரத்யோகமாக மண்டல சுகாதார ஆய்வாளர், உதவி பொறியாளர், உதவி செயற் பொறியாளர், துப்புரவு ஆய்வாளர், செயற் பொறியாளர் போன்ற அதிகாரிகளின் துணையுடன் வரிவசூல் செய்யப்படுகிறது. எல்லா வார்டுகளிலும் ரூ.50,000/– மேல் நிலுவையில் உள்ள இனங்களின் பட்டியல் வரிமதிப்பீட்டாளரிடம் சம்மந்தப்பட்ட உதவி வருவாய் அலுவலர், மண்டல அலுவலரால் மற்றும் வட்டார துணை ஆணையர் அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு வரி மதிப்பீட்டாளரால் வசூல் செய்யப்படுகிறது. இதில் வரிமதிப்பீட்டாளருக்கு உள்ள முக்கிய பணி வரி மதிப்பீடு செய்வதுதான்.

விசாரணை அலுவலர் வரி வசூல் பணி முழுமையாக வரி மதிப்பீட்டாளரின் பணி என்றும் வரி வசூல் பணிக்கு வேறு ஒருவர் உள்ளார் என்பதையும் கவனத்திற்கு கொள்ளவில்லை, ஆகவே நிலுவை தொகையை காலதாமதமாக வசூல் செய்வதாக குறிப்பிட்டுள்ளார் எனவும், மேலும் மேற்குறிப்பிட்ட நிலுவை தொகை ரூ.22,013/–யினை வசூலித்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது எனவும், இந்நிலையில் வரி வசூலித்த தொகையை மீண்டும் பிடித்தம் செய்வதும் மற்றும் இரண்டு ஆண்டு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்வதும், இரண்டு தண்டனை வழங்குவது நான் செய்து வந்து பணிக்கு களங்கம் விளைவிப்பதாகும் எனவும், 10 ஆண்டுகாலம் வரி வசூல் செய்யாமல் நிலுவையில் இருந்த சொத்துவரி என்னுடைய பணிக்காலத்தில் வரி வசூல் செய்யப்பட்டுள்ளது எனவும், என்னுடைய பணிக்காலத்தில் எந்தவித புகாருக்கு இடம் அளிக்காமல் பணிபுரிந்து வந்துள்ளேன் எனவும், வரி மதிப்பீட்டாளரின் பணி வரி வசூல் செய்வது எனவும் அவர்தான் வரி வசூல் செய்பவர் எனவும் விசாரணை அலுவலர் கவனத்தில் கொண்டு அறிக்கை அளித்துள்ளார் எனவும், ஆனால் வரி வசூல் செய்வதற்கு என்று தனியாக வரி வசூலர் என்ற பதவி உள்ளது எனவும், அவர்தான் சொத்து வரி நிலுவை தொகை விவரம் அலுவலகத்தில் பெற்று வரி வசூல் செய்வார் எனவும் என் மீது எந்த தவறும் இல்லாத நிலையில் என் மீது விதிக்கப்பட்ட இரண்டு தண்டனையை ரத்து செய்யுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு இந்த மேல்முறையீடு மனுவை சமர்ப்பிக்கின்றேன் என்றும், இதனால் எனக்கு மிகுந்த மன உளைச்சலும், மன வேதனையும் அதிகமாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.

**பொ.து.ந.க.எண்.ஈ2/26028/2016**

குற்றஞ்சாட்டப்பட்ட தனியர் வகுப்பு–3ஐ சார்ந்த பணியாளர் என்பதால், இவரது மேல்முறையீட்டு மனுவினை சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களுக்கு அனுப்பப்படவேண்டும்.

ஆகவே, திரு.முகமது கவுஸ், வரி மதிப்பீட்டாளர், மண்டலம்–13 அவர்கள் சமர்ப்பித்துள்ள மேல்முறையீட்டு மனுவின் மீது உரிய பரிசீலனை செய்யும்பொருட்டு, சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களுக்கு சமர்ப்பித்த ஆணையரது 22.07.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"There is no supporting proof to reduce the punishment. Therefore appeal is rejected** என சிறப்பு அதிகாரி– மன்றம் அவர்களால் ஆணை அளிக்கப்பட்டது".

******

**<u>ம.சே.து.ந.க.எண்.எப்5/1888/2017&</u>**
**<u>பொ.து.ந.க.எண்.இ7/26183/2017</u>**

**தீர்மான எண்.506/2017** நாள்:02–08–2017

**<u>பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – மருத்துவ சேவைகள் துறை – திருமதி. G. லட்சுமி, பணிச்செவிலியர், அடையார் மருத்துவ மண்டலம் அவர்கள் 07.08.2017 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையின் கீழ் இயங்கும் அடையார் மருத்துவ மண்டலம், அடையார் மகப்பேறு மருத்துவமனையில் (அறுவை அரங்க அரங்கில்) பணிச்செவிலியராக பணிபுரியும் திருமதி.G.லட்சுமி, அவர்கள் 03.04.1992 அன்று பணிச்செவிலியராக பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருவதாகவும், தனது உடல்நிலை மற்றும் குடும்ப சூழ்நிலை காரணத்தால் தன்னால் தொடர்ந்து பணியாற்ற இயலவில்லை என்று தெரிவித்து, தனக்கு தன் விருப்ப ஓய்வு வழங்க 90 நாட்கள் முன்னறிவிப்புடன் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் 10.05.2017 அன்று மனு அளித்துள்ளார்.

திருமதி. G. லட்சுமி அவர்கள் 03.04.1992 அன்று பணிச்செவிலியராக பணியில் சேர்ந்து தொடர்ந்து பணியாற்றி வருகிறார். தனியருக்கு இப்பதவியில் பணிவரன் முறைப்படுத்தி, தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. தனியரது தாய்மொழி தமிழ் ஆகும்.

22.06.2017 நாளிட்ட மண்டல மருத்துவ அலுவலர், அடையார் மருத்துவ மண்டலம்–13 அவர்களின் கடிதத்தின்படி தனியர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய முன்பண நிலுவை தொகை, தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றவியல் நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

28.06.2017 நாளிட்ட பெருநகர சென்னை மாநகராட்சி கூட்டுறவு அலுவலக சங்கத்தின் கடிதத்தில், தனியர் இச்சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

06.06.2017 நாளிட்ட விழிப்பு அலுவலர் அவர்களின் கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

17.07.2017 நாளிட்ட இயக்குநர் ஊழல் தடுப்பு இயக்கம் அவர்களின் கடிதத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

11.07.2017 நாளிட்ட இணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் கடிதத்தில், தனியரை 07.08.2017 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல முன் தணிக்கைச் சான்று பெறப்பட்டுள்ளது.

தனியர் தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாள் அன்று 54 வயது பூர்த்தி செய்துள்ளார். மேலும் 25 ஆண்டுகள் 04 மாதங்கள் 05 நாட்கள் தகுதியுள்ள பணிக்காலம் பூர்த்தி செய்துள்ளார். தனியர் சம்பளமில்லா விடுப்பு ஏதும் எடுக்கவில்லை. விதிகளின்படி தனியர் வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 31.05.2021 ஆகும்.

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை நாள்.07.10.1991ன்படியும், அரசாணை எண்.376, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை, நாள்.11.12.1995ன்படியும், தனியர் 25 ஆண்டுகள் 04 மாதங்கள் 05 நாட்கள் பணிநிறைவு செய்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் வழங்கியுள்ளதாலும் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற்று தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

**ம.சே.து.ந.க.எண்.எப்5/1888/2017&**
**பொ.து.ந.க.எண்.இ7/26183/2017**

ஆகவே, திருமதி. G. லட்சுமி, பணிச்செவிலியர், மருத்துவ சேவைகள் துறை அவர்கள் தன் விருப்ப ஓய்வுக்கான 90 நாட்கள் முன்னறிவிப்புடன் 10.05.2017 நாளிட்ட சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் விண்ணப்பித்துள்ளபடி, தனியர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் இதனை தனியரது ஓய்வூதிய பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தனியரை 07.08.2017 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 02.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டமைக்கு சிறப்பு அதிகாரி– மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

பொ.து.ந.க.எண்.இ8/11506/2017

தீர்மான எண்.507/2017 நாள்:02–08–2017

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சியில் சுமார் 15ஆண்டுக்கு மேல் பணிபுரியும் – சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை – 2 மற்றும் 3ல் உள்ள பணியாளர்களுக்கு பதவி உயர்வு அளிக்கும் வகையில் – சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை – 1ல் 7 பணியிடங்கள் தோற்றுவிப்பது குறித்து – அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் சுருக்கெழுத்து தட்டச்சர்கள் ஆணையர் அவர்களிடம் கோரிக்கை மனுவாக 01.06.2017 அன்று அளித்த கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியில் ஆணையர் மற்றும் சிறப்பு அதிகாரி–மன்றம் / மாண்புமிகு மேயர் ஆகிய 2 பதவிகளுக்கு மட்டும் நேர்முக உதவியாளராக சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–1ம், தலைமையிடத்தில் உள்ள துறைத் தலைவர்களுக்கு சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–2ம், மற்றும் மண்டல அலுவலர்களுக்கு சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3, நிலையிலும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். மேற்கண்ட இரண்டு பதவிகளுக்கு மட்டும் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–1 ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளதால் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–2, மற்றும் நிலை–3 உள்ளவர்களுக்கு சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–1ல் பதவி உயர்வு கிடைக்க வழி வகையில்லாமல் காணப்படுவதாகவும், தெரிவித்துள்ளனர்.

மேலும், பெருநகர மாநகராட்சி எல்லை விரிவுப்படுத்தப்பட்ட நிலையில் 5 மண்டலங்களுக்கு தலா ஒரு வட்டார துணை ஆணையர் வீதம் 15 மண்டலங்களுக்கு 3 வட்டார துணை ஆணையர்கள் (வடக்கு, மத்தியம், தெற்கு) இந்திய ஆட்சி பணி நிலையில் உள்ளதாகவும் மற்றும் தலைமையிடத்தில் 4 துணை ஆணையர்கள் (துணை ஆணையர்கள் (கல்வி) (பணிகள்) (வ & நி) (சுகாதாரம்) ஆக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மொத்தம் 7 இந்திய ஆட்சி பணி அலுவலர்கள் (ஆணையர் தவிர்த்து) நிலையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை –2 மற்றும் நிலை–3 ல் உள்ளவர்களுக்கு சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–1, பதவி உயர்வில் செல்ல வழிவகை இல்லாத நிலையில் சிறப்பு நிகழ்வாக கருதி பெருநகர சென்னை மாநகராட்சியில் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை –1 பதவியில் 2 பணியிடங்களின் எண்ணிக்கையை 9 (2+7) பணியிடங்களாக உயர்த்தி சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை –1ல் பதவி உயர்வு வழங்க வகை செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்.10, நாள்:08.01.1999ன்படி, சென்னை மாநகராட்சிக்கு சுருக்கெழுத்து தட்டச்சர்கள் உயர்நிலைப் பதவிகள் வகைப்படுத்தி கீழ்கண்டவாறு ஒதுக்கப்பட்டது.

அ) **சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை – 1**

1. சென்னை மாநகராட்சி, ஆணையாளர் – 1

ஆ) **சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை –2**

| | | | |
|---|---|---|---|
| 1. | துணை ஆணையாளர்கள் | – | 5 |
| 2. | தலைமைப்பொறியாளர்கள் | – | 2 |
| 3. | நிதி ஆலோசகர் | – | 1 |
| 4. | கண்காணிப்பு பொறியாளர்கள் | – | 7 |
| 5. | நகரப் பொறியாளர்கள் | – | 1 |
| 6. | சுகாதார அலுவலர் | – | 1 |
| 7. | மாநகராட்சிதலைமைகணக்கர் | – | 1 |
| 8. | மக்கள் தொகை திட்ட ஒருங்கிணைப்பாளர் | – | 1 |
| | மொத்தம் | | 19 |

**இ)** மீதமுள்ள 26 சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகள் நிலை 3 தொடர்ந்து இருந்து வருகின்றது எனவும், ஆணையாளரின் செயற்குறிப்பினை அரசு விரிவாக ஆராய்ந்து, மேயர் அலுவலகத்தில் பணிபுரிந்துக் கொண்டிருக்கும் சுருக்கெழுத்துத் தட்டச்சரின் பதவியை நிலை–1 பதவியாக உயர்நிலைப்படுத்தி அவ்விடத்தில், மாநகராட்சியில் பணிபுரிந்துக் கொண்டிருக்கும் நிலை–2 சுருக்கெழுத்துத் தட்டச்சர்களில் பணிமூப்பு அடிப்படையில் ஒரு சுருக்கெழுத்துத் தட்டச்சரை பதவி

உயர்வளித்து நியமிக்கவும், துணை மேயர் அலுவலகத்தில் பணிபுரியும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவியையும் மற்றும் வருவாய் அலுவலருக்கான சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவியையும் நிலை–2 ஆக உயர்நிலைப்படுத்தி அவ்விடங்களில் மாநகராட்சியில் பணிபுரிந்துக்கொண்டிருக்கும் நிலை–3 சுருக்கெழுத்துத் தட்டச்சர்களில் பணிமூப்பு அடிப்படையில் 2 சுருக்கெழுத்துத் தட்டச்சரை பதவி உயர்வளித்து நியமிக்கவும் சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு அனுமதித்து, அரசாணை வழங்கப்பட்டது.

மேற்கண்ட அரசாணையில் அனுமதித்து வழங்கப்பட்ட சுருக்கெழுத்து தட்டச்சர் பதவியினை மாநகராட்சியின் மொத்த பணியாளர் அமைப்பிலிருந்து அரசாணை (ப) எண்.15, ந.நி.(ம)கு.வ.துறை, நாள்: 10.01.2003ன்படி சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை –2ல் 1 பதவியை மட்டும் நீக்கம் செய்து ஆணை வெளியிடப்பட்ட பின்பு கீழ்கண்டவாறு பணியிடங்கள் அமைகிறது.

| வ. எண் | சுருக்கெழுத்து தட்டச்சர் பதவியின் வகை | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1. | நிலை–1 | 2 |
| 2. | நிலை–2 | 19 |
| 3. | நிலை–3 | 24 |
| மொத்தம் | | 45 |

அதன் பின்பு பெருநகர சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட நிலையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந3) துறை, அரசாணை (நிலை) எண்.95, நாள்:14.10.2012ன்படி, கீழ்கண்டவாறு சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடங்கள் கூடுதலாக ஓதுக்கீடு செய்து ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- 15 மண்டலங்கள் = 15 பணியிடங்கள்
- வட்டார அலுவலகம் = 12 பணியிடங்கள்
- தலைமையிடம் = 35 பணியிடங்கள்

மொத்தம் ஓதுக்கப்பட்ட பணியிடம் 62 விவரம் பின்வருமாறு:

சுருக்கெழுத்து தட்டச்சர்களின் பணியிடங்கள் அரசாணை (நிலை) எண்.10, நாள்:08.11.1999ன்படி, கீழ்கண்ட வகையில் அமைகிறது.

| வ. எண் | சுருக்கெழுத்து தட்டச்சர் பதவியின் வகை | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1. | நிலை–1 | 2 |
| 2. | நிலை–2 | 19 |
| 3. | நிலை–3 | 41 |
| மொத்தம் | | 62 |

தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–1ல் உள்ள 2 பணியிடங்கள் மட்டும் ஒப்பளிக்கப்பட்டுள்ள நிலையில் சுமார் 15ஆண்டுக்கு மேல் பதவி உயர்வு இல்லாமல் பணிபுரிந்து வரும் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–2 மற்றும் நிலை–3ல் உள்ள பணியாளர்களின் நிலையை கருத்தில் கொண்டு சிறப்பு நிகழ்வாக கருதி சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–1ல் உள்ள 2 பணியிடங்களின் எண்ணிக்கையை 9 பணியிடங்களாக (2+7) ஆக உயர்த்துவது அதாவது பெருநகர சென்னை மாநகராட்சியில் (ஆணையர் தவிர்த்து) 4 துணை ஆணையர்கள் (கல்வி) (பணிகள்) (வ & நி) (சுகாதாரம்) மற்றும் 3 வட்டார துணை ஆணையர்கள் (வடக்கு, மத்தியம், தெற்கு) ஆக மொத்தம் 7 இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களுக்கு, சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–1ல் உள்ள பணியாளர்களை நியமிப்பதற்கு சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–1ல் 7 பணியிடங்கள் கூடுதலாக தோற்றுவிப்பது குறித்து அரசுக்கு செய்குறிப்பு அனுப்ப,

1. சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–2 மற்றும் 3ல் சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரியும் பணியாளர்களுக்கு சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–1ல் பதவி உயர்வு கிடைக்காத நிலையில் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–1ல் உள்ள 2 பணியிடங்களுடன் 7 பணியிடங்கள் கூடுதலாக தோற்றுவிப்பது,

<u>பொ.து.ந.க.எண்.இ8/11506/2017</u>

2. ஏற்கனவே, சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–1ல் உள்ள 2 பணியிடங்களுடன் கூடுதலாக 7 பணியிடங்கள் தோற்றுவிப்பதன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஏற்படும் நிதி விளைவினை (Financial Impact) சமாளிக்க சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 நிலையில் உள்ள பதவியில் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட 41 எண்ணிக்கையில் 7 பணியிடங்களை அரசுக்கு சரணடைப்பு செய்வதன் மூலம் நிதி விளைவினை எதிர்கொள்ளலாம் என்ற விவரத்தை அரக்கு தெரிவிக்கவும்,

3. சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3ல் ஒப்பளிக்கப்பட்ட 41 பணியிடங்களில் 7 பணியிடங்களை சரணடைப்பு செய்வதனால் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–1 மற்றும் நிலை–3 ஆகிய இரண்டு பதவிகளுக்கிடையே ஏற்படும் கூடுதல் செலவினம் பின்வருமாறு :

<table>
<tr><th rowspan="2">வ. எண்</th><th colspan="5">சுருக்கெழுத்து தட்டச்சர் ஊதிய விகிதம்</th><th rowspan="2">கூடுதலாக7 பணியிடங்கள் தோற்றுவிப்பதன் மூலம் ஆகும் கூடுதல் செலவினம் ரூ. (வருடத்திற்கு)</th></tr>
<tr><th>விவரம்</th><th>நிலை–1 ரூ.</th><th>நிலை–1ல் 7 பணியிடம் தோற்றுவிப்பதால் ஆகும் செலவினம் ரூ. (வருடத்திற்கு)</th><th>நிலை–3 ரூ.</th><th>நிலை–3ல் 7 பணியிடம் சரணடைப்பு செய்வதன் மூலம் நிதிவிளைவினை எதிர்கொள்ளும் தொகை ரூ. (வருடத்திற்கு)</th></tr>
<tr><td>(1)</td><td>(2)</td><td>(3)</td><td>(4)</td><td>(5)</td><td>(6)</td><td>(7)</td></tr>
<tr><td>1.</td><td>அடிப்படை ஊதியம்</td><td>9300</td><td rowspan="6">35,276*7 = 2,46,932x12 = 29,63,184/–</td><td>5200</td><td rowspan="6">19,810*7 = 1,38,670x12 = 16,64,040/–</td><td rowspan="6">12,99,144/– (29,63,184 – 16,64,040)</td></tr>
<tr><td>2.</td><td>தர ஊதியம்</td><td>4800</td><td>2800</td></tr>
<tr><td>3.</td><td>அகவிலைப்படி (136%)</td><td>19,176</td><td>10,880</td></tr>
<tr><td>4.</td><td>வீட்டு வாடகைப்படி</td><td>1600</td><td>680</td></tr>
<tr><td>5.</td><td>நகர ஈட்டுப்படி</td><td>400</td><td>250</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>35,276</td><td>19,810</td></tr>
</table>

மேற்காணும் கலம் 7ல் குறிப்பிட்ட கூடுதல் செலவின தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சியே ஏற்றுக்கொள்ளும் என்பதை அரசுக்கு தெரிவிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 01.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

“அரசுக்கு செயற் குறிப்பு அனுப்ப சிறப்பு அதிகாரி– மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.

******

**தி.க.மே. து. ந.க.எண்.அ7/2042/2016**

**தீர்மான எண்.508/2017** **நாள்:04–08–2017**

**பெருநகர சென்னை மாநகராட்சி–மண்டலம்–7, அம்பத்தூர்–பகுதி 19, கோட்டம் 86–ல் ஒரு வருட காலத்திற்கு தினமும் சேகரிக்கப்படும் குப்பைகளை அத்திப்பட்டு குப்பை கொட்டும் வளாகத்தில் இருந்து தினமும் அள்ளி சென்று கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டும் பணி– குறைந்த ஒப்பப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள் S.P. பில்டர்ஸ் நிறுவனத்தாரின் ஒப்பம் அனுமதிக்கப்பட்டது–அவசர அவசியம் கருதி 27.12.2016 முதல் பணி மேற்கொள்ளப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–7, அம்பத்தூர் பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை அத்திப்பட்டு குப்பை கொட்டும் வளாகத்தில் சேகரிக்கப்பட்டு அங்கிருந்து தினமும் பெரிய கொள்ளளவு லாரிகளை கொண்டு கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் ஒப்பந்ததாரர் **திரு.D.பூபாலன்** மூலமாக கொட்டப்பட்டு வந்தது. மேற்படி பணிகாலம் 20.12.2016 அன்றுடன் முடிவடைந்தது.

இந்நிலையில், 04.08.2016 நாளிட்ட மண்டல அலுவலக கடிதத்தின்படி, பணியின் அவசர அவசியம் கருதி, உடனடியாக ஒப்பம் கோரிட, மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே) துறை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

அதனை தொடர்ந்து, இப்பணியினை ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ள திடக்கழிவு மேலாண்மைத் துறையின் மூலமாக 09.12.2016 அன்று ஒப்பம் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த **திருவாளர்கள்.S.P.பில்டர்ஸ்** அவர்களுக்கு, உயர்மட்ட குழுவில் 27.12.2016 அன்று அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு **திருவாளர்கள்.S.P.பில்டர்ஸ்** நிறுவனத்தாருக்கு ஒப்பம் வழங்கிட, மன்றத் தீர்மான எண்.237/2017, நாள் 19.04.2017–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதில் மண்டலம்–7, அத்திப்பட்டு குப்பை மாற்று வளாகத்தில் சேகரிக்கப்பட்டு குப்பையை கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் எடுத்து செல்ல விலைப்புள்ளியாக ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.293/– என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்–7, அம்பத்தூரில், அத்திப்பட்டு குப்பை சேகரிக்கும் வளாகத்தில் சேகரிக்கப்பட்ட குப்பைகளை தினசரி கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு தேக்கமில்லாமல் அனுப்பப்படுவது இன்றியமையாதது என்பதினை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணியின் அவசர தன்மையினை கருதி, மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே) துறை அவர்களின் 27.12.2016 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி, அத்திப்பட்டு குப்பை மாற்று வளாகத்தில் குப்பை தேங்காவண்ணம் மன்ற தீர்மானத்தின் பின்னேற்பை எதிர் நோக்கி 27.12.2016 முதல் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு பெரிய கொள்ளளவு கொண்ட லாரிகளை பயன்படுத்தி குப்பைகளை எடுத்து செல்ல, **திருவாளர்கள் S.P. பில்டர்ஸ்** அவர்களுக்கு பணி மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டது.

எனவே, 27.12.2016 முதல் 19.04.2017 வரை அத்திப்பட்டு குப்பை மாற்று வளாகத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு எடுத்துச் செல்ல **திருவாளர்கள் S.P. பில்டர்ஸ்** நிறுவனத்திற்கு அனுமதி அளித்தமைக்கும்,

மேற்படி பணியினை, ஒப்பத்தில் குறிப்பிட்டுள்ள இறுதித் தொகையான ரூ.293/– (ரூபாய் இருநூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்) ஒரு மெட்ரிக் டன்னுக்கு என்ற விலை விகிதத்தின்படி, பட்டி தீர்வு செய்திடவும் சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 01.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**" சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**<u>ப.து.ந.க.எண்.டி3/ 0172/2017</u>**

**தீர்மான எண்.509/2017** நாள்:04–08–2017

# <u>தானபத்திரம்</u>

மண்டலம்–9, கோட்டம்–126ல் திருமதி. பி. காஞ்சனமாலா, க/பெ. ஆர். ராமன் அவர்கள் பழைய கதவு எண்.63, புதிய கதவு எண்.121, ஆர்.கே. மடம் சாலை, மந்தவெளிப்பாக்கம், சென்னை–28 R.S.No.4356 Block No.97, மைலாப்பூர் கிராமம் என்ற இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–09ல் PPA/WDCN09/01425/2017 நாள் 01.03.2017ன்படி விண்ணப்பித்துள்ளார். அவர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக ஆர்.கே. மடம் சாலை அமைய பெற்றுள்ளது. "சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் II" ன்படி, ஆர்.கே. மடம் சாலை 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தான பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 26.59 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

தான பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

1. மனை உரிமையாளர் திருமதி. பி. காஞ்சனமாலா, க/பெ. ஆர். ராமன் அவர்கள், பழைய கதவு எண்.63, புதிய கதவு எண்.121, ஆர்.கே. மடம் சாலை, மந்தவெளிப்பாக்கம், சென்னை–28 R.S.No.4356 Block No.97, மைலாப்பூர் கிராமம் இடத்தில் சாலை விரிவாக்கத்திற்கான 26.59 ச.மீ நிலத்தினை தான பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.25,000/–யை மனை உரிமையாளரிடமிருந்து "ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**ம.க.கு.ந.க.எண்.அ8/1256/2017**

**தீர்மான எண்.510/2017** **நாள்:10–08–2017**

**மத்திய கணக்கு குழுமம் – காது கேளாமை குறைபாடு உள்ள அரசு பணியாளர்களுக்கு பயணப்படி தொகை நீட்டித்து வழங்க – அரசாணை வழங்கப்பட்டது – பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி.**

அரசாணை எண்.204 நிதி (படிகள்)த் துறை, நாள் 30.06.2017–ல், காது கேளாமை குறைபாடு உள்ள அரசு பணியாளர்களுக்கு பயணப்படி தொகை நீட்டித்து வழங்க அரசாணை வெளியிடப்பட்டது. அரசாணையின் விவரம் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**FINANCE (ALLOWANCES) DEPARTMENT**
**G.O.Ms.No.204, DATED 30.06.2017**
(Hevilambi. Aani-16, Thiruvalluvar Aandu 2048)
**ABSTRACT**

**CONVEYANCE ALLOWANCE -** Extension of Conveyance Allowance to Hearing Impaired Government employees - Orders – Issued.

**Read** the following:-

1. G.O.Ms.No.667, Finance (Allowances) Department, dated. 27.06.1989.
2. G.O.Ms.No.391, Finance (Allowances) Department, dated. 07.10.2010.
3. G.O.Ms.No.316, Finance (Allowances) Department, dated. 22.12.2015.

******

**ORDER**:

In the Government Order first read above, orders were issued to grant Conveyance Allowance at 5% of the basic pay subject to a maximum of Rs.50/-p.m. to blind and orthopedically handicapped Government employees including teachers in local bodies and aided educational institutions subject to certain conditions.

2. The rate of Conveyance Allowance was revised from time to time and the present rate at Rs.1000/- per month was fixed with effect from 01.10.2010 vide Government Order second cited above.

3. In the Budget speech for 2017-18, the Hon'ble Minister for Fisheries, Finance and Personnel & Administrative Reforms made various announcements to improve the quality of life for the differently abled persons including the announcement that-

> **"The Conveyance Allowance of Rs.1000/- per month being provided to the visually challenged and persons with locomoter disabilities will be extended to the Hearing Impaired Government employees."**

4. Accordingly, the government now direct that the Conveyance Allowance of Rs.1000/- p.m. now paid to visually challenged and locomotor disabled government employees be extended to the Hearing Impaired Government employees subject to the following conditions that:

(i) the government employees who are having loss of sixty decibels (60 decibels) or more in the better ear in the conversation range of frequencies as per Persons With Disabilities (Equal Opportunities, Protection of Rights and Full Participation) Act, 1995;

(ii) the Conveyance Allowance shall be granted based on the recommendation of the Head of ENT Department of a Government Hospital; and

(iii) that the Conveyance Allowance shall be granted with effect from the date of the receipt of the recommendation of the concerned Medical Authority and it is not payable during leave (except casual leave), joining time or suspension;

5. All Heads of Department and their District level sub-ordinate officers are authorised to sanction Conveyance Allowance in terms of above orders, invoking existing procedures.

6. These orders shall apply to the employees of local bodies and aided educational institutions.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K. SHANMUGAM**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

எனவே, அரசாணை எண்.204, நிதி (படிகள்)த் துறை, நாள்.30.06.2017–ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்துவதற்கு சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“ அரசாணையை நடைமுறைப்படுத்த சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**க.து.ந.க.எண்.பி1/1418/2017**

**தீர்மான எண்.511/2017** **நாள்:10–08–2017**

**மண்டலம்–15 வார்டு–195, கண்ணகி நகர் 2வது பிரதான சாலையில் நகர்புற சமூகநல மைய மருத்துவமனையில் (30 Beds) முதல் தளத்தில் அபிவிருத்திப்பணி, இரண்டாம் தளம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்காக – 2016–2017 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ.2,65,00,000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்குஅனுமதி**

**வார்டு எண் : 195** **மண்டலம் : 15**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர். | மண்டலம்–15 வார்டு–195, கண்ணகி நகர் 2வது பிரதான சாலையில் நகர்புற சமூகநல மைய மருத்துவமனையில் (30 Beds) முதல் தளத்தில் அபிவிருத்திப்பணி, இரண்டாம் தளம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணி. |
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | மாநகரநலஅலுவலர் |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம்–15 |
| 4 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | பெறப்பட்டுள்ளது |
| 5 | தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி செயல்முறை ஆணை மற்றும் நாள் | தலைமைபொறியாளர் (கட்டடம்) C.E(B)T.S.No.05/ 2017–18 நாள்.20.07.2017. |
| 6 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 2,65,00,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ . 2,27,07,143.40 |
| | (ஆ) மேலான மேற்பார்வை செலவு | ரூ. 22,70,714.34 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு | ரூ. 5,67,678.59 |
| | (ஈ) எதிர்பாரா செலவு | ரூ. 5,00,320.81 |
| | (உ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 2, 27,071.43 |
| | (ஊ) தர நிர்ணயம் | ரூ. 2, 27,071.43 |
| | **மொத்தம்** | **ரூ. 2,65,00,000.00** |
| 7 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | ஆம் |
| 8 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | புதிய பணி |
| 9 | நிதியின் தன்மை | அரசு மான்யம் (NUHM) |
| 10 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ. 2,65,00,000.00 |
| 11 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | ஆம் |

மேற்கண்ட பணிக்காக ரூ.2,65,00,000/–க்கு(ரூபாய் இரண்டு கோடியே அறுபத்தைந்து இலட்சம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி சிறப்பு அதிகாரி நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“மதிப்பீட்டிற்கு சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**க.து.ந.க.எண்.பி6/1497/2017**

**தீர்மான எண்.512/2017** **நாள்:10–08–2017**

**மண்டலம்–8 பகுதி–22, வார்டு–106ல் கலெக்டரேட் காலனி 6வது தெருவில் அமைந்துள்ள உபயோகமற்ற பழுதடைந்த பல்நோக்கு கூடத்தை இடிப்பதற்கு அனுமதி.**

பெருநகரசென்னைமாநகராட்சி, மண்டலம்–8 பகுதி–22, வார்டு–106ல் கலெக்டரேட்காலனி 6வது தெருவில் அமைந்துள்ள உபயோகமற்ற பழுதடைந்து உள்ள பல்நோக்குகூடத்தை இடிப்பதற்கு.

இடிக்கப்படவுள்ள பழைய பல்நோக்கு கூடத்தின் விவரங்கள்

| வ. எண் | மண்டலம்–8 | வார்டு –106 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விபரம் | உபயோகமற்று உள்ள பல்நோக்கு கூடம் |
| 2 | கட்டிடம் கட்டடப்பட்ட வருடம் | 2004 ஆம் ஆண்டு கட்டப்பட்டது |
| 3 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 75 ச.மீ |
| 4 | கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு | 383 ச.மீ |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தகமதிப்பு | ரூ.2,56,674/– |
| 6 | கட்டிடம் தற்போதுபயன்பாட்டில்உள்ளதா | பயன்பாட்டில் இல்லை |
| 7 | கட்டிடம் இடித்த பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது | சமுதாயகூடம் |
| 8 | கட்டிடம் இடிப்பதற்கானகாரணம் | உபயோகமற்ற நிலையில் உள்ளது |
| 9 | கட்டிடம் இடிப்பதற்குபரிந்துரைசெய்தவர் | மாமன்ற உறுப்பினர் |
| 10 | வார்டு குழு தீர்மானம் எண். மற்றும் நாள்: | வார்டு குழு தீர்மானம் எண்.9, நாள்13.10.2015. |

எனவே, மண்டலம்–8, வார்டு–106 கலெக்டரேட் காலனி 6வது தெருவில் அமைந்துள்ள உபயோகமற்ற பல்நோக்கு கூடத்தை இடிப்பதற்கு சிறப்பு அதிகாரி– நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“பல்நோக்கு கட்டிடத்தை இடிப்பதற்கு சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**பூ.து.ந.க.எண்.பி2/305/2017**

**தீர்மான எண்.513/2017** **நாள்:10–08–2017**

**ஒப்பம் – பூங்கா துறை – மண்டலம்–4, பகுதி–11, வார்டு–47, சி.பி.சாலையில் உள்ள திறந்தவெளி நிலத்தில் புதியதாக அம்மா சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கும் பணி – திருவாளர்கள். விவேக் விஜய் அண்ட் கம்பெனி அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

| | | | |
|---|---|---|---|
| 1 | பணியின் பெயர். | : | மண்டலம்–4, பகுதி–11, வார்டு–47, சி.பி.சாலையில் உள்ள திறந்தவெளி நிலத்தில் புதியதாக அம்மா சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கும் பணி. |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | : | மன்றத்தீர்மான எண்.118A/2017, நாள்: 07.03.2017 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | : | பூங்கா துறை |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2015–2016 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | : | ரூ. 2,00,00,000/– |
| | (அ) கட்டுமான பணி செலவு | : | ரூ. 1,73,79,929.40 |
| | (ஆ) மேலான மேற்பார்வை செலவு | : | ரூ. 17,37,992.94 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு | : | ரூ. 4,34,498.24 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு – 1% | : | ரூ. 1,73,799.29 |
| | (உ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | : | ரூ. 1,73,799.29 |
| | (ஊ) மற்றைய எதிர்பாரா செலவு 2.5% | : | ரூ. 99,980.84 |
| | மொத்தம் | : | ரூ. 2,00,00,000/– |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | : | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர். 23, நாள். 27.04.2017.<br>2. இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் நாள். 27.04.2017<br>3. மக்கள் குரல் நாளிதழ், நாள். 27.04.2017. |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | : | 15.05.2017 |
| 8 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுவலகரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | : | ஆம். ஒதுக்கப்பட்டுள்ளது |
| 9 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன? | | ஐந்து(e.Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவங்கள் பெறப்பட்டுள்ளது. |

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்,

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு / திருவாளர்கள்/திருமதி | பணியின் அலுவலக மதிப்பு (ரூ.) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.) | 2015-2016 ஆம் ஆண்டின் விலை விகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | ராஜதுரை கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | ரூ. 1,73,79,929.40 | 2,17,24,911.74 | (+) 25.00 % அதிகம் |
| 2 | எம். மகேஷ் | ரூ. 1,73,79,929.40 | 2,17,24,911.74 | (+) 25.00 % அதிகம் |
| 3 | ஜி.கே. எண்டர்பிரைசஸ் | ரூ. 1,73,79,929.40 | 2,25,93,908.21 | (+) 30.00 % அதிகம் |
| 4 | விவேக் விஜய் அண்ட் கம்பெனி | ரூ. 1,73,79,929.40 | 1,94,65,520.92 | (+) 12.00 % அதிகம் |
| 5 | எஸ். பாபு | ரூ. 1,73,79,929.40 | குறிப்பிட்ட நேரத்திற்குள் முன்வைப்பு தொகை செலுத்தப்படவில்லை. எனவே, ஒப்பம் நிராகரிக்கப்பட்டது. | |

| | | | |
|---|---|---|---|
| 10 | குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | : | ஆம். நாள். 24.05.2017 மற்றும் 29.06.2017 அன்று பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. |
| 11 | பேச்சு வார்த்தைக்குப்பின் / ஒப்பத் தொகை/ ஒப்ப சதவீதம் . | : | ரூ. 1,85,96,524.45 (+) 7.00 % அதிகம், 2015–2016 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 12 | குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு | : | வகுப்பு: 1 |
| 13 | பணிக்கான நிதி ஆதாரம் அ) வரவு செலவு திட்ட தலைப்பு | : | தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் |
| 14 | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் . | : | 14.08.2017 |

மன்றத்தீர்மான எண்.118A/2017, நாள்:07.03.2017ன்படி, தமிழ்நாடு அரசின் மாசு கட்டுப்பாடு வாரியம், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளித்த வைப்பு நிதியின் கீழ் 2016–17ஆம் நிதியாண்டில் மண்டலம்–4, பகுதி–11, வார்டு–47, சி.பி.சாலையில் உள்ள திறந்தவெளி நிலத்தில், புதியதாக அம்மா சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கும் பணிக்கு ரூ.2.00 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அனுமதி பெறப்பட்டது.

இதன்படி, ஒப்பங்கள் கோரப்பட்டன. ஒப்ப இறுதி நாளான 15.05.2017 அன்று ஐந்து ஒப்பங்கள் e-tender மூலமாக பெறப்பட்டன. குறைந்த ஒப்பம் அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். விவேக் விஜய் அண்ட் கம்பெனி அவர்களின் ஒப்பத்தொகை 2015–2016ஆம் ஆண்டின் அலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.1,73,79,929.40ஐ விட (+)12.00% அதிகமாகும். இதன்படி குறைந்த ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை 1,94,65,520.92 ஆகும். எனவே, 24.05.2017 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத்தொகை ரூ.1,91,00,542.41 ஆகும். இது 2015–16ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்படி (+)9.90% அதிகம் ஆகும். எனவே, மீண்டும் 29.06.2017 அன்று நடத்தப்பட்ட மறுபேச்சுவார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத்தொகை ரூ.1,85,96,524.45 ஆகும். இது 2015–16ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி (+)7.00% அதிகம் மற்றும் 2016–17–ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்படி (+)5.41% அதிகம் ஆகும். மேலும், இவ்வொப்ப தொகையை 01.07.2017 நாளிட்ட சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் ஒப்ப விழுக்காடு (–)0.02% குறைவாகும்.

| | |
|---|---|
| ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை | ரூ.1,85,96,524.45 |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2015–2016 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி | (+) 7.00% அதிகம் |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2016–2017 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி | (+) 5.41% அதிகம் |
| The Hindu (Habitat), 01.07.2017 நாளிட்ட சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் ஒப்பதாரரரின் ஒப்ப சதவீதம் | (–) 0.02 % குறைவு |

மேலும், அம்மா சுற்றுச்சூழல் பூங்காவில், பாதசாரி மேடைகள், சிறுவர் பூங்கா, நாடகம், சுகாதார மண்டலம் அமைப்பது, பச்சை கிரக மண்டலம், சக்தி மண்டலம், பச்சை வாழ்க்கை மண்டலம் மற்றும் சுழல் ஸ்டுடியோக்கள் அமைப்பது போன்ற சிறப்பு தன்மைகளை கருத்தில் கொண்டு, 03.08.2017 அன்று நடந்த ஒப்ப சூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.1,85,96,524.45-க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். விவேக் விஜய் அண்ட் கம்பெனி அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**பூ.து.ந.க.எண்.பி2/305/2017**

எனவே, குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். விவேக் விஜய் அண்ட் கம்பெனி அவர்களின் ரூ.1,85,96,524.45 (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து ஐநூற்று இருபத்து நான்கு மற்றும் நாற்பத்து ஐந்து பைசா மட்டும்)க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். விவேக் விஜய் அண்ட் கம்பெனி அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919 ல் விதி 80(2)ன்படி சிறப்பு அதிகாரி–நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"ஒப்பம் வழங்க சிறப்பு அதிகாரிநிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/1137,1139,1141/2015**

**தீர்மான எண்.514/2017** நாள்:10–08–2017

**இயந்திரப்பொறியியல் துறை – மழைநீர் வடிகால்துறையின் வடக்கு, மத்தியம், தெற்கு , வட்டாரப் பயன்பாட்டிற்கெனவட்டாரத்திற்கு ஒன்று வீதம் 3 எண்ணிக்கையில் Robotic Multipurpose Excavator வாகனம் 4 வருட இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்யப்பட்டது – இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி பட்டி தொடர்பாக மழை நீர் வடிகால்துறை மூலம் சான்று பெற்று இயந்திர பொறியியல் துறை மூலம் பட்டி தேர்ச்சி செய்வதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நீர்வழித்தடங்கள் மற்றும் கால்வாய்களில் உள்ள ஆகாயத்தாமரைகள், மிதக்கும் கழிவுகள் மற்றும் குப்பைகளை அகற்றும் பணிகள் பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளப்பட்ட நிலையில் உச்சநீதிமன்றம் மனிதர்களைக் கொண்டு கழிவுகளை அகற்றும் பணிகளை மேற்கொள்ளக்கூடாது என உத்தரவு பிறப்பித்துள்ளதால் இப்பணிகளை மேற்கொள்ள முதன்மை செயலர்/ ஆணையர்அவர்களின் 30.09.2015 நாளிட்ட ஆணை மற்றும் மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் வடக்கு, மத்தியம், தெற்கு வட்டார பயன்பாட்டிற்கென வட்டாரத்திற்கு ஒன்று வீதம் 3 எண்ணிக்கையில் ரூ19,64,25,000/–(6,54,75,000X3) செலவில் ரொபோடிக் மல்டிபர்பஸ் எஸ்கவேட்டர்கள் இயந்திரம் 4 வருட இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வகை வாகனங்கள் நீர்வழித்தடங்களை சுத்தம் செய்ய பயன்படுத்துவதன் காரணமாக இவ்வாகனங்களின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மழைநீர் வடிகால் துறை மூலம் மேற்கொள்ள மன்றத்தீர்மான எண். 574/2015 ,575/2015,576/2015 நாள்.30.09.2015ல் மன்றத்தீர்மானங்கள் பெறப்பட்டுள்ளது.

இப்பணியினை மழைநீர் வடிகால் துறை மூலம் மேற்கொள்வது குறித்த நடைமுறை சிக்கல்கள் மற்றும் சாத்தியக்கூறுகள் குறித்து 14.06.2017 அன்று மேற்பார்வை பொறியாளர் (மழைநீர் வடிகால் துறை) அவர்களால் ஆய்வுக் கூட்டம் மேற்கொள்ளப்பட்டது. அக்கூட்டத்தில் "இவ்வாகனம் இயந்திரப் பொறியியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது மற்றும் இதன் பயன்பாடு மட்டுமே மழைநீர் வடிகால் துறையால் மேற்கொள்ளப்படுகிறது. இந்த வாகனத்தின் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணியை கவனிப்பது இயந்திர பொறியியல் துறையை சார்ந்தது ஆகும். ஆகவே, இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி சம்பந்தமாக பட்டி இயந்திர பொறியியல் துறையில் பெறப்பட்டு, இயக்குதல் பணிக்கான சான்றினை மழைநீர் வடிகால் துறையிடமிருந்தும், பராமரிப்பு பணிக்கான சான்றினை இயந்திரப் பொறியியல் துறையிடமிருந்தும் பெற்று பட்டியினை இயந்திரப் பொறியியல் துறையே தீர்வு செய்ய வேண்டும் " என தீர்மானிக்கப்பட்டுள்ளது என 14.06.2017 நாளிட்ட குறிப்பில் மேற்பார்வை பொறியாளர் (மழைநீர் வடிகால் துறை) அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும், இவ்வாகனங்களின் பராமரிப்பு இயந்திரப் பொறியியல் துறையின் கட்டுப்பாட்டிலும், மற்றும் பயன்பாடு மட்டுமே மழைநீர் வடிகால் துறையாலும் மேற்கொள்ளப்படுவதால் இவ்வாகனத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி சம்பந்தமான பட்டிகளில், இயக்குதல் பணிக்கான சான்றினை மழைநீர் வடிகால் துறையிடமிருந்தும், பராமரிப்பு பணிக்கான சான்றினை இயந்திரப் பொறியியல் துறையிடமிருந்தும் பெற்று பட்டியினை இயந்திரப் பொறியியல் துறையின் மூலம் தீர்வு செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 4 மீட்டருக்கும் அதிகமான அகலம் கொண்ட 60 சதவிகித நீர்வழித்தடங்களை சுத்தம் செய்யும் பணிக்காக மழைநீர் வடிகால் துறையின் பயன்பாட்டிற்கென எற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட 1 எண்ணிக்கையிலான ஆம்பிபியன் வாகனத்திற்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்கான பட்டிகள், மழைநீர் வடிகால் துறையிடமிருந்து இயக்குதல் பணிக்கெனவும், இயந்திரப்பொறியியல் துறை மூலம் பராமரிப்புப் பணிக்கெனவும் உரிய சான்றுகள் பெற்று, இயந்திரப் பொறியியல் துறை மூலம் தீர்வு செய்யப்படுகிறது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மழைநீர் வடிகால்துறை மூலம் இவ்வாகனங்களுக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிக்கான பட்டியினை தேர்ச்சி செய்ய தேவைக்கேற்ப உரிய நிதி ஒதுக்கீடு அந்தந்த நிதியாண்டில் பெற்று கொள்ள மன்றத்தீர்மான எண். 574/2015 ,575/2015,576/2015 நாள் 30.09.2015 மன்றத் தீர்மானங்கள் பெறப்பட்டுள்ள நிலையில், தற்பொழுது இயந்திர பொறியியல் துறையின் மூலம் மேற்படி வாகனங்களின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான பட்டியினை தேர்ச்சி செய்ய வாகன பணிமனை கணக்கு குறியீடு எண்.40–41–10, இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிக்கான கணக்கு தலைப்பு எண். 230–80–03–00 கீழ் முதல் வருட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கென 31.03.2018 வரையிலான காலத்திற்கு ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய நிதி ஆலோசகர் அவர்களை கோரலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/1137,1139,1141/2015**

ஏற்கனவே 30.09.2015 நாளிட்ட மன்றத்தீர்மான எண். 574/2015, 575/2015, மற்றும் 576/2015 வரிசை எண். 5– ல் Robotic Multi Purpose Excavator வாகனத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு சம்பந்தமான பட்டி மழைநீர் வடிகால்வாய் துறை மூலம் தீர்வு செய்யப்பட வேண்டும் என தீர்மானம் பெறப்பட்ட நிலையில், இப்பட்டியினை இயந்திர பொறியியல் துறை மூலம் தீர்வு செய்ய மன்றத்தின் அனுமதி பெறுவது அவசியமாகிறது. திருவாளர்கள் ஆர்யான் பம்ப்ஸ் மற்றும் என்விரோ சொல்யூஷன்ஸ் நிறுவனத்தார் 20.03.2017 முதல் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொண்டு வந்துள்ள நிலையில், எதிர்வரும் மழைக்காலத்தினை கருத்தில் கொண்டு இப்பணியினை தொய்வின்றி மேற்கொள்ள இந்நிறுவனத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான பட்டி உடன் தீர்வு செய்யப்படல் வேண்டும். ஆகவே, இந்நிறுவனத்திற்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்கான பட்டியினை இயந்திரப்பொறியியல் துறை மூலம் தீர்வு செய்ய,

01. Robotic Multi Purpose Excavator வாகனத்தின் அன்றாடம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான பட்டி மழைநீர் வடிகால்துறை மூலம் தீர்வு செய்ய மன்றத்தீர்மானம் பெறப்பட்டுள்ள நிலையில் மழைநீர் வடிகால் துறையிடமிருந்து இயக்குதல் பணிக்கெனவும், இயந்திரப்பொறியியல் துறை மூலம் பராமரிப்புப் பணிக்கெனவும் உரிய சான்றுகள் பெற்று இயந்திர பொறியியல் துறை மூலம் தேர்ச்சி செய்யவும்,
02. இந்த வாகனத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான பட்டியினை ஆய்வு வாகன பணிமனை கணக்கு குறியீடு எண்.40–41–10, இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிக்கான கணக்கு தலைப்பு எண். 230–80–03–00 கீழ் தேர்ச்சி செய்யவும்,
03. முதல் வருட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கென 31.03.2018 வரையிலான காலத்திற்கு ரூ.2.00கோடி நிதி ஒதுக்கீடு செய்ய நிதி ஆலோசகர் அவர்களை கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி–நி.கு(சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3/19877/2017</u>**

**தீர்மான எண்.515/2017** நாள்:10–08–2017

**<u>அயற்பணி – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை – திரு.எஸ்.பாபு, கருவூல அலுவலர், மாவட்ட கருவூலம், சென்னை அவர்கள் – பெருநகர சென்னை மாநகராட்சியில் வட்டார துணை ஆணையர் (தெற்கு) அலுவலகத்தில் தலைமை கணக்கு அலுவலர் ஆக அயற்பணியில் 23.05.2017 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் – சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும்.</u>**

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின், கருவூலம் மற்றும் கணக்கு துறை அவர்களின் செயல்முறை ஆணை, ஆர்.சி.எண்.44642/A1/2014, நாள்:13.05.2017ன்படி, திரு.எஸ்.பாபு, கருவூல அலுவலர், மாவட்ட கருவூலம், சென்னை, அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் வட்டார துணை ஆணையர் (தெற்கு) அலுவலகத்தில் தலைமை கணக்கு அலுவலர் ஆக அயற்பணியில் 23.05.2017 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பித்த ஆணையரது 03.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“பணியேற்ற விவரம் தகவல் மற்றும் பதிவிற்கு சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3/22326/2017</u>**

**தீர்மான எண்.516/2017** **நாள்:10–08–2017**

**<u>அயற்பணி – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை – திருமதி.எஸ்.ஆர்.புஷ்பா, கணக்கு அலுவலர், இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் அலுவலகம், குறளகம், சென்னை, அவர்கள் பதவி உயர்வு மூலம் – பெருநகர சென்னை மாநகராட்சியில் வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகத்தில் தலைமை கணக்கு அலுவலர் ஆக அயற்பணியில் 29.06.2017 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் – சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும்.</u>**

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின், கருவூலம் மற்றும் கணக்கு துறை அவர்களின் செயல்முறை ஆணை, ஆர்.சி.எண்.44642–2/2017/A1, நாள்:13.06.2017ன்படி, திருமதி.எஸ்.ஆர்.புஷ்பா, கணக்கு அலுவலர், இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் அலுவலகம், குறளகம், சென்னை, அவர்கள் பதவி உயர்வு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியில் வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகத்தில் தலைமை கணக்கு அலுவலர் ஆக அயற்பணியில் 29.06.2017 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பித்த ஆணையரது 02.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

“பணியேற்ற விவரம் தகவல் மற்றும் பதிவிற்கு சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.

******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3/23515/2017</u>**

**தீர்மான எண்.517/2017** நாள்:10–08–2017

**<u>அயற்பணி – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை – திரு.எஸ்.பழனி முருகேசன், கணக்கு அலுவலர், இணை இயக்குநர் அலுவலகம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தூத்துக்குடி, அவர்கள் பணியிடமாற்றம் மூலம் – பெருநகர சென்னை மாநகராட்சியில் கணக்கு அலுவலர் ஆக அயற்பணியில் 23.06.2017 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் – சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும்.</u>**

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின், கருவூலம் மற்றும் கணக்கு துறை அவர்களின் செயல்முறை ஆணை, ஆர்.சி.எண்.22586–3/A2/2017, நாள்: 15.06.2017ன்படி, திரு.எஸ்.பழனி முருகேசன், கணக்கு அலுவலர், இணை இயக்குநர் அலுவலகம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தூத்துக்குடி, அவர்கள் பணியிடமாற்றம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியில் கணக்கு அலுவலர் ஆக அயற்பணியில் 23.06.2017 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பித்த ஆணையரது 02.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

“பணியேற்ற விவரம் தகவல் மற்றும் பதிவிற்கு சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.

******

## பொ.து.ந.க.எண்.ஈ2/016817/2017

**தீர்மான எண்.518/2017** **நாள்:10–08–2017**

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை –மண்டலம்–9, சுகாதாரத்துறை மருத்துவ அலுவலர், டாக்டர்.து.கண்மணி அவர்கள் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க அனுமதி.**

சென்னைமாநகராட்சி, ஆணையர் அவர்களின் 17.02.2009 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, டாக்டர்.து.கண்மணி, மருத்துவ அலுவலர், அவர்கள் 06.03.2009 மு.ப. முதல் மண்டலம்–6, சுகாதாரத்துறையில் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றார். மேலும், மேற்கண்ட செயல்முறை ஆணையில், மருத்துவ அலுவலர்களாக நியமனம் செய்யப்படும் நபர்கள் தகுதிகாண் பருவகாலத்திற்குள் வரையறுக்கப்பட்ட பணிவிதிகளின்படி தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலருக்கான கணக்குத் தேர்வு மற்றும் தாய்மொழி தமிழ் அல்லாதோர் தமிழ்நாடுஅரசுபணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்மொழித் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.

டாக்டர்.து.கண்மணி, மருத்துவஅலுவலர் அவர்களின் தாய்மொழி தமிழ் ஆகும். தனியர் தமிழ்நாடுஅரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலருக்கான கணக்குதேர்வு மற்றும் தமிழ்நாடு மருத்துவ குறியீடு தேர்விலும் டிசம்பர் 2010 ல் தேர்ச்சி பெற்றுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு–2ன் கீழ்வரும் பதவிகளுக்கு தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்க உரிய அதிகார பங்களிப்பு பெருநகர சென்னை மாநகராட்சி நியமனக்குழு வசம் உள்ளது.

மேலும் தனியர் மீது துறை ரீதியான எவ்வித குற்றச்சாட்டுகளோ / விசாரணையோ நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர்.து.கண்மணி, மருத்துவ அலுவலர் அவர்கள் 19நாட்கள் ஊதியமில்லாவிடுப்பும் மற்றும் 7 நாட்கள் ஈட்டிய விடுப்பும் துய்த்துள்ளார் என்று மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் 11.05.2017 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்படி, விவரங்களின்படி, டாக்டர்து.கண்மணி, மருத்துவஅலுவலர் அவர்களுக்கு மருத்துவ அலுவலர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக கீழ்கண்டவாறு அறிவிப்பதற்கு சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்த நாள் | ஊதியமில்லா விடுப்பு மற்றும் ஈட்டிய விடுப்பு துய்த்த நாட்கள் | தகுதிகாண் பருவம் முடித்தநாள். |
|---|---|---|---|---|
| 1. | டாக்டர்.து.கண்மணி, மருத்துவஅலுவலர் | 06.03.2009 | 26 நாட்கள் (19+7) | 31.03.2011 |

**“தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்க சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**பொ.து.ந.க.எண்.ஈ1/02335/2017**

**தீர்மான எண்.519/2017** நாள்:10–08–2017

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை – திரு.எம்.சுப்பிரமணியம், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–1 (புதிய மண்டலம்–4) அவர்களை நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு வயது முதிர்வு அடிப்படையில் 31.01.2011 அன்று பிற்பகல் முதல் ஓய்வில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டது – தனியர் 09.12.2011 அன்று காலமானார் – தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுத்துறையின் சுற்றறிக்கையின்படி (பொ.து.ந.க.எண்.ஜி3/41450/2009, 24.11.2009) திரு.எம்.சுப்பிரமணியம், உதவி செயற் பொறியாளர், பழைய கோட்டம்–1, பழைய பகுதி–1, பழைய மண்டலம்–1 (புதிய மண்டலம்–4) என்பவரை வயது முதிர்வு காரணமாக 31.01.2011 பிற்பகல் முதல் ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

திரு.எம்.சுப்பிரமணியம், உதவி செயற் பொறியாளர், மண்டலம்–4, அவர்களது பணிப்பதிவேட்டினை சரிபார்க்கப்பட்டதில், தனியர் பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன் முதலாக 08.10.1975 முதல் ஓவர்சீயராக (தற்காலிகம்) பணியில் சேர்ந்துள்ளார். பின்னர் 30.05.1979 முதல் இளநிலை பொறியாளராகவும் (தற்காலிகம்), 23.11.1991 முதல் உதவிப்பொறியாளராகவும், அதன்பின்பு உதவி செயற்பொறியாளராக 26.06.2000 முதல் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேலும், இப்பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டதற்கு பொ.து.ந.க.எண்.ஈ1/31500/2015, 10.03.2010 நாளிட்ட ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, அரசின் உறுதியாக்கமும் பணிவரன்முறையும் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம், சென்னை மாநகராட்சி அவர்களின் 29.11.2010 நாளிட்ட குறிப்பின்படி, (வி.து.ந.க.எண். விஜிசி.சி2/316/10) தனியர் மீது சென்னை மாநகராட்சி விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியர் மீது பழைய மண்டலம்–1, (புதிய மண்டலம்–4ல்) ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயலர், சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தின் 28.12.2010 நாளிட்ட கடிதத்தின்படி, திரு.எம்.சுப்பிரமணியம், உதவி செயற் பொறியாளர், பழைய கோட்டம்–1, பழைய பகுதி–1, பழைய மண்டலம்–1 (புதிய மண்டலம்–4) அவர்கள் மீது எவ்வித நிலுவையும் இல்லையென சான்றளிக்கப்பட்டுள்ளது.

தனியர் கீழ்கண்ட துறைகளின் குறிப்புரைகளின்படி, தனியர் வகித்துள்ள பதவிகள் மற்றும் துறைகளில் பணியாற்றிய காலங்களில் தனியரை குறிப்பாக பொறுப்பாக்கும் தணிக்கைத் தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை எனவும், மேலும் அன்னாரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை மற்றும் முன்பண நிலுவை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அன்னாரது ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி தணிக்கை சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை**

| வ. எண். | பதவி | துறை / மண்டலம் | பணியாற்றிய காலம் | | தணிக்கை தடை பெறப்பட்ட விவரம் |
|---|---|---|---|---|---|
| | | | முதல் | வரை | |
| 1. | இளநிலை பொறியாளர் | மண்டலம்–3 | 20.12.1988 | 30.04.1991 | தணிக்கை தடை ஏதுமில்லையென அறிக்கை பெறப்பட்டது. |
| 2. | உதவி பொறியாளர் | மண்டலம்–5 | 01.05.1991 | 16.08.1994 | தணிக்கை தடை ஏதுமில்லையென அறிக்கை பெறப்பட்டது. |
| 3. | உதவி பொறியாளர் | மண்டலம்–10 | 17.08.1994 | 12.02.1996 | தணிக்கை தடை ஏதுமில்லையென அறிக்கை பெறப்பட்டது. |
| 4. | உதவி பொறியாளர் | கட்டிடத்துறை | 14.02.1996 | 05.06.1996 | தணிக்கை தடை ஏதுமில்லையென அறிக்கை பெறப்பட்டது. |

<u>**பொ.து.ந.க.எண்.ஈ1/02335/2017**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | உதவி பொறியாளர் | பழைய மண்டலம்–2 | 05.06.1996 | 26.06.2000 | தணிக்கை தடை ஏதுமில்லையென அறிக்கை பெறப்பட்டது. |
| 6. | உதவி செயற்பொறியாளர் | பணித்துறை | 26.06.2000 | 11.10.2000 | தணிக்கை தடை ஏதுமில்லையென அறிக்கை பெறப்பட்டது. |
| 7. | உதவி செயற்பொறியாளர் | மண்டலம்–1 (புதிய மண்டலம்–4) | 12.10.2000 முதல் 31.01.2011 | **தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடைகள் விவரம்**<br>2001–02 – தஅ 56, 71, 72, 81<br>2002–03 – தஅ 63, 64,65,70<br>2004–05 – தஅ 47<br>2005–06 – தஅ 33, 35,50<br>2007–08 – தஅ 43, 47, 48<br>2002–03 – தகு 11<br>2008–09 – தஅ 40, 51<br>2009–10 – தஅ 51 | |

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் **31.01.2011** நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, திரு.எம்.சுப்பிரமணியம், உதவி செயற்பொறியாளர், பழைய மண்டலம்–**1**, (புதிய மண்டலம்–**4**) அவர்கள் மீது தனியரை பொறுப்பாக்கும் ரூ.**3,70,727/–** அளவிற்கு நிலுவையில் இருக்கும் தணிக்கை தடைகளை நீக்கியபின் தனியருக்கு இறப்பு மற்றும் ஓய்வுகால பணிக்கொடை வழங்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், மேலும் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரால் தெரிவிக்கப்படும் தணிக்கை தடைகள் மற்றும் அலுவலக முன்பண நிலுவை காரணமாக ஏற்படும் நிதி இழப்பீடு ஆகியவைகளுக்கும் தனியர் பொறுப்பாகிறார் என பின்னர் தெரியவரின், அத்தொகைகளையும் தனியரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு **31.01.2011** அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்து ஆணையிடப்பட்டது.

சு.தரணி என்பவரது **01.03.2013** நாளிட்ட கடிதத்தின்படி, (முகவரி எண்.**3**, **7**வது மெயின்ரோடு, திருவள்ளுவர் நகர், எருக்கஞ்சேரி, சென்னை–**118**) அன்னாரது கணவரான திரு.எம்.சுப்பிரமணியம், என்பவர் உதவி செயற்பொறியாளராக பணியாற்றி **31.01.2011** அன்று ஓய்வு பெற்று அன்னார் **09.12.2011** அன்று காலமானதாகவும், அதனால் குடும்ப ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை பெற்று தருமாறு கேட்டுக்கொண்டு இக்கடிதத்துடன் கணவரது இறப்பு சான்று மற்றும் வாரிசுதாரர் சான்று நகல் இணைக்கப்பட்டு மண்டல அலுவலர்–**4** அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உதவி ஆணையர் (பொ.நி.ம.ப.) அவர்களது **21.08.2013** நாளிட்ட குறிப்பின்படி, திரு.எம்.சுப்பிரமணியம், உதவி செயற்பொறியாளர், (**09.12.2011** அன்று காலமானவர் ) என்பவரை **31.01.2011** அன்று பிற்பகல் முதல் அகவை முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்தமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறுவது குறித்து முதன்மை செயலர் / ஆணையர் அவர்களது ஒப்புதல் வேண்டி பொதுத்துறைக்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதில், தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்ட செயல்முறை ஆணை ஆகியவைகளை இணைத்து கோப்பினை மீள சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டு கோப்பு மற்றும் பணிப்பதிவேடு மண்டலம்–**4**க்கு திருப்பி அனுப்பப்பட்டது.

மண்டல அலுவலர்–**4** அவர்களது **20.01.2014** நாளிட்ட குறிப்பில், தனியரை பொறுப்பாக்கும் ரூ.**3,70,727/–** தணிக்கை தடைக்கான தொகையை, தனியரது பணிக்கொடை தொகையில் பிடித்தம் செய்து வாரிசுதாரருக்கு (சு.தரணி) பணிக்கொடை வழங்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியர் வயது முதிர்வு ஓய்வு பெற்றதற்கு மன்றத்தின் பின்னேற்பு ஆணை வழங்கலாமா அல்லது மேற்கண்ட தணிக்கை தடை தொகையான ரூ.**3,70,727/–** தள்ளுபடி செய்தும், வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு ஆணை பெற்றும், வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணப்பயன்கள் வழங்க நடவடிக்கை எடுக்கலாமா என்பது குறித்து முதன்மை செயலர் / ஆணையர் அவர்களது ஆணை வேண்டி குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

**பொ.து.ந.க.எண்.ஈ1/02335/2017**

துணை ஆட்சியர் (நிர்வாகம்) அவர்களின் 06.02.2014 நாளிட்ட குறிப்பின்படி, காலஞ்சென்ற திரு.எம்.சுப்பிரமணியம், உதவி செயற்பொறியாளரை பொறுப்பாக்கும் ரூ.3,70,727/–க்கான தணிக்கை தடை தொகை குறித்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறையிலிருந்து கருத்துரை பெற்று வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்கள் மூலமாக பொதுத்துறைக்கு சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

இணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 07.02.2011, 05.06.2013, 10.09.2015, 16.12.2015, 12.08.2016 மற்றும் 19.05.2017, நாளிட்ட கடிதங்களின்படி, திரு.எம்.சுப்பிரமணியம், (09.12.2011 அன்று காலமானவர்) உதவி செயற்பொறியாளர், பழைய மண்டலம்–1, (புதிய மண்டலம்– 4) அவர்கள் மீதான ரூ.3,70,727/– மற்றும் ரூ.48,862/–க்கான தணிக்கை தடைகள் நீக்கம் செய்யப்பட்டு F.R.Copy நகல்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

உதவி செயற்பொறியாளர், பதவியானது வகுப்பு–2ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவியில் வகிப்பவரை அகவை முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் நியமனக்குழு மூலமாக மாமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. தற்போது மன்றம் 24.10.2016 அன்றுடன் முடிவடைந்துள்ளது.

அரசாணை(ப) எண்.147, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்) துறை நாள்.24.10.2016 ன்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சிறப்பு அதிகாரி நியமனம் செய்யப்பட்டுள்ளதால், தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்கள் வசம் உள்ளது.

எனவே, இணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதங்களின்படி, திரு.எம்.சுப்பிரமணியம், உதவி செயற் பொறியாளர், பழைய மண்டலம்–1, (புதிய மண்டலம்– 4) (09.12.2011 அன்று காலமானவர்)அவர்கள் மீதுள்ள அனைத்து தணிக்கை தடைகளும் நீக்கம் செய்யப்பட்டுள்ளதின் அடிப்படையில், தனியரை மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு 31.01.2011 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்தமைக்கு, சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 03.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“வயது முதிர்வு ஓய்வில் சென்றமைக்கு சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/1897/2009**

**தீர்மான எண்.520/2017** நாள்:10–08–2017

**மழைநீர் வடிகால் துறை – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் – சிப்பம்–2– ஓட்டேரி நல்லா நீர்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடுக்கான ஒப்பந்தம் திருவாளர்கள். சர்ட்டிபிகேஷன் இன்ஜினியர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது – பணிக்கால நீட்டிப்பிற்கான பின்னேற்பு அனுமதி.**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ஓட்டேரி நல்லா கால்வாய் நீர்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய்கள் அமைக்கும் பணிகளுக்கு (சிப்பம்–2) மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு பணிகளை நிறைவேற்ற திருவாளர்கள். சர்ட்டிபிகேஷன் இன்ஜினியர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட் என்ற (மத்திய அரசின் நிறுவனம்) நிறுவனத்திற்கு 04.01.2011 அன்று பணியாணை வழங்கப்பட்டு பணியானது 11.02.2011 அன்று தொடங்கப்பட்டது. மேற்சொன்ன நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 20 மாதங்களாகும்.

மேற்சொன்ன ஓட்டேரி நல்லா கால்வாய் நீர்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய்கள் அமைக்கும் பணி (சிப்பம்–2)யானது, பருவமழை, உள்ளாட்சி தேர்தல் மற்றும் பல்வேறு காரணங்களினால் தாமதப்பட்டதால் இப்பணியினை செயலாக்க 4 முறை கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. இதில் இறுதியாக 30.06.2015 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. எனவே, மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு ஒப்பந்ததாரராகிய திருவாளர்கள். சர்ட்டிபிகேஷன் இன்ஜினியர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட் அவர்களுக்கும் 30.06.2015 வரை ஒப்பந்தகால நீட்டிப்பு வழங்க மன்றத்தீர்மானம் எண்.488/2014, நாள்.31.09.2014ல்மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

ஏற்கனவே நீட்டிக்கப்பட்டுள்ள ஒப்பந்தகாலமான 31.12.2014 காலக்கட்டத்தில் அவர்களுக்கு ஜுன் 2014 முதல் டிசம்பர் 2014 மற்றும் மே 2015 வரையில் வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.35,64,206/– என்று கீழ்வருமாறு கணிக்கப்படுகிறது.

| வரிசை எண் | மாதம் | வழங்கப்பட வேண்டிய தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஜுன் 2014 | 334250.00 |
| 2 | ஜுலை 2014 | 331400.00 |
| 3 | ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2014 | 1276216.00 |
| 4 | டிசம்பர் 2014 | 330600.00 |
| 5 | ஜனவரி 2015 | 328825.00 |
| 6 | பிப்ரவரி மற்றும் மார்ச் 2015 | 532581.00 |
| 7 | ஏப்ரல் 2015 | 210334.00 |
| 8 | மே 2015 | 220000.00 |
| | மொத்தம் | 3564206.00 |

இது வரையில் மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள திருவாளர்கள்.சர்ட்டிபிகேஷன் இன்ஜினியர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட் அவர்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட ஒப்பத்தொகை ரூ.1,43,62,225/– ஆகும். இதில் மே மாதம் 2014 வரையில் வழங்கப்பட்ட தொகை ரூ.1,43,58,284/– ஆகும். தற்போது அவர்களுக்கு ஏற்கனவே நீட்டிக்கப்பட்ட ஒப்பந்த காலத்திற்கும் நீட்டிப்பு கோரும் ஒப்பந்த காலத்திற்கும் சேர்த்து வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.35,64,206/–ஆகும். இந்த இரு தொகைகளையும் சேர்த்தால் திருவாளர்கள். சர்ட்டிபிகேஷன் இன்ஜினியர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட் அவர்களின் ஒப்பத் தொகை ரூ.1,79,22,490/– என்று அதிகரிக்கிறது. இது ஒப்பளிக்கப்பட்ட ஒப்பந்த தொகையினை விட ரூ.35,60,265/–(24.82%) அதிகமாகும். ஒப்பளிக்கப்பட்டுள்ள ஒப்பந்த தொகையினை விட 10 சதவிகிதத்திற்கு மேல் கூடுதலாக வழங்கப்பட வேண்டுமாயின் அதற்கு மன்றத்தின் அனுமதி பெறுவது அவசியமாகும்.

**இந்த ஒப்பந்ததாரர் மத்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் எரிவாயுத் துறையின் நிர்வாகத்தின் கீழ் செயல்படும் அரசு நிறுவனமாகும்.**

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/1897/2009**

மேற்சொன்ன விவரங்களின் அடிப்படையில்,

1) திருவாளர்கள் சர்ட்டிபிகேஷன் இன்ஜினியர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட் அவர்களுக்கு ஓட்டேரி நல்லா கால்வாய் நீர்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய்கள் அமைக்கும் பணிகளுக்கு (சிப்பம்–2) தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு வழங்கப்பட்ட ஒப்பந்தகாலமான 01.01.2015 முதல் 30.06.2015 வரையிலான காலத்திற்கு பின்னேற்பு வழங்கவும்,
2) அதன் காரணமாக அவர்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட ஒப்பத்தொகையான ரூ.1,43,62,225/–ஐ விட ரூ.35,60,265/– (ரூபாய் முப்பத்தைந்து இலட்சத்து அறுபதாயிரத்து இருநூற்று அறுபத்தைந்து மட்டும்) கூடுதலாக வழங்க அனுமதியும் மற்றும் ஒப்பளிக்கப்பட்ட தொகையை விட அதிகமாக பணி மேற்கொண்டதற்கு பின்னேற்பும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி–நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 02.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**" 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி– நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**S.W.D.C.No.B5/1899/2010**

**Resolution No.521/2017** Date:10-08-2017

**Storm Water Drain Department-Third Party Quality Assurance for the Construction of Storm Water Drain and Canals (PackageIV) in Cooum Water Shed and Virugambakkam and Arumbakkam Water Shed in Chennai City under JNNURM Scheme-Contract awarded to M/s. Certification Engineers International Limited-Extension of Time for the contractor-Ratification for extension of contract period– Ratification Order issue.**

Sanction of the Council has been obtained vide Resolution No.518/2010, dated.30.12.2010, for the negotiated tendered amount of Rs.2,03,13,877.50 quoted by M/s. Certification Engineers International Limited (A Government of India Undertaking), for monitoring and ensuring the quality control of the construction work of storm water drain and canals under JNNURM Scheme in Cooum Water Shed, Virugambakkam Water Shed and Arumbakkam Water shed which is 1.60% of the construction value.

In the Resolution of Council, (Resolution of Council No.319/2013, dated.22.05.2013) it is found that the work order to the above company has been given on 04.01.2011 and the contract period is 26 months i.e. up to 03.03.2013. The work order was issued to M/s. Certification Engineers International Limited on 04.01.2011 and the work was commenced on 07.02.2011.

It submitted that the contract period for the above contractors executing the work in the above water sheds have been extended from 03.03.2013 to 30.06.2014 and accordingly sanction of the Council has been obtained for extension of Third Party Quality Control contract awarded to M/s. Certification Engineers International Limited up to 03.06.2014 vide Council Resolution No.536/2013 & Resolution No.297/2014, dated.30.05.2014.

The contract works covered in this Quality Control Contract awarded to M/s. Certification Engineers International Limited are (1) Construction of Storm Water Drain works in Virugambakkam and Arumbakkam Water Shed awarded to M/s. Chirag Infra Projects Pvt. Ltd., and (2) Construction of Storm Water Drain at Cooum Water shed awarded to M/s. Marg Ltd. The above watershed works in this package were completed before 30.06.2014.

Therefore, the contract period of this Third Party Quality Control has to be extended by one month from 01.07.2014 to 31.07.2014 as it is very essential to carryout quality control tests and submit a report, by virtue of the sanction accorded in this Resolution of Council from 03.03.2014 to 30.06.2014 for the contractors executing the work.

Now M/s. Certification Engineers International Ltd., the Third Party Quality Control Contractors, has claimed their final bill for a sum of Rs.2,25,173/- for the extended period i.e. month of July, 2014.

In this connection it is also submitted that, the approved contract value for the Third Party Quality Control is Rs.2,03,13,878/- and the amount so far paid to them is Rs.1,80,86,018/- and the balance sanctioned contract amount that could be paid is Rs.22,27,816/-, when the actual final bill amount of Rs.2,25,173/- claimed is less than the balance sanctioned amount of contract.

**S.W.D.C.No.B5/1899/2010**

Hence, ratification of the Special Officer-S.C(Works), S.C (T & F) and Council are requested for the extension of contract period to the Quality Control Contractor, M/s. Certification Engineers International Ltd., for one month from 01.07.2014 to 31.07.2014. Commissioner's note date 03.08.2017 is read.

**"Approved by Special Officer-Standing Committee(Works), Standing Committee(Taxation and Finance) and Council."**

******

**S.W.D.C.No.B5/1900/2009**

**Resolution No.522/2017** Date:10-08-2017

**Storm Water Drain Department-Third Party Quality Assurance and Quality Control services for the Construction of Storm Water Drain and Canals under JNNURM(Package V) Scheme in Royapuram Watershed area, North Buckingham Canal Watershed area, Centre Buckingham Canal water shed area and South Buckingham Canal water shed area in Chennai city under JnNURM scheme-Contract awarded to M/s. Certification Engineers International Limited- Ratification for extension of contract period– Ratification Order issue.**

Sanction of the Council has been obtained vide Resolution No.519/2010, dated.30.12.2010, for the negotiated tendered amount of Rs.1,86,95,772.38 quoted by M/s. Certification Engineers International Limited( A Government of India Undertaking), for monitoring and ensuring the quality control of the Royapuram Watershed area, North Buckingham Canal Watershed area, Centre Buckingham Canal water shed area and South Buckingham Canal water shed area in Chennai city which is 1.60% of the construction value.

In the Resolution of Council, (Resolution of Council No.238/2013, dated.26.04.2013) it is found that the work order to the above company has been given on 04.01.2011 and the contract period is 24 months i.e. up to 03.01.2013. The Work Order was issued to M/s. Certification Engineers International Limited on 04.01.2011 and the work was commenced by them on 07.02.2011.

It has also been stated therein that the contract period for the above contractors executing the work in the above water sheds have been extended from 04.01.2013 to 30.06.2014 and accordingly sanction of the Council has been obtained for extension of Third Party Quality Control contract awarded to M/s. Certification Engineers International Limited up to 03.07.2013 to 30.06.2014 vide Council ResolutionNo.537/2013 & Resolution No.292/2014, dated.30.05.2014

The contract works covered in this Quality Control Contract awarded to M/s. Certification Engineers International Limited are (1) Construction of storm water drain works in North Buckingham Canal water shed was awarded to M/s. Siva Engineering Company, (2) Construction of storm water drain works in South Buckingham Canal water shed was awarded to M/s. RPP Constructions P. Ltd., (3) Construction of Storm Water Drain works in Center Buckingham Canal water shed was awarded to M/s. Roman Tormat Limited and (4) Construction of Storm Water Drain works in Royapuram water shed was awarded to M/s. RAUS Constructions P. Ltd. All the above four watershed works in this package were completed before 30.06.2014.

Therefore, the contract period of this contract of Third Party Quality Control has to be extended by one month from 01.07.2014 to 31.07.2014 as it is very essential to carryout quality control tests and submit a report by virtue of the sanction accorded in this Resolution of Council from 03.03.2014 to 30.06.2014 for the contractors executing the work.

At present M/s. Certification Engineers International Ltd., the Third Party Quality Control contractors has claimed their final bill for a sum of Rs.3,04,767/- for the extended period (i.e.) for the month of July, 2014.

The approved contract value for the third party quality control is Rs.1,86,95,772.38. The amount so far paid to them is Rs.1,81,82,007/- and the amount now claimed by M/s. Certification Engineers International Ltd., as final bill is Rs.3,04,767/- which is within the balance amount of Rs.5,13,765/- as per the approved contract value.

**S.W.D.C.No.B5/1899/2010**

Hence, ratification of the Special Officer-S.C(Works), S.C (T & F) and Council are requested for the extension of contract period to the Quality Control Contractor, M/s. Certification Engineers International Ltd., for one month from 01.07.2014 to 31.07.2014.Commissioner's note date 02.08.2017 is read.

**"Approved by Special Officer-Standing Committee(Works), Standing Committee(Taxation and Finance) and Council."**

******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/647/2017**

**தீர்மான எண்.523/2017** நாள்:10–08–2017

**நிலம் மற்றும் உடைமைத் துறை – மண்டலம்–6, வார்டு–70 – பெரம்பூர் நெடுஞ்சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பல்நோக்கு கட்டிடத்தை பெரம்பூர் ஐரோடு பயன்பெறுவோர் கூட்டுறவு பண்டக சாலை லிட் –XNC-623–க்கு நியாய விலை கடைகள் நடத்த ஒதுக்கீடு செய்ய அனுமதி.**

6–வது மண்டல அலுவலர் அவர்களின் 31.03.2017 நாளிட்ட குறிப்பில் பெரம்பூர் நெடுஞ்சாலை பயன்பெறுவோர் கூட்டுறவு பண்டக சாலை லிட்-XNC-623(CFO-13 & CFO-14) ஆகிய நியாய விலை கடைகளில் சுமார் 3500 குடும்ப அட்டைகளுக்கு பொது விநியோக திட்டத்தின் கீழ் பல ஆண்டுகளாக இயங்கி வருவதாகவும், மேற்காணும் நியாய விலை கடைகளுக்கு வார்டு–70, பெரம்பூர் நெடுஞ்சாலையில் காலியாக உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பல்நோக்கு கட்டிடத்தை ஒதுக்கீடு செய்து தருமாறும் 02.11.2016 நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்டதாகவும், இதனை தொடர்ந்து 27.02.2017 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட நியாய விலை கடைகளுக்கு மன்ற தீர்மான எண். 312/13, நாள். 26.04.2013–ன்படி ஒரு சதுர அடிக்கு ரூ.5/– என மாத வாடகை நிர்ணயம் செய்து தருமாறு கோரப்பட்டுள்ளது.

மேலும், 810 சதுர அடி பரப்பளவு கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு–70, பெரம்பூர் நெடுஞ்சாலையிலுள்ள பல்நோக்கு கட்டிடத்தை மேற்கண்ட மன்ற தீர்மானம் எண். 312/13, நாள். 26.04.2013–ன்படி மாத வாடகை ஒரு சதுர அடிக்கு ரூ.5– என வாடகை நிர்ணயம் செய்து நியாய விலை கடைகள் நடத்த பெரம்பூர் நெடுஞ்சாலை கூட்டுறவு சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்யவும், நிர்ணயிக்கப்படும் மாத வாடகை அடிப்படையில் 12 மாத வாடகையை முன்பணமாக செலுத்த வேண்டும் என்றும் கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்ய இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒதுக்கீடு செய்வதற்கு சிறப்பு அதிகாரி மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மண்டலம்–6, வார்டு–70, பெரம்பூர் நெடுஞ்சாலையில் சுமார் 810 சதுர அடி பரப்பளவை கொண்ட கட்டிடம் எந்த நிதி ஒதுக்கீட்டின் கீழ் கட்டப்பட்டது? என்றும் எந்த உபயோகத்திற்காக கட்டப்பட்டது என்பது தொடர்பான விவரங்களுடன் கூடிய அறிக்கையை உடனடியாக இத்துறைக்கு அனுப்பிவைக்குமாறு 27.04.2017 நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மண்டல அலுவலர்–6 அவர்களின் 09.06.2017 நாளிட்ட கடிதத்தில் மண்டலம்–6, வார்டு–70, பெரம்பூர் நெடுஞ்சாலையில் அங்கன்வாடி இயங்கி வந்ததாகவும், கட்டிடம் பழுதானதால் அந்த அங்கன்வாடி மங்களபுரம் அங்கன்வாடி மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும், பின்னர் அக்கட்டிடம் மிகவும் பாழடைந்து பயன்படுத்தாத நிலையில் இருந்ததாகவும், அதனை பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதியிலிருந்து (Capital Fund) சுமார் ரூ.6.50 லட்சம் கொண்டு சீரமைக்கப்பட்டு பல்நோக்கு கட்டிடமாக மாற்றப்பட்டுள்ளதாகவும், அதை நியாய விலை கடைகள் நடத்த ஒதுக்கீடு செய்து தருமாறும் கோரப்பட்டுள்ளது.

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/647/2017**

எனவே, மண்டலம்–6, வார்டு –70, பெரம்பூர் நெடுஞ்சாலையில் காலியாக உள்ள 810 ச.அடி பரப்பளவை கொண்ட பல்நோக்கு கட்டிடத்தை நியாய விலை கடைகள் நடத்த மாமன்ற தீர்மான எண்.312/2013, நாள் 26.04.2013–ன்படி சதுரஅடிக்கு ரூ.5/– வீதம் 810 ச.அடிக்கு ரூ.4,050/– னை மாத வாடகையாகவும், 12 மாத வாடகை தொகையாக ரூ.48,600/– முன்பணமாக செலுத்த வேண்டும் என்றும், கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்யவிருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.92, நாள்.03.07.2007– ன்படி வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும் கட்டிடங்களின் வாடகை தொகையினை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15 விழுக்காடு உயர்த்தவும், மேற்படி இடத்தை பெரம்பூர் நெடுஞ்சாலை பயன்பெறுவோர் கூட்டுறவு பண்டக சாலை லிட் (XNC-623)-க்கு ஒதுக்கீடு செய்வதற்கு சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 02.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“கூட்டுறவு பண்டகசாலைக்கு ஒதுக்கீடு செய்ய சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/033/2016</u>**

**தீர்மான எண்.524/2017** நாள்:10–08–2017

**<u>நிலம் மற்றும் உடைமைத்துறை – மண்டலம்–10, வார்டு–134, எழும்பூர் வட்டம், புலியூர் கிராமம், பிளாக் எண்.45, புல எண்.2/1ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான தனி நிலத்தில் R–2 கோடம்பாக்கம் புதிய காவல் நிலையம் கட்ட நில ஒதுக்கீடு செய்ய அனுமதி.</u>**

மண்டலம்–10, வார்டு–134–ல் கார்ப்பரேஷன் காலனி சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தில் R–2 காவல் நிலையம் கட்ட இட ஒதுக்கீடு செய்யுமாறு தியாகராயநகர் சரக காவல் உதவி ஆணையாளர் அவர்களின் 22.02.2015 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் 21.01.2016 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட இடத்தை 10–வது மண்டல அலுவலர் மூலம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி இடமானது வார்டு–134 கார்பரேஷன் காலனி சாலையில் பகுதி–31 அலுவலகம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சமுதாய நலக்கூடத்திற்கு இடையில் பிளாக் எண்.45 சர்வே எண்.2/pt–ல் 3675 ச.அடியில் அங்கன்வாடி கட்டிட மைய எண்.4048–ம், வரி மதிப்பீட்டாளர் அறை, துப்புரவு பணியாளர்களின் ஓய்வு, உடை மாற்றும் அறை மற்றும் பிளாஸ்டிக் அறவை இயந்திரம் உள்ள அறை (Plastic Shredder machine Room) ஆகியவை முறையே செயல்பட்டு வருவதாகவும், மேலும் துப்புரவு பணியாளர்களின் ஓய்வு அறை, பிளாஸ்டிக் அறவை இயந்திரம் உள்ள அறைகள் 1980–ல் கட்டப்பட்ட பழுதடைந்த ஆஸ்பெஸ்டாஸ் கூரையுடன் உள்ள கட்டிடங்கள் எனவும், அவற்றின் தற்போதைய புத்தக மதிப்பு ஏதுமில்லை. அங்கன்வாடி மைய கட்டிடம் 2008–09–ல் மதிப்பீடு ரூ.3,15,000/–க்கு கட்டப்பட்டதாகவும் அதன் தற்போதைய புத்தக மதிப்பு ரூ.2,17,000/– ஆகும். மேற்குறிப்பிட்ட அங்கன்வாடி மைய கட்டிடத்தில் ஒரே ஒரு குழந்தை மட்டும் பராமரிக்கப்பட்டு வருவதால் அந்த குழந்தையை அருகில் உள்ள காமராஜ் காலனி 3–வது தெருவில் இயங்கும் 3 அங்கன்வாடி மைய கட்டிடங்களில் ஏதேனும் ஒரு அங்கன்வாடி மைய கட்டிடத்தில் பராமரிக்க அனுமதி வழங்கலாம் எனவும், தற்பொழுது காவல் நிலையம் கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்ட இடத்தின் பரப்பளவு 3675 சதுர அடி என தெரிவித்து மேற்படி நிலத்தினை R–2 காவல் நிலையத்திற்கு வழங்க வார்டுகுழு தீர்மானம் (வார்டுகுழு தீர்மான எண்.296, நாள். 16.4.2015) நிறைவேற்றப்பட்டு மன்றத்தின் அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி நிலத்தினை இவ்வலுவலக தனி வட்டாட்சியர்/நி.ம.உ.து(மத்தியம்) அவர்களால் புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி நிலத்திலுள்ள பிளாஸ்டிக் அறவை இயந்திரம் உள்ள அறை மற்றும் துப்புரவு பணியாளர்களின் ஓய்வறை பழுதடைந்த நிலையில் இருப்பினும் பயன்பாட்டில் இருந்து வருவதாகவும், அங்கன்வாடி மைய கட்டிடம் நல்ல நிலையில் மாநகராட்சியின் பராமரிப்பில் மையம் செயல்பட்டு வருவதாகவும், அங்கன்வாடி மைய கட்டிட அளவு 1189 ச.அடி, துப்புரவு பணியாளர்களின் ஓய்வு அறை 800 .சஅடி, பிளாஸ்டிக் அறவை இயந்திரம் உள்ள அறை 800 ச.அடி கட்டிடமாக புலத்தில் காணப்படுவதாகவும், மேலும் நகர நில அளவை பதிவேட்டில் எழும்பூர் வட்டம், புலியூர் கிராமம், கார்பரேஷன் காலனி, பிளாக் எண்.45, சர்வே எண்.2/1 (பழைய புல எண்.–33)–ல் பாகம்–ரயத்துமனை பரப்பளவு 11 காணி 22 மனை 496 சதுர அடி அடங்கல்படி சென்னை கார்பரேஷன் கட்டிடம் என பதிவாகியுள்ளதாகவும், மேற்படி R–2 காவல் நிலையம் கட்டுவதற்கு கோரப்படும் புலம் தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிடங்கள் அமைந்த பகுதியாகவும், மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இருப்பதாலும் குறிப்பிட்ட 3 கட்டிடங்களை அகற்றவும் காவல் நிலையம் கட்டுவதற்கு தேவைப்படும் 3675 ச.அடி நிலம் வழங்குவதற்கு விதிமுறைக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளலாம் என 21.01.2016 நாளிட்ட ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/033/2016</u>

மேற்கண்ட இடத்தில் இயங்கி வரும் அங்கன்வாடி மைய கட்டிட எண்.4048–ல் உள்ள கட்டிடத்தை அகற்றி அதனை R-2 காவல் நிலைய கட்டிடம் கட்ட காவல் துறைக்கு ஒதுக்கீடு செய்யும் பொருட்டு அங்கன்வாடி மைய குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலரிடமிருந்து தடையின்மைச்சான்று கடிதம் பெற்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு 05.08.2016 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் 10–வது மண்டல அலுவலரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டு பதில் எதிர் நோக்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக மாவட்ட வருவாய் அலுவலரின் 12.08.2016 நாளிட்ட கடிதத்தில் எழும்பூர் வட்டாட்சியர் அறிக்கையின் அடிப்படையில் எழும்பூர் வட்டம், புலியூர் கிராமம், பிளாக் எண்.45, சர்வே எண்.2/1–ல் உள்ள 3675 ச,அடி பரப்பளவுள்ள நிலத்திற்கு சதுர அடி ஒன்றின் மதிப்பு ரூ.7000/–(ரூபாய் ஏழாயிரம் மட்டும்) என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, மண்டலம்–10, வார்டு–134, கார்பரேஷன் காலனி, பிளாக் எண்.45, சர்வே எண்.2/1ல் உள்ள 3675 ச.அடி நிலத்திற்கான சந்தை விலை மதிப்பு தொகை ரூ.2,57,25,000/– மற்றும் இந்நிலத்தில் அமைந்துள்ள அங்கன்வாடி மைய கட்டிட மதிப்பு தொகை ரூ.2,17,000/– ஆக மொத்தம் ரூ.2,59,42,000/–(ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்தொன்பது இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரம் மட்டும்) "வருவாய் அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் காசோலையாக செலுத்தும் பட்சத்தில் மேற்படி நிலத்தை காவல் துறைக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என 17.08.2016 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் சென்னை பெருநகர காவல் ஆணையாளருக்கு தெரிவிக்கப்பட்டது.

தெற்கு மண்டல காவல் இணை அணையாளரின் 29.06.2017 நாளிட்ட கடிதத்தில், மேற்படி இடத்திற்குண்டான சந்தை விலையை செலுத்துவதற்கு அரசாணை எண். 392, உள் (காவல்–X) துறை, நாள்: 25.04.2017–ஆம் நாளிட்ட அரசாணையில் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆதலால் கோடம்பாக்கம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கார்பரேஷன் காலனி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பிளாக் எண்.45, சர்வே எண். 2/1 பாகம், வார்டு–134–ல் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்துடன் கூடிய 3675 சதுர அடி நிலத்தில் ஆர்–2 கோடம்பாக்கம் புதிய காவல் நிலையம் கட்ட காவல் துறைக்கு முன்நுழைவு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–10, வார்டு–134, எழும்பூர் வட்டம், புலியூர் கிராமம், கார்ப்பரேஷன் காலனியிலுள்ள பிளாக் எண். 45, புல எண். 2/1ல், 3675 சதுர அடி பெருநகர சென்னை மாநகராட்சி (துனி) நிலத்திற்குண்டான நிலக்கிரையத்தொகை ரூ.2,59,42,000/–ஐ, வருவாய் அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி என்ற பெயரில் வரைவு காசோலையாக செலுத்தும் பட்சத்தில் மேற்படி நிலத்தை ஆர்–2, கோடம்பாக்கம் புதிய காவல் நிலையம் கட்ட காவல் துறைக்கு ஒதுக்கீடு செய்வதற்கு சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"சிறப்பு அதிகாரி–நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/1217/2017</u>**

**தீர்மான எண்.525/2017** நாள்:10–08–2017

**<u>நிலம் மற்றும் உடைமைத் துறை – மண்டலம்–2, பகுதி–4, வார்டு–16 – சடையாங்குப்பம் கிராமம் – புல எண்.29/1, மேய்க்கால் வகைப்பாடு கொண்ட மொத்த பரப்பு – 23.02.5 ஹெக்டேர் நிலத்தில் 9.75.0 ஹெக்டேர்ஸ் நிலம் – சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் கனரக சரக்கு முனையம் அமைக்க நில உரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சி இசைவினை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிப்பதற்கு அனுமதி.</u>**

2–வது மண்டல அலுவலரின் 22.06.2017 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–2 (மணலி), பகுதி–4, வார்டு–16 சடையாங்குப்பம் கிராமம் (திருவொற்றியூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம்), புல எண்.29/1 மேய்க்கால் வகைப்பாடு கொண்ட நிலத்தில் மொத்த பரப்பு 23.02.5 ஹெக்டேரில் 9.75.0 ஹெக்டேர்ஸ் நிலம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு (CMDA) கனரக சரக்கு முனையம் அமைக்க நில உரிமை மாற்றம் செய்வது குறித்து, மேற்படி நிலம் மேய்க்கால் நிலம் என்பதால், அரசாணை நிலை எண்.186, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளர் (காப2) துறை நாள். 11.12.2001ன்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு நில உரிமை மாற்றம் கோரும் மேய்க்கால் நிலமான 9.75.0 ஹெக்டேர் நிலத்திற்கு, ஹெக்டேருக்கு ரூ.15,000/– என்ற விதத்தில் மதிப்பிட்டதில் மொத்தம் ரூ.1,46,250/–னை(ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து இருநூற்றைம்பது மட்டும்) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்துமாறு பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அவர்களுக்கு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) அவர்கள் மூலம் 05.06.2017 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு நிலமாற்றம் செய்யும் பொருட்டு நிலச் சீர்திருத்த கட்டணமான ரூ.1,46,250/– (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து இருநூற்றைம்பது மட்டும்)–னை பெற்று கருவூலத்தில் எந்த பிரிவு மற்றும் கணக்கு தலைப்பு எண்ணின் கீழ் தொகையை செலுத்தவேண்டும் என்ற விவரத்தினை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கண்ட நில சீர்திருத்த கட்டணத்தை உரிய குறியீட்டு எண்.140500300 என்ற கணக்கு தலைப்பின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்துமாறும் மேலும், மேற்கண்ட மேய்க்கால் நிலத்தை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை தெரிவிக்க மன்றத்தின் ஒப்புதல் பெறும் பொருட்டு மேற்படி நிலத்தின் புல வரைப்படம், 'அ' பதிவேடு, அடங்கல் மற்றும் FMB Sketch ஆகியவற்றுடன் அறிக்கையாக பேரரணை அனுப்பிவைக்குமாறு 28.06.2017 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் 2–வது மண்டல அலுவலரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

2–வது மண்டல மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலரின் 07.07.2017 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட நிலத்திற்குண்டான நிலச் சீர்திருத்த கட்டணத்தை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி பெயரில் ரூ.1,46,250/– (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து இருநூற்றைம்பது மட்டும்) காசோலையாக (எண். 966775, நாள். 29.06.2017) பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் (செலுத்து சீட்டு எண். V/2017-18/0008788, நாள். 30.06.2017) செலுத்தப்பட்டதாகவும், மேலும் பெருநகர வளர்ச்சிக் குழுமம் கனரக சரக்கு முனையம் அமைக்க அவ்விடத்தில் வசிக்கும் பொது மக்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்காததாலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லாத நிலையில் இதனை கருத்தில் கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் அனுமதி மற்றும் சிறப்பு அலுவலர் அவர்களின் தீர்மான ஒப்புதல் பெற்று தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/1217/2017**

தனிவட்டாட்சியர் / நிமஉது அவர்களின் 19.07.2017 நாளிட்ட புலத்தணிக்கை குறிப்பில் மேற்படி நிலமானது காலியாகவும், வடக்கே சென்னை கன்டைனர்ஸ் யார்டும், தெற்கே சடையாங்குப்பம் நெடுஞ்சாலையும், மேற்கே தனியார் இரசாயன தொழிற்சாலையும், கிழக்கே ரெடிமிக்ஸ் பிளாண்ட் அமையப் பெற்றுள்ளதாகவும், இப்புலத்தின் அளவு வடக்கு தெற்காக 195 மீட்டர் நீளமும், கிழக்கு மேற்காக 75 மீட்டர் பரப்பளவுடன் அமைந்துள்ளதாகவும், மேலும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் கனரக சரக்கு முனையம் அமைக்க அவ்விடத்தில் வசிக்கும் பொது மக்கள் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கவில்லை என்பதால் மேற்படி புலத்தில் கனரக சரக்கு முனையம் அமைக்க சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–2, வார்டு–16 சடையாங்குப்பம் கிராமம், புல எண்.29/1 சர்கார் புறம்போக்கு மேய்க்கால் வகைப்பாடு மொத்த பரப்பு 23.02.5 ஹெக்டேர் நிலத்தில் 9.75.0 ஹெக்டேர் நிலத்தினை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் கனரக சரக்கு முனையம் அமைக்கும் பொருட்டு நில உரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிப்பதற்கு சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 02.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

## நி.மஉ.து.ந.க.எண்.எல்இ9/3399/2003

**தீர்மான எண்.526/2017** **நாள்:10–08–2017**

**நிலம் மற்றும் உடைமைத்துறை –மண்டலம்–8 – அமைந்தகரை கிராமம் – பிளாக் எண்.6, 8 மற்றும் 18 புல எண்.22 மற்றும் பலவற்றில் உள்ள நிலங்கள் வெங்கடசாமிபுரம் திட்டப் பகுதிக்காக தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கு மாநகராட்சியின் இசைவினை தெரிவிப்பதற்கு அனுமதி.**

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநரின் கடிதங்களில் வெங்கடசாமிபுரம் திட்டப்பகுதியில் கீழ்கண்ட புலங்களில் உள்ள நிலங்களை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கு சென்னை மாநகராட்சியின் தடையின்மையினை அளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

| வ. எண். | கிராமம் | பிளாக் எண். | புல எண். | வகைப்பாடு | மொத்த பரப்பளவு கா.கி. | வாரியம் கோரும் பரப்பளவு ஹெ.ஏர்.சமீ | உரிமைதாரர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | எழும்பூர் | 8 | 84/3 | | 2.05.56.1 ச.மீ | 0.28.30.0 | செ. மா. (பொ) | |
| 2 | எழும்பூர் | 8 | 84/4 | | 0.40.36.7 ச.மீ | 0.05.09.0 | செ. மா. (பொ) | |
| 3 | அமைந்தகரை | 6 | 22 | அரசு புறம்போக்கு | 0.11.25.0 ச.மீ | 0.01.96.0 (196 ச.மீ.) | செ. மா. | தெரு |
| 4 | அமைந்தகரை | 6 | 26 | அரசு புறம்போக்கு | 0.05.96.5 ச.மீ | 0.01.94.0 (194 ச.மீ.) | செ. மா. | தெரு |
| 5 | அமைந்தகரை | 6 | 28 | அரசு புறம்போக்கு | 0.02.95.5 ச.மீ | 0.00.24.0 (24 ச.மீ.) | செ. மா. | தெரு |
| 6 | அமைந்தகரை | 6 | 30 | அரசு புறம்போக்கு | 0.04.79.0 ச.மீ | 0.00.16.0 (16 ச.மீ.) | செ. மா. | தெரு |
| 7 | அமைந்தகரை | 18 | 2 | அரசு புறம்போக்கு | 0.08.79.5 ச.மீ | 0.00.16.0 (16 ச.மீ.) | செ. மா. | தெரு |
| | | மொத்தம் | | | 2.76.72.8 ச.மீ | 37ஏர், 85.0 ச.மீ | | |

மேற்கண்ட நிலங்களை இவ்வலுவலக சார் ஆய்வாளர் புலத்தணிக்கை செய்து வரிசை எண்.1, 2–இல் கண்டுள்ள நிலங்கள் சென்னை மாநகராட்சி (பொ) என நிலப்பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், வரிசை எண்.3 முதல் 7 வரையிலான நிலங்கள் வெங்கடசாமிபுரம் தெரு என நிலப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட புலங்களில் கூரை வீடுகளும், கட்டிடங்களும் உள்ளன எனவும், காலி இடம் ஏதும் இல்லை என தெரிவித்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

மேற்கண்ட நிலங்களை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்வது குறித்து அவ்விடத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தனது திட்டத்தினை செயல்படுத்துவதற்காக இயற்றப்பட்ட வாரிய தீர்மான நகலினை அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தை கோரியதில் வாரிய தீர்மான நகல் வாரியத்தின் வசம் இல்லை என தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தெரிவித்துள்ளது.

மேற்படி நிலத்தின் தற்போதைய நிலை குறித்து தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய சார் ஆய்வாளருடன் தனி வட்டாட்சியர்/நி.ம.உ.து அவர்கள் இணைந்து கூட்டு புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டதில் அங்கீகரிக்கப்பட்ட திட்ட வரைப்படத்தில் மேற்கண்ட திட்டப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட சாலைக்கான நிலம் 40அடியாக குறிக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் தற்போது சாலையானது 20 அடியாக காணப்படுவதாகவும் சாலையின் இருபுறங்களும் வீடுகள் மூலம் ஆக்கிரமனம் செய்யப்பட்டுள்ளதாகவும், இத்திட்டம் நிறைவேற்றப்பட்ட வாரிய தீர்மான நகலை வாரியத்திடம் கோரலாம் எனவும், மேலும் புலத்தில் குடியிருப்புகள் கட்டிடங்கள் சாலை வசதி, மின் வசதி, குடிநீர் வசதி ஆகியவை நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், சாலை வகைப்பாடு செய்யப்பட்ட நிலத்தில் அமைந்துள்ள வீடுகள் குறித்து வாரியத்திடம் விவரம் பெற்று மேல் நடவடிக்கை தொடரலாம் என தனிவட்டாட்சியர் அவர்களின் 28.09.2015 நாளிட்ட ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நி.மஉ.து.ந.க.எண்.எல்இ9/3399/2003**

மேற்கண்ட தனி வட்டாட்சியர்/நி.ம.உ.து–வின் ஆய்வறிக்கையின்படி மேற்படி புலத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் திட்டம் செயல்படுத்துவதற்காக இயற்றப்பட்ட வாரிய தீர்மான நகலினையும், மேலும் திட்ட வரைப்படத்தில் 40 அடி சாலையானது தற்போது அகலம் குறைந்து 20 அடி சாலையாக இருபுறமும் வீடுகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது குறித்து விரிவான அறிக்கை அளிக்குமாறு தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய மேலாண்மை இயக்குநரிடம் 28.09.2015 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய மேலாண்மை இயக்குநரின் 13.02.2017 நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியில் கோரப்பட்ட வாரிய தீர்மானம் எண்.288 நாள்.02.11.1981 ன் நகல் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் ஒப்புதல் பெறப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் இத்துடன் இணைத்து அனுப்புவதாகவும், மேலும் ஒப்புதல் பெறப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தின்படி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் ஆய்வு செய்து அமைந்தகரை கிராமம், புல எண்.6, 8 மற்றும் 18–ல் மற்றும் பலவற்றிலுள்ள நிலங்களை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய மாநகராட்சியின் இசைவினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி நிலமானது வருவாய்துறையிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்களில் சர்கார் புறம்போக்கு என பதிவாகியுள்ளது. ஆனால் இத்துறையில் பராமரிக்கப்படும் பதிவேடுகளை ஆய்வு செய்ததில் அமைந்தகரை கிராமம், பிளாக் எண்.6–ல் புல எண்.22, 26, 28 மற்றும் 30–ல் உள்ள நிலங்கள் **இரயத்துமானாவாரி** என பதிவாகியுள்ளதால் இந்நிலமானது பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பட்டா நிலம் என தெரிய வருகிறது.

மேலும், அரசாணை எண்.35, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள். 17.02.1997–ன்படி மாநகராட்சிக்கு சொந்தமான பட்டா நிலங்களில் குடிசைகள் மூலமாக ஏற்கனவே ஆக்கிரமிக்கப்பட்டிருந்தால் அந்நிலமானது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு மட்டும் தேவையெனில் மனை ஒன்றுக்கு ரூ.10,000/– மட்டும் பெற்றுக் கொண்டு தமிழ்நாடு குடிசைமாற்று வாரியதிற்கு நிலமாற்றம் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, அரசாணையின்படி மேற்கண்ட நிலத்திற்கு மனை ஒன்றுக்கு ரூ.10,000/– என கணக்கிட்டு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தும் பட்சத்தில் மேற்படி நிலத்தை தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு நிலமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தை 24.03.2017 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய முதன்மை செயலர்/மேலாண்மை இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய முதன்மைச்செயலர் / மேலாண்மை இயக்குநரின் 25.04.2017 நாளிட்ட கடிதத்தில் மேற்படி நிலத்திற்கு அரசாணை எண்.35 நாள்.17.02.1997 –ன்படி மனை ஒன்றுக்கு ரூ.10,000/– வீதம் நிலக்கிரயத் தொகையாக வாரியத்தால் சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்படும் என்றும் இந்நிலத்தினை வாரியத்தின் பெயரில் நில மாற்றம் செய்ய மாநகராட்சி இசைவினை தெரிவிப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றி நிலம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கண்ட சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இரயத்துமானவாரி வகைப்பாடு கொண்ட நிலத்திற்கு அரசாணை எண்.35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.17.02.1997–ன்படி மனை ஒன்றுக்கு ரூ.10000/– வீதம் (446 ச.மீ. = 4800 ச.அடி) பரப்பளவு நிலத்திற்கு நில கிரயத்தொகையாக ரூ.20,000/– ஐ **“வருவாய் அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி”** என்ற பெயரில் வரைவு காசோலையாக இத்துறைக்கு செலுத்தும் பட்சத்தில் மேற்படி நிலத்தை வாரியத்திற்கு நில மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள இயலும் என 15.06.2017 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய முதன்மைச் செயலர்/மேலாண்மை இயக்குநரின் 29.06.2017 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட திட்டப்பகுதிக்கு சம்பந்தமாக உயர்நீதி மன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட காலக்கெடு தீர்ப்பின்படி வாரியத்தில் பெயரில் நில உரிமை மாற்றம் செய்யப்பட வேண்டிய அவசியமாகிறது என்றும், ஆதலால் அரசாணை எண்.35, நாள். 17.02.1997–ன்படி மனை ஒன்றுக்கு ரூ.10,000/– வீதம் வாரியம் செலுத்தும் என்றும் இந்நிலத்தினை வாரியத்தின் பெயரில் நிலமாற்றம் செய்ய மாநகராட்சி இசைவினை தீர்மானம் நிறைவேற்றி நிலம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே,

(அ) மேற்கண்ட பட்டியலில் காணும் வரிசை எண்.1 மற்றும் 2–ல் கண்டுள்ள மண்டலம்–8, எழும்பூர் கிராமம், பிளாக் எண்.8, புல எண்.84/3 மற்றும் 84/4–ல் 3339 ச.மீ பரப்பளவுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி (பொது) வகைப்பாடு கொண்டுள்ள நிலத்தை வெங்கடசாமிபுரம் திட்டப்பகுதிக்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய சென்னை மாவட்ட ஆட்சியருக்கு துறப்பு செய்வதற்கும்,

(ஆ) மேலும் வரிசை எண்.3 முதல் 7 வரையுள்ள மண்டலம்–8, அமைந்தகரை கிராமம், பிளாக் எண். 6, 18, புல எண். 22, 26, 28, 30 மற்றும் 2–ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி இரயத்து மானாவாரி வகைப்பாடு கொண்ட 446 ச.மீ (4800 சதுர அடி) பரப்பளவு நிலத்தை வெங்கடசாமிபுரம் திட்டப்பகுதிக்காக மனை ஒன்றுக்கு ரூ.10,000/– அடிப்படையில் நிலக் கிரயத் தொகை பெற்று கொண்டு கீழ்கண்ட நிபந்தனைக்குட்பட்டு தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு நிலமாற்றம் செய்வதற்கு,

**நிபந்தனைகள்:–**

1. இத்திட்டப்பகுதியிலுள்ள சாலைகள், பொதுக் கழிப்பிட நிலங்கள் மற்றும் திறந்தவெளி நிலங்கள் (பூங்கா மற்றும் விளையாட்டு திடல்) போன்றவைகளை தானப்பத்திரம் மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உரிய முறையில் வாரியம் ஒப்படைக்க வேண்டும்.
2. இத்திட்டப்பகுதியில் ஏற்கனவே பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் சாலைகள், மருத்துவமனைகள், பொதுக் கழிப்பிடங்கள், பள்ளிகள் மற்றும் அலுவலகங்கள் போன்றவைகள் இருந்தால் அவைகள் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும்.

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 02.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**ம.14.வ.து.ந.க.எண்.ஆர்2/0095/2017**

**தீர்மான எண்.527/2017** **நாள்:12–08–2017**

**மண்டலம் 14– வார்டு–169 –உள்ளகரம்– புழுதிவாக்கம்– பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு – வாடகை நிர்ணயம் செய்ய அனுமதி.**

மண்டல அலுவலர்–14 அவர்களின் 01.02.2017 நாளிட்ட குறிப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–14, வார்டு–169 உள்ளகரம்–புழுதிவாக்கம் பேருந்து நிலையத்தில் பல்நோக்கு கட்டிடம் கட்டும் பணிக்குரூ. 39,85,000/–மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்ததாரால் பணி மேற்கொள்ளப்பட்டு 18.05.2016 அன்று கட்டிட கட்டுமான பணி முடிக்கப்பட்டதாகவும், இந்த பல்நோக்கு கட்டிடத்தில் 4 கடைகள் உள்ளது என்றும், அதற்கான அளவுகளை தெரிவித்து வாடகை நிர்ணயம் செய்ய மேல்நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதையடுத்து மண்டலம்–14ல் வாடகை நிர்ணயகுழுவால் அனுமதி அளிக்கப்பட்டு வாடகை நிர்ணயம் செய்து வணிகவளாக குழுவின் தீர்மான எண்–2, நாள் 01.02.2017ன்படி தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு வாடகை நிர்ணயம் செய்யும் பொருட்டு சிறப்பு அலுவலர் /ஆணையர் (மன்றம்) ஆணை வேண்டி மண்டல அலுவலர்–14 அவர்களின் 13.02.2017 நாளிட்ட குறிப்பின் வாயிலாக வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களுக்கு கோப்பு அனுப்பப்பட்டது.

உதவி வருவாய் அலுவலர், வட்டார அலுவலகம் (தெ) அவர்களின் 14.03.2017 நாளிட்ட குறிப்பில் மண்டலம்–14, வார்டு–169, உள்ளகரம்–புழுதிவாக்கம் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு தற்போதைய சந்தைய விலை அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்ய சிறப்பு அலுவலர் / ஆணையர் (மன்றம்) அவர்களின் ஒப்புதல் பெறவேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதில் மேற்படி வணிக வளாகத்தின் அருகில் உள்ள பழைய வணிகவளாகத்தின் வாடகையினை தெரிவிக்குமாறும், மேலும் கோப்பில் இணைக்கப்பட்டுள்ள வாடகைதாரர் குத்தகை ஒப்பந்தத்தில் 230ச.அடி பரப்பளவு உள்ள வணிகவளாகத்திற்கு ரூ.9000/–ம் குறிப்பிட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் ஒரு ச.அடி. ரூ. 39/– எனவும் ஆனால் புதிய வணிக வளாகத்திற்கு ச.அடிக்கு ரூ.25/– என மதிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்து இந்த வாடகை முரண்பாட்டிற்கு விளக்கத்துடன் கோப்பினை வட்டார துணை ஆணையர் (தெ) அவர்களுக்கு மீள சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டதன் பொருட்டு அதற்கான விளக்கத்தை அளித்து 20.03.2017 நாளிட்ட குறிப்பின்படி கோப்பு மீளசமர்ப்பிக்கப்பட்டது.

உதவி வருவாய் அலுவலர், வட்டார அலுவலகம் (தெ) அவர்களின் 25.04.2017 நாளிட்ட குறிப்பில் மண்டலம்–14, வார்டு–169, உள்ளகரம்–புழுதிவாக்கம் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாகம் அமைந்துள்ள பகுதி பொதுமக்கள் அதிக நடமாட்டம் இல்லாத பகுதி என்றும் இந்த பல்நோக்கு கட்டிடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உதவும் வகையில் அரசு நியாயவிலை கடைக்கும், அரசு தயாரிக்கும் சுத்தமான குடிநீர் பயன்பாட்டிற்கும் உள்ளதால் வெளி சந்தையைவிட குறைந்த அளவு வாடகை நிர்ணயம் பொருட்டு ச.அடிக்கு ரூ.25/–நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்ததையடுத்து மேற்படி வாடகை நிர்ணய தொகையினை ஒப்பிட்டு பார்ப்பதற்குரிய வகையில் உரிய வாடகை ஒப்பந்தம் போன்ற ஆவணங்களை இணைத்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேலாண்மை இயக்குநர், காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிமிடெட் அவர்களது 24.03.2017 நாளிட்ட கடிதத்தில் வார்டு–169 மண்டலம்–14 பெருநகர சென்னை மாநகராட்சி, புழுதிவாக்கம் பேருந்து நிலைய கட்டிட வளாகத்தில் கட்டப்பட்டுள்ள நான்கு கட்டிடங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்யும் பொருட்டு சிறப்பு அலுவலர் மற்றும் ஆணையர் பொது மக்கள் நலன் கருதி நியாய விலைக்கடை பயன்பாட்டிற்கு ஒதுக்கி தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதையடுத்து கட்டிடங்கள் தயார் நிலையில் உள்ளதாகவும் நான்கு கடைகளையும் எடுத்துக் கொள்ளுமாறு ம.அ.14.ந.க.எண்.00686/2017, நாள் 06.03.2017 கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

**ம.14.வ.து.ந.க.எண்.ஆர்2/0095/2017**

மேலும், அவர்களது கடிதத்தில் இக்கட்டிடம் வாடகை நிர்ணயம் சம்மந்தமாக கோப்பு உயரதிகாரிகளின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஒப்புதல் பெறப்பட்டவுடன் வாடகை நிர்ணயம் குறித்து மேல் நடவடிக்கை தொடரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த நான்கு கடைகளும் அரசின் முதன்மை திட்டமான பொது விநியோக திட்டம் நியாய விலைக்கடை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்றும், இக்கடையான இலாப நோக்கமின்றி பொது மக்களுக்கு சேவை செய்யும் நியாய விலைக்கடை செயல்பாட்டிற்கு வாடகை நிர்ணயம் செய்வதிலிருந்து விலக்கு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறு கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தில் உள்ள 4 கடைகளுக்கான அளவுகள் மற்றும் தற்போதைய சந்தை மதிப்பும் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**வார்டு –169 – உள்ளகரம் புழுதிவாக்கம் பல்நோக்கு கட்டிடம்**

| வ. எண் | கடை எண் | அளவு சதுர. அடி | தற்போதைய சந்தை மதிப்பு ஒரு சதுர அடிக்கு (ரூபாய்) | புதிய வாடகை மதிப்பு (மாதம்) ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | 1 | 242.53 | 25 | 6063.25(அ) 6100 |
| 2 | 2 | 242.53 | 25 | 6063.25(அ) 6100 |
| 3 | 3 | 242.53 | 25 | 6063.25(அ) 6100 |
| 4 | 4 | 345.50 | 25 | 8637.50(அ) 8850 |

மேற்கூறப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு வணிக வளாகத்தின் அருகில் உள்ள தனியாருக்கு சொந்தமான கடைகளின் வாடகை ஒப்பந்த நகல்கள் பெறப்பட்டு நகல் இணைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மன்ற தீர்மான எண். 689/2013ல் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழக நியாய விலை கடைக்கும் மற்றும் கூட்டுறவு நியாய விலை கடைகளுக்கும் மாத வாடகை ச.அடிக்கு ரூ.5/–நிர்ணயம் செய்திட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், தீர்மான எண்.573/2015ல் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்தும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்தும் மற்றும் சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் கட்டப்படும் கட்டிடங்களை தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் இயங்கும் அனைத்து நியாயவிலை கடைகளுக்கு ஒதுக்கீடு செய்யும்போது தற்பொழுது நடைமுறையிலுள்ள மன்றத் தீர்மானத்தை (மன்ற தீர்மான எண். 689/2013, நாள் 31.10.2013) தளர்வு செய்து வாடகையின்றியும், முன்பணமின்றியும் ஒதுக்கீடு செய்யலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் –14, வார்டு –169ல் உள்ளகரம் –புழுதிவாக்கம் பேருந்து நிலையத்தில் 4 கடைகள் கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடம் பெருநகர சென்னை மாநகராட்சி பொது நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டிடம் ஆகும். இந்த கட்டிடத்திற்கு மன்ற தீர்மான எண். 689/2013, நாள்.31.10.2013ன்படி சதுர அடிக்கு ரூ.5/– வீதம் வாடகையினை நிர்ணயம் செய்யலாம். அதன்படி 4 கடைகளுக்கான அளவுகள் மற்றும் தற்போதைய சந்தை மதிப்பும் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**வார்டு –169 – உள்ளகரம் புழுதிவாக்கம் பல்நோக்கு கட்டிடம்**

| வ. எண் | கடை எண் | அளவு சதுர. அடி | மன்ற தீர்மான எண். 689/2013, நாள் 31.10.2013ன்படி ஒரு சதுர அடிக்கு (ரூபாய்) | புதிய வாடகை மதிப்பு (மாதம்) ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | 1 | 242.53 | 5 | 1212.65(அ) 1213 |
| 2 | 2 | 242.53 | 5 | 1212.65(அ) 1213 |
| 3 | 3 | 242.53 | 5 | 1212.65(அ) 1213 |
| 4 | 4 | 345.50 | 5 | 1727.50(அ) 1728 |

<u>ம.14.வ.து.ந.க.எண்.ஆர்2/0095/2017</u>

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–14, வார்டு–169ல் உள்ளகரம்–புழுதிவாக்கம் பேருந்து நிலையத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி பொது நிதியிலிருந்து 4 கடைகள் கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடத்திற்கு மேற்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்ய சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"வாடகை நிர்ணயம் செய்ய சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**ம.14.வ.து.ந.க.எண்.ஆர்2/0138/2017**

**தீர்மான எண்.528/2017** **நாள்:12–08–2017**

**மண்டலம் 14– வார்டு–186–பெருங்குடி, குறிஞ்சி நகரில் மாமன்ற உறுப்பினர் வளர்ச்சி நிதியிலிருந்து புதியதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு – வாடகை நிர்ணயம் செய்வதிலிருந்து விலக்கு அளிக்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–14, பகுதி–41, வார்டு–186 குறிஞ்சி நகரில் மாமன்ற உறுப்பினர் வளர்ச்சி நிதியின் கீழ் 2015–16 ஆம் நிதி ஆண்டில் பல்நோக்கு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்றும், இக்கட்டிடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நியாயவிலை கடையாக பயன்படுத்த மாமன்ற உறுப்பினர் அவர்கள் 22.03.2016 அன்று கடிதம் அளித்துள்ளார் என்றும், மேலும் தலைவர், சோழங்கநல்லூர் நகர கூட்டுறவு கடன் சங்கம் லிமிடெட் அவர்கள் இந்த பல்நோக்கு கட்டிடத்தை நியாயவிலை கடையாக பயன்படுத்த அனுமதி அளிக்குமாறு 17.08.2016 நாளிட்டு கடிதம் அளித்துள்ளார் என்றும், எனவே இந்த பல்நோக்கு கட்டிடத்தை நியாயவிலை கடையாக பயன்படுத்த வாடகை நிர்ணயம் செய்து தருமாறு பகுதி–41ன் உதவி செயற்பொறியாளர் அவர்களும் கேட்டுக்கொண்டதையடுத்து மண்டல அலுவலர்–14 அவர்களின் 20.03.2017 நாளிட்ட குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

உதவி வருவாய் அலுவலர், வட்டார அலுவலகம் (தெ) அவர்கள் மண்டலம்–14, வார்டு–186, பெருங்குடி குறிஞ்சி நகரில் மாமன்ற உறுப்பினர் வளர்ச்சி நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்ய சிறப்பு அலுவலர்/ஆணையர் (மன்றம்) அவர்களின் ஒப்புதல் பெற சமர்ப்பிக்கப்பட்ட கோப்பில் வாடகை நிர்ணயம் ச.அடிக்கு ரூ.30/– என நிர்ணயம் செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதையடுத்து மேலும், இதனை ஒப்பிட்டு பார்ப்பதற்கு ஏதுவாக மேலும் சில ஒப்பந்த பத்திரத்தின் நகலை இணைத்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தின் அளவுகள் மற்றும் தற்போதைய சந்தை மதிப்பும் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**வார்டு –186–பெருங்குடி, குறிஞ்சி நகரில் மாமன்ற உறுப்பினர் வளர்ச்சி நிதியில் இருந்து கட்டி முடிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடம்.**

| வ. எண் | அளவு சதுர.அடி | தற்போதைய சந்தை சதிப்பு ஒரு சதுர அடிக்கு (ரூபாய்) | புதிய வாடகை மதிப்பு (மாதம்) ரூபாய் |
|---|---|---|---|
| 1 | 296 | 30 | 8880 |

மேற்கூறப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமாக கட்டி முடிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடம் அருகில் தனியாருக்கு சொந்தமான கடையின் வாடகை ஒப்பந்த நகல் பெறப்பட்டு நகல் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது கடையின் அளவு 100 ச.அடி வாடகை மாதம் ரூ3000/– ஆக ஒரு சதுர அடியின் வாடகை ரூ.30/– ஆகும். அதன் அடிப்படையிலும் மற்றும் சம்மந்தப்பட்ட வார்டு உரிமம் ஆய்வாளர் அவர்களின் அறிக்கையின்படியும் தற்போதைய சந்தை விலைக்கேற்ப அந்த கட்டிடத்திற்கு வாடகையினை நிர்ணயம் செய்து வணிக வளாக வாடகை நிர்ணயக்குழு, மண்டலம்–14ன் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது

இந்நிலையில், மன்ற தீர்மான எண். 689/2013ல் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழக நியாய விலை கடைக்கும் மற்றும் கூட்டுறவு நியாய விலை கடைகளுக்கும் மாத வாடகை ச.அடிக்கு ரூ.5/–நிர்ணயம் செய்திட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், தீர்மான எண்.573/2015ல் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்தும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்தும் மற்றும் சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் கட்டப்படும் கட்டிடங்களை தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் இயங்கும்

**ம.14.வ.து.ந.க.எண்.ஆர்2/0138/2017**

அனைத்து நியாயவிலை கடைகளுக்கு ஒதுக்கீடு செய்யும்போது தற்பொழுது நடைமுறையிலுள்ள மன்றத் தீர்மானத்தை (மன்ற தீர்மான எண். 689/2013, நாள் 31.10.2013) தளர்வு செய்து வாடகையின்றியும், முன்பணமின்றியும் ஒதுக்கீடு செய்யலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–14, வார்டு–186ல் பெருங்குடி, குறிஞ்சி நகரில் மாமன்ற உறுப்பினர் வளர்ச்சி நிதியிலிருந்து கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடம் ஆகும். இந்த கட்டிடத்திற்கு மன்ற தீர்மான எண். 573/2015ன்படி வாடகையின்றியும் மற்றும் முன்பணமின்றியும் ஒதுக்கீடு செய்யலாம் என தெரிவித்து கொள்ளப்படுகிறது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–14, வார்டு–186ல் பெருங்குடி, குறிஞ்சி நகரில் மாமன்ற உறுப்பினர் வளர்ச்சி நிதியிலிருந்து கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடம் ஆகும். இந்த கட்டிடத்திற்கு மன்ற தீர்மான எண். எண்.573/2015ன்படி வாடகையின்றியும் மற்றும் முன்பணமின்றியும் ஒதுக்கீடு செய்ய சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**Z.O.XI/C.No.E1/2192/2017**

**Resolution No.529/2017** Date:12-08-2017

**Zone-XI – Proposed Construction of UPHC in Perumal Kovil Street, Nerkundram in Div-145 Identified site – proposed to be execute under NUHM by the Building department – permission requested to demolish the NNMP shed & UPHC in perumal koil street – Approve.**

City Medical Officer had forwarded a letter received from Zonal Medical Officer, to the buildings department requesting to construct UPHC at Perumal koil street, Nerkundram in Div-145, Zone-XI under the NUHM funds allotted for the purpose.

Based on the above, the site was jointly inspected by the Engineers of Buildings department, Zone-XI Engineers along with medical team on 06.04.2017 and concluded that in the proposed site a NNMP shed & UPHC building was constructed by erstwhile Nerkundram Village Panchayat to be demolished.

The SE (Buildings) has also requested Zone-XI to obtain the necessary demolition order to demolish the old building, so as to construct the new UPHC Building under NUHM.

The existing old annex building of NNMP shed & UPHC building was constructed by the erstwhile Nerkundram Village Panchayat in 2005. The book values of the existing building are as follows:

| Sl No. | Name of the Building | Year of Construction | Book value for 2017-18 | Present condition |
|---|---|---|---|---|
| 1 | NNMP shed | 1998 | 62,820.00 | Damaged Condition |
| 2 | UPHC | 2005 | 6,98,192.00 | |

Hence, orders of the Special Officer-S.C(Health), S.C(Works) and Council are requested to demolish the annex building of NNMP shed & UPHC building measuring NNMP shed 102.00 $m^2$ (15.50m X 6.60 m) and UPHC building 167.40 $m^2$ (15.50m X 10.80 m) under NUHM. Commissioner's note date 05.08.2017 is read.

**"Approved by Special Officer-Standing Committee (Health), Standing Committee(Works) and Council."**

******

**ம.அ.6.ந.க.எண். ஆர்1 /1216/2017**

**தீர்மான எண்.530/2017** **நாள்:12–08–2017**

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம் –6 – தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்ய அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலவலகம்–6 நிலுவையில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை தடை பத்திகளில் வருவாய்த்துறை சம்மந்தமான 2010–11 மற்றும் 2011–12 ஆம் ஆண்டுகளில் தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தணிக்கைத்தடைகள் மற்றும் அதற்கான பதில்கள் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | தணிக்கை தடை எண்/ ஆண்டு | தணிக்கை தடைக்கான காரணம் | தணிக்கை தடை நீக்கத்திற்கான பதில் |
|---|---|---|---|
| 1 | 16இ எண்.1 2010–11 | மண்டலம்–6 வருவாய் பிரிவு – சொத்துவரி வசூல் மறுக்கப்பட்ட காசோலைகள் அதிக அளவில் நிலுவையில் உள்ளவை திரும்ப வசூல் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படாதது – குறைபாடு ரூ.19,33,387/– | தணிக்கையில் குறிப்பிட்டுள்ள சொத்துவரி வசூல் மறுக்கப்பட்ட காசோலைகள் தணிக்கையில் குறிப்பிட்டுள்ள இனங்களில் கனிசமான இனங்களுக்கு மீள வரைவோலையாக பெறப்பட்டு மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டது. மேலும், தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.<br>இத்தணிக்கை ஆண்டில் திரு.ஒ.டி.ரவீந்திரன் வரிவசூலர் அவர்கள் கோட்டம்–49ல் பணியாற்றியுள்ளார். இவரால் பெறப்பட்ட மறுக்கப்பட்ட காசோலைகளின் உரிய தண்டத்தொகையுடன்வசூலிக்கப்பட்டுள்ளது. வசூலிக்கப்பட்டதற்கான மறுக்கப்பட்ட காசோலைகளின் விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, இத்தணிக்கை தடை பத்தியிலிருந்து திரு.ஒ.டி.ரவீந்திரன் வரிவசூலர் அவர்களின் பெயரை நீக்கம் செய்யலாம். |
| 2 | 46 2011–12 | மண்டலம்–6 வருவாய் பிரிவு – வருவாய் இனங்களுக்கு இரசீது புத்தகங்கள் சென்னை மாநகராட்சி தலைமையிடத்திலிருந்து பெறப்பட்டது – தணிக்கைக்கு உட்படுத்தப்படல் வேண்டும் – குறித்து | தணிக்கையில் குறிப்பிட்டுள்ள சென்னை மாநகராட்சி தலைமையிடத்திலிருந்து பெறப்பட்ட வருவாய் இனங்களுக்கான இரசீது புத்தகங்கள் அனைத்தும் முறையாக தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டது. மேலும், 2009–10ஆண்டு முதல் அனைத்து வரிவசூலர்களுக்கும் வசூல் பணிகளை மேற்கொள்ள கையடக்க கருவி வழங்கப்பட்டுள்ளதால் அனைத்து வசூல்களும் கணிணி மயமாக்கப்பட்டு விடுதலின்றி வசூலிக்கப்பட்டு வருகிறது. என்பதால் இத்தணிக்கை தடை பத்தியினை நீக்கம் செய்யலாம். |
| 3 | 48 2011–12 | மண்டலம்–6 வருவாய் பிரிவு – தி.ரு.வி.க. நகர் 2011–12ஆம் ஆண்டு தணிக்கை காலததிற்கான ஆடு மற்றும் மாடு அடிக்கும் தொட்டிகளுக்கான வசூல் மருத்துவரின் பதிவேட்டின்படி காண்பிக்கப்படாமை – ரூ.20,27,089/– குறித்து மற்றும் தணிக்கை நாள்வரை இரசீது புத்தகங்கள் அளிக்கப்படாதது. | தணிக்கையில் குறிப்பிட்டுள்ள திரு.ஒ.டி.ரவீந்திரன் வரிவசூலர் அவர்கள் ஆடு மற்றும் மாடு அடிக்கும் தொட்டிகளில் பணிபுரியவில்லை. கோட்டம்–49ல் பணிபுரிந்துள்ளாதால் இவரது பெயரை பொறுப்பு நீக்கம் செய்யலாம். |

**ம.அ.6.ந.க.எண். ஆர்1 /1216/2017**

| | | | |
|---|---|---|---|
| 4 | 16 | வருவாய்துறை – சொத்துவரி காசோலைகளின் மூலம் வங்கிகளால் மறுக்கப்பட்டவை சொத்துவரி மற்றும் அபராதத்தொகை வசூலிக்கப்படாமல் இழப்பு ரூ.7606/– | மண்டலம்–6 வருவாய்த்துறை தணிக்கைத் தடை ஆண்டான 2008–09ல் சம்மந்தப்பட்ட அலுவலரான திரு.பி.புருசோத்தமன் வரிவசூலர் தணிக்கை தடையில் குறிப்பிட்டுள்ள மறுக்கப்பட்ட காசோலைகள் அபராதத்தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. எனவே, சம்மந்தப்பட்ட வரி வசூலரை தணிக்கை தடையிலிருந்து விடுவிக்கலாம். வசூலிக்கப்பட்ட தொகைக்கு ஆதாரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. |
| 5 | 115<br>2011–2012 | சொத்துவரி – நகரமைப்பு பிரிவின் வரைபடத்தின்படி நிர்ணயம் செய்யப்பட்டதை சரிபார்க்க வருவாய் பிரிவிலிருந்து கோப்புகள் மற்றும் ஆவணங்கள் அளிக்கப்படாதது குறித்து. | இத்தடையில் குறிப்பிட்டுள்ள கோட்டங்களில் திரு.ஜே.பாலகிருஷ்ணன் வரிமதிப்பீட்டாளராக பணிபுரியவில்லை என்பதால் இவரது பெயரை பொறுப்பு நீக்கம் செய்யலாம் |
| 6 | 35<br>2011–2012 | கேடும் குற்றமும் பயக்கும் தொழில் உரிமம் புதுப்பிக்காதவர்கள் கட்டணங்கள் 2011–12ஆம் ஆண்டு வசூல் செய்யப்படவில்லை இழப்பு ரூ.8,56,980/– | இப்பத்தி உரிமம் ஆய்வாளர்கள் சம்மந்தப்பட்டது இத்தணிக்கை ஆண்டில் திரு.ஜே.பாலகிருஷ்ணன் அவர்கள் வரிமதிப்பீட்டாளராக பணிபுரிந்துள்ளதால் இப்பத்தியிலிருந்து இவரது பெயரை பொறுப்பு நீக்கம் செய்யலாம். |
| 7 | 24<br>2011–12 | 2011–12ஆம் ஆண்டு சொத்துவரி தணிக்கை புதிய சொத்துவரி நிர்ணயம் செய்யும்போது முந்தைய ஆண்டுகளின் நிலுவை வசூலித்தது வரிவிதிப்பை சரிபார்க்க ஆவணங்களை தணிக்கைக்கு அளிக்கப்படாதது குறைபாடு | இத்தணிக்கை தடையில் குறிப்பிட்டுள்ள கோட்டங்களில் திரு.ஜே.பாலகிருஷ்ணன் வரிமதிப்பீட்டாளராக பணிபுரியவில்லை என்பதால் இவரது பெயரை பொறுப்பு நீக்கம் செய்யலாம். |
| 8 | 19<br>2011–12 | 2011–12ஆம் ஆண்டு சொத்துவரி தணிக்கை அரையாண்டிற்கான சொத்துவரி நிர்ணயம் குறைவாக விகித்தது வசூல் செய்யப்படவேண்டும் ரூ.15,846/– | இத்தணிக்கை தடையில் குறிப்பிட்டுள்ள கோட்டங்களில் திரு.ஜே.பாலகிருஷ்ணன் வரிமதிப்பீட்டாளராக பணிபுரியவில்லை என்பதால் இவரது பெயரை பொறுப்பு நீக்கம் செய்யலாம். |
| 9 | 21 அ<br>2011–12 | 2011–12ஆம் ஆண்டு சொத்துவரி புதிய மதிப்பீடு ஒரே நபருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சொந்த கட்டிடங்களில் உரிமையாளர் சொந்த உபயோகம் குடியிருப்பு பகுதி என 25 சதவீதம் தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது. இழப்பு ரூ.2691/– | இத்தணிக்கை தடையில் குறிப்பிட்டுள்ள கோட்டங்களில் திரு.ஜே.பாலகிருஷ்ணன் வரிமதிப்பீட்டாளராக பணிபுரியவில்லை என்பதால் இவரது பெயரை பொறுப்பு நீக்கம் செய்யலாம். |
| 10 | 31 , இ<br>2011–12 | தொழில் வரி காசோலைகள் மூலம் வசூலித்தது வங்கியினால் மறுக்கப்பட்ட தொழில்வரி மற்றும் அபராதத்தோடு வசூலிக்கப்படாதது ரூ.3,30,419/– | இப்பத்தி உரிமம் ஆய்வாளர்கள் சம்மந்தப்பட்டது. இத்தணிக்கை ஆண்டில் திரு.ஜே.பாலகிருஷ்ணன் அவர்கள் வரிமதிப்பீட்டாளராக பணிபுரிந்துள்ளதால் இப்பத்தியிலிருந்து இவரது பெயரை பொறுப்பு நீக்கம் செய்யலாம். |
| 11 | 25<br>2011–12 | 2011–12ஆம் அண்டு தணிக்கை சொத்துவரி குடியிருப்பு அல்லாத பகுதிகளுக்கு குடியிருப்புகளுக்கு வழங்குவதுபோல 25 சதவீதம் தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது. இழப்பு ரூ.12,533/– | இத்தணிக்கை தடையில் குறிப்பிட்டுள்ள கோட்டங்களில் திரு.ஜே.பாலகிருஷ்ணன் வரிமதிப்பீட்டாளராக பணிபுரியவில்லை என்பதால் இவரது பெயரை பொறுப்பு நீக்கம் செய்யலாம். |

| | | | |
|---|---|---|---|
| 12 | 32<br>2009–10 | சொத்து வரி வசூல் பழைய மண்டலம்–3 வங்கிகளில் செலுத்தப்பட்ட தொகைகள் வரவு வைக்கப்பட்டதற்கான வங்கி பட்டியல்கள் தணிக்கைக்கு காண்பிக்கப்படாதது. | திரு.எல்.இரமேஷ் பாபு, வரிவசூலர் பழைய மண்டலம்–3 தணிக்கை ஆண்டில் ஆடு / மாடு தொட்டிகளில் பணிபுரிந்துள்ளார் என்பதால் இத்தடையிலிருந்து இவர் பெயரை நீக்கம் செய்யலாம். |

எனவே, மேற்படி சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதில்களை ஏற்று தணிக்கை தடைகளை ஏற்று தணிக்கை தடைகளை நீக்கம் செய்ய சிறப்பு அதிகாரி– நிலைக்குழு (கணக்கு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.07.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“வரிசை எண்.1 முதல் 12 வரை உள்ள தணிக்கைத்தடைகளை நீக்க சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(கணக்கு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**வ.து.ந.க.எண்.கே.வரி/4000/2017**

**தீர்மான எண்.531/2017** **நாள்:16–08–2017**

**கேளிக்கை வரி – பெருநகர சென்னை மாநகராட்சி – வருவாய் துறை – தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கை வரி சட்டம் 2017 – அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப அனுமதி.**

1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின்படி, திரைப்படங்கள் உள்ளிட்ட ஏனைய கேளிக்கைகள் மீது கேளிக்கை வரி விதித்து வசூலிக்கப்பட்டு வந்தன. இந்த சட்டம் நீக்கரவு செய்யப்பட்ட நிலையில், 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கை வரிச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டமானது 01.07.2017 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இச்சட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகள் திரைப்படங்கள் உள்ளிட்ட கேளிக்கைகள் மீது வரி விதிப்பதற்கும், வசூலிப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டு உள்ளது.

இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து, தமிழ் திரைப்பட வர்த்தக சபை, தமிழ்நாடு திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம், தமிழ் திரைப்பட சம்மேளனம், தென்னிந்திய திரைப்பட சபை ஆகிய சங்கங்கள் கேளிக்கைகள் வரியினை ரத்து செய்யவும், திரைப்படத்திற்கான நுழைவுச் சீட்டினுடைய விலையினை உயர்த்தவும் மற்றும் சில கோரிக்கைகளை அரசுக்கு வைத்து உள்ளனர்.

இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி, எந்த ஒரு கேளிக்கை அல்லது கேளிக்கைகளின் வகைகள் மீது விதிக்கப்படும் கேளிக்கை வரியிலிருந்து உள்ளாட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையில், அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்குட்பட்டு, விலக்களிக்கலாம் (Exemption) அல்லது கேளிக்கைகள் மீது விதிக்கப்பட்ட வரியை தள்ளுபடி (Remission) செய்யலாம்.

மேற்படி சங்கங்களின் கோரிக்கைகளை அரசு பரிசீலிப்பதற்கு ஏதுவாக உள்ளாட்சி மன்றங்களின் கருத்துகளைப் பெற்று அனுப்புமாறு அரசு அதன் 01.08.2017 தேதியிட்ட கடித எண். 4781 / தேர்தல் / 2017–1, ல் கேட்டுக் கொண்டுள்ளது.

எனவே, 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20 / 2017) , பிரிவு 11–ன்கீழ் விதிக்கப்பட்டுள்ள கேளிக்கை வரியினை செலுத்தும் கட்டுப்பாட்டிலிருந்து, அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்குட்பட்டு, எந்த ஒரு கேளிக்கைக்கும் அல்லது கேளிக்கைகளின் வகைக்கும் வரிவிதிப்பதிலிருந்து விலக்களிப்பதற்கும் (EXEMPTION), மேலும் எந்த ஒரு கேளிக்கைக்கும் அல்லது கேளிக்கைகளின் வகைக்கும் அல்லது எந்த ஒரு உரிமையாளர் அல்லது உரிமையாளர்களின் வகையினர் அல்லது எந்த ஒரு நபர் அல்லது நபர்களின் வகையினர் செலுத்த வேண்டிய கேளிக்கை வரி முழுவதையுமோ அல்லது அதன் பகுதி எதனையுமோ முன்தேதியிட்டோ அல்லது பின் தேதியிட்டோ தள்ளுபடி (REMISSION) செய்வதற்கும் மன்றம் தீர்மானம் இயற்றி அரசின் பரிசீலனைக்கு அனுப்பலாம் என்ற சட்ட வகைமுறைகளின் அடிப்படையில் மேற்படி சங்கங்களின் கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்பட்டு பின்வரும் இனங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**வ.து.ந.க.எண்.கே.வரி/4000/2017**

(1) அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்குட்பட்டு எந்த ஒரு கேளிக்கைக்கும் அல்லது கேளிக்கைகளின் வகைக்கும் கேளிக்கைவரி விதிப்பதிலிருந்து விலக்களிக்கவும்,

(2) எந்த ஒரு கேளிக்கைகள் அல்லது கேளிக்கைகளின் வகைகள் அல்லது எந்த ஒரு உரிமையாளர் அல்லது உரிமையாளர்களின் வகையினர் அல்லது எந்த ஒரு நபர் அல்லது நபர்களின் வகையினர் பொறுத்தும் கேளிக்கை வரி முழுவதையும் அல்லது அதன் பகுதி எதனையும் முன்தேதியிட்டோ அல்லது பின்தேதியிட்டோ அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்குட்பட்டு கேளிக்கை வரியை தள்ளுபடி செய்யவும்,

(3) மேலே சொல்லப்பட்ட கோரிக்கைகள் போன்று அரசு பொருத்தமெனக் கருதும் பிறவற்றின் மீது பரிசீலனை செய்து தக்க முடிவு எடுக்கவும்,

அரசின் அதிகாரத்திற்குட்பட்டுள்ளதால், மேற்படி மூன்று இனங்களை பரிந்துரை செய்து அரசுக்கு முன்மொழிவு அனுப்ப சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 16.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அரசுக்கு முன்மொழிவு அனுப்ப சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**S.W.M.C.NO.A7/4356/2016**

**Resolution No.532/2017** **Date:16-08-2017**

**Solid Waste Management Department –Swachh Bharat Mission – ODF (Open Defecation free) Declaration Protocols to be followed – Declarations are obtained from Zones ––54 wards to be declared as Open Defecation Free (ODF) – Suitable public announcement to be made – Order issue.**

The Ministry of Urban Development, Government of India has circulated a protocol for declaration of Open Defecation Free (ODF) for Urban Local Bodies on 21.7.2016. ODF Declaration Protocol has directed to achieve the same in four steps, the declarations have to be obtained from all wards as ODF in all categories such as Ward Councilors, Schools, School students, Self – Help groups, School staff and Teachers without exception, declaring the wards as Open Defecation free in the format prescribed by the Ministry of Urban Development, Government of India New Delhi.

61 wards have already been declared as ODF for which council Resolution have been obtained vide No: 130/2017 dated 14-03-2017 and No:407/2017, dated 21-06-2017. Now the various Zones of Greater Chennai Corporation have identified the following wards as listed below as Open Defecation Free.

| Zn.No. | Division No. | Total No. of Wards |
|---|---|---|
| 1 | 5,6,11,14 | 4 |
| 2 | 15, 16, 17, 19 | 4 |
| 3 | 22, 25, 26, 31 | 4 |
| 4 | 38, 43, 45 | 3 |
| 5 | 52, 53 | 2 |
| 6 | 64, 65, 70, 76 | 4 |
| 7 | 79, 80, 82, 83, 90, 93 | 6 |
| 8 | 94, 102, 104, 105, 106 | 5 |
| 10 | 132, 133, 129 | 3 |
| 11 | 145, 146, 147, 148, 150, 153 | 6 |
| 12 | 158, 159, 161, 165 | 4 |
| 13 | 170,174, 180 | 3 |
| 14 | 183, 185, 186, 190 | 4 |
| 15 | 192, 195 | 2 |
| Total | | 54 |

In this regard, as per the protocol issued by the Ministry of Urban Development, Government of India a Preliminary resolution has to be passed by the respective City Municipal Administration declaring the wards to be Open Defecation Free. Also a suitable public announcement has to be made through News paper both Tamil and English. The final resolution is to be communicated to the State Government for further verification.

**S.W.M.C.NO.A7/4356/2016**

Hence, to publish the ODF details of various wards of Zones 1 to 15 as specified above in the table, in the News papers both in Tamil and English as a ODF wards. Orders of the Special Officer – Standing Committee (Health) and Council are requested. Commissioner’s note dated.12.08.2017 is read.

**“Approved by Special Officer-Standing Committee (Health) and Council.”**

******

**க.து.ந.க.எண்.பி2/1525/2017**

**தீர்மான எண்.533/2017** **நாள்:20–08–2017**

**மண்டலம்–5 வார்டு–58, ரிப்பன் மாளிகையில் உள்ள விரிசல்களை சீரமைக்கும் பணி 2016–2017 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ.68,00,000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதி**

**வார்டு எண் : 58** **மண்டலம் : 5**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர். | மண்டலம்–5, வார்டு–58, ரிப்பன் மாளிகையில் உள்ள விரிசல்களை சீரமைக்கும் பணி |
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | ரிப்பன் மாளிகை தலைமையகம். |
| 4 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | பெறப்பட்டுள்ளது. |
| 5 | தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி செயல்முறை ஆணை மற்றும் நாள் | மேற்பார்வை பொறியாளர் (கட்டடம்) S.E(B)T.S.No. 013 / 2017–18 நாள்.24.07.2017 |
| 6 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 68,00,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ . 59,25,243.20 |
| | (ஆ) மேலான மேற்பார்வை செலவு | ரூ. 5,92,524.32 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு | ரூ. 1,48,131.08 |
| | (ஈ) எதிர்பாரா செலவு | ரூ. 74,848.97 |
| | (உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 59,252.43 |
| | மொத்தம் | ரூ. 68,00,000.00 |
| 7 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | ஆம் |
| 8 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | புதிய பணி |
| 9 | நிதியின் தன்மை | மூலதன நிதி |
| 10 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ. 68,00,000.00 |

மண்டலம்–5, வார்டு–58, ரிப்பன் மாளிகையின் அருகில் மூன்று புறங்களிலும் மெட்ரோ இரயில் பணிகள் நடைபெற்று வருகின்றது. இந்த பணிகளின் காரணமாக ரிப்பன் மாளிகையில் அதிக அளவில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளன. அந்த விரிசல்கள் Structural cracks ஆக உள்ளதால் இந்த பணியில் அனுபவம் மிக்கவர்களின் கருத்துரு பெறப்பட்டுள்ளது. ரிப்பன் மாளிகை கட்டிடம் சுண்ணாம்பினால் கட்டப்பட்டுள்ளதால் அதற்குண்டான சிறப்புத் தன்மை வாய்ந்த பொருட்களை கொண்டு செய்யப்பட வேண்டும். மேலும், அதனை மூன்றாம் நபர் கலந்தறிவாளர்கள் கொண்டு ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, ரிப்பன் மாளிகையில் விரிசல்களை சீரமைத்து சரிசெய்யும் பணிக்காக, ரூ.68,00,000/–க்கு (ரூபாய் அறுபத்தெட்டு இலட்சத்திற்கு மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி, சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி சிறப்பு அதிகாரி– நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 12.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"சிறப்பு அதிகாரி– நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம்அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**<u>ப.து.ந.க.எண்.டி3/0162/2017</u>**

**தீர்மான எண்.534/2017** **நாள்:20–08–2017**

## <u>தானபத்திரம்</u>

மண்டலம்–5, வார்டு–62ல் திரு. V. பாபு அவர்கள் பழைய கதவு எண்.92/1, புதிய கதவு எண்.12, அருணாசல தெரு, சிந்தாதிரிப்பேட்டை சென்னை-600002, R.S.No.575/2, Block No.10, சிந்தாதிரிப்பேட்டை கிராமம் என்ற இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–05ல் PPA/WDCN05/7454/2016 நாள்.20.12.2016ன்படி விண்ணப்பித்துள்ளார். திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அருகில் அருணாச்சலம் ரோடு அமைய பெற்றுள்ளது. மேற்படி சாலையின் தற்போதைய அகலம் 12.00 மீ என தெரிய வருகிறது. "சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் II" ன் படி, மேற்படி சாலை 15.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தான பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 5.5 மீ நீளம் மற்றும் 1.52 மீ அகலத்திற்கு 8.36 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

தான பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

1. மனை உரிமையாளர் திரு. V. பாபு அவர்களிடம் பழைய கதவு எண்.92/1, புதிய கதவு எண்.12, அருணாசல தெரு, சிந்தாதிரிப்பேட்டை சென்னை-600002, R.S.No.575/2, Block No.10, சிந்தாதிரிப்பேட்டை கிராமம் இடத்தில் சாலை விரிவாக்கத்திற்கு தான பத்திரம் மூலம் 8.36 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.14,000/– யை மனை உரிமையாளரிடமிருந்து "ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி– நிலைக்குழு (நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 10.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"சிறப்பு அதிகாரி– நிலைக்குழு (நகரமைப்பு) மற்றும் மன்றம்அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பா.து.ந.க.எண்.பி3/0113/2015**

**தீர்மான எண்.535/2017** **நாள்:20–08–2017**

**பாலங்கள் துறை – மண்டலம்–8, வார்டு–106ல் இரயில்வே காலனி மூன்றாவது தெருவில் உள்ள பழைய நடைபாலத்திற்கு பதிலாக புதிய பெட்டக வடிவ பாலம் அமைக்கும் பணி – ரூ. 59,99,000/– மதிப்பீட்டிற்கு ஒப்பம் பெறப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திரு. இ. மனோகரன் அவர்களுக்கு ஒப்பம் அளிக்க அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் விவரம் | மண்டலம்–8, வார்டு–106ல் இரயில்வே காலனி மூன்றாவது தெருவில் உள்ள பழைய நடைபாலத்திற்கு பதிலாக புதிய பெட்டக வடிவ பாலம் அமைக்கும் பணி . |
| 2 | மதிப்பீட்டின் எண் | J/2015–16/1793 |
| 3 | திட்ட குறியீட்டு எண் | |
| 4 | ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல், விலைப்பட்டியல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்டு | 2014–15 ஆம் ஆண்டு |
| | அ) பணி செலவினம் மட்டும் | ரூ. 51,27,574.73 |
| | ஆ) மேற்பார்வை செலவினம் 10% | ரூ. 5,12,757.47 |
| | இ) சிறு மேற்பார்வை செலவினம் 2.5% | ரூ. 1,28,189.37 |
| | ஈ) தரக்கட்டுபாடு 1 % | ரூ. 51,275.75 |
| | உ) தமிழ்நாடு தொழிலாளர்கள் பொது நல நிதி 1 % | ரூ. 51,275.75 |
| | எ) எதிர்பாரா செலவினம் 2.5 % | ரூ. 1,27,926.94 |
| | மொத்தம் | ரூ. 59,99,000.00 |
| 5 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | இணையதளம்<br>மக்கள் குரல், இந்தியன் எக்ஸ்பிரஸ்<br>நாள். 19.05.2017 |
| 6 | ஒப்பப்படிவம் பெற குறிக்கப்பட்ட நாள் | 02.06.2017 |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 02.06.2017 |
| 8 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுவலரின் விவரம் குறிப்பிடவும் | ஆம் |
| 9 | எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டன | விற்பனை இல்லை. கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டது. |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | 2 |

11. ஒப்பந்தத்தில் பங்கேற்றவர் விவரம் :

| வ. எண் | ஒப்பந்தத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2014–15ம் ஆண்டு விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு. இ. மனோகரன் | ரூ. 51,27,574.73 | ரூ.65,37,657.77 | (+) 27.50% |
| 2 | திருவாளர். அண்ணாமலை கன்ஸ்ட்ரக்ஷன் | ரூ. 51,27,574.73 | ரூ.67,17,122.88 | (+) 31.00% |

**பா.து.ந.க.எண்.பி3/0113/2015**

| | | |
|---|---|---|
| 12 | குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | ஆம்<br>05.06.2017 (ம) 20.06.2017 |
| 13 | இறுதி ஒப்பத்தொகை (ம) ஒப்ப சதவீதம் | ரூ. 57,17,245.82<br>(+) 11.50 % அதிகம் |
| 14 | குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவின் நிலை, பதிவு நாள் | 2–ம் நிலை |
| 15 | கூடுதல் பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட்ட விவரம்<br>அ) கேட்பு காசோலை எண்/நாள் வங்கியின் பெயர் | – |
| 16 | பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா ?<br>அ) வரவு செலவுத்திட்ட தலைப்பு | ஆம்<br>மூலதன செலவு 2017–18 (பாலங்கள் துறை) |
| 17 | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | மூன்று மாதங்கள் |

மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் குறைந்த ஒப்பந்ததாரரான திரு. இ. மனோகரன், அவர்களிடம் விலை குறைப்பு கோரியதில், 05.06.2017 நாளிட்ட கடிதத்தில் ஒப்பந்ததாரர் விலை குறைப்பு செய்தார். அன்னாரின் ஒப்பத்தொகை ரூ.57,17,245.82 ஆனது 2014–15ம் ஆண்டு அலுவலக விலைப் பட்டியலுடன் ஒப்பிடும்போது (+)11.50% அதிகம், 2015–16ம் ஆண்டு அலுவலக விலைப் பட்டியலுடன் ஒப்பிடும்போது (+)9.80% அதிகம் மற்றும் 2016–17ம் ஆண்டு அலுவலக விலைப் பட்டியலுடன் ஒப்பிடும்போது (+)6.10% அதிகம். மேலும், 20.05.2017 நாளிட்ட சந்தை விலையை ஒப்பிடும்போது (–)2.40% குறைவாகும்.

எனவே, மீண்டும் ஒப்பந்ததாரரிடம் விலை குறைப்பு கோரியதில் 20.06.2017 (ம) 05.07.2017 நாளிட்ட கடிதத்தில் மேலும் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். குறைந்த ஒப்பந்ததாரரான திரு. இ. மனோகரன், அவர்கள் அளித்த ஒப்பத்தொகை ரூ.57,17,245.82 (ரூபாய் ஐம்பத்தி ஏழு இலட்சத்து பதினேழாயிரத்து இருநூற்று நாற்பத்தி ஐந்து மற்றும் எண்பத்தி இரண்டு பைசா மட்டும்) ஆனது 2015–16ம் ஆண்டின் அலுவலக விலை விகிதத்தின் படி (+)11.50% அதிகம் மற்றும் 2015–16ம் ஆண்டு அலுவலக விலைப் பட்டியலுடன் ஒப்பிடும்போது (+)9.80% அதிகம் மற்றும் 2016–17ம் ஆண்டு அலுவலக விலைப் பட்டியலுடன் ஒப்பிடும்போது (+)6.10% அதிகம். மேலும், 20.05.2017 நாளிட்ட சந்தை விலையை ஒப்பிடும்போது (–)2.40% குறைவாகும். எனவே, இப்பணியினை குறைந்த ஒப்பந்ததாரரான திரு. இ. மனோகரன், அவர்களுக்கு ரூ.57,17,245.82–க்கு பணியினை வழங்க சிறப்பு அதிகாரி– நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 12.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"ஒப்பம் அளிக்க சிறப்பு அதிகாரி– நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம்அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பொ.சு.ந.க.எண்.ஈ2/27715/2017**

**தீர்மான எண்.536/2017** நாள்:20–08–2017

**பணியமைப்பு –பொதுத்துறை – தலைமை பூச்சி தடுப்பு அலுவர் பதவிக்கு 2016–17ஆம் ஆண்டுக்கு "இன்மை பட்டியல்" (Nil panel) வெளியிடுவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை (மலேரியா பிரிவு), தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் பதவிக்கான அனுமதிக்கப்பட்ட பணியிடம் மொத்தம் 1 ஆகும். இப்பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் மைய நாள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 1–ம் தேதி ஆகும்.

பொது சுகாதாரத்துறை, மலேரியா பிரிவில், 2016–17ஆம் ஆண்டுக்கு தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் பதவிக்கான பணியிடத்தில், திரு.எஸ்.செல்வகுமார், அவர்கள் பணிபுரிந்து வருவதால், இப்பதவியில் காலிப்பணியிடம் ஏதும் இல்லாத காரணத்தினால், 2016–17ஆம் ஆண்டுக்கு "இன்மை பட்டியல்" (Nil panel) வெளியிடப்படவேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி, பணியமைப்பில் தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் பதவி வகுப்பு 1பி–ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், இப்பதவிக்கு "இன்மை பட்டியல்" வெளியிட பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்தின் வசம் உள்ளது.

ஆகவே, 2016–17ஆம் ஆண்டிற்கான தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில், காலிப்பணியிடம் ஏதும் இல்லாத நிலையில், "இன்மை பட்டியல்" (Nil panel) ஆக வெளியிட சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 12.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"இன்மை பட்டியல் வெளியிட சிறப்பு அதிகாரி– மன்றம்அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பொ.து.ந.க.எண்.ஈ2/16152/2017**

**தீர்மான எண்.537/2017** நாள்:20–08–2017

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை – டாக்டர்.V.சாய்சுதா, மருத்துவ அலுவலர் அவர்கள் – பணிவிதிகளின்படி வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறாதது – காலம்தாழ்த்தி தேர்ச்சி பெற்றது – தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க அரசுக்கு கடிதம் அனுப்ப அனுமதி.**

சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 03.10.2007 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, டாக்டர்.V.சாய்சுதா, மருத்துவ அலுவலர் அவர்கள் 06.10.2007 முற்பகல் முதல் மருத்துவ சேவைகள் துறையில் பணிநியமனம் செய்யப்பட்டு, மருத்துவ அலுவலர்களாக நியமனம் செய்யப்படும் நபர்கள் தகுதிகாண் பருவ (இரண்டு) ஆண்டு காலத்திற்குள் பணிவிதிகளின்படி, தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி, மருத்துவ தொகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

மேலும், பணிநியமன ஆணையில் இடம் பெற்றுள்ள வ.எண்.13, 14, 22 மற்றும் 26–ல் உள்ள நபர்கள் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறாததால், தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் மொழி தேர்வில் தகுதிகாண் பருவ (இரண்டு) காலத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டும். மேற்படி தமிழ் மொழி தேர்வு மற்றும் துறை தேர்வுகளில் உரியவர்கள் அவரவர் தகுதிகாண் பருவகாலத்திற்குள் தேர்ச்சி பெற்றால் மட்டுமே அரசு விதிகளின்படி ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிநியமன செயல்முறை ஆணையில் வரிசை எண்.13–ல் இடம்பெற்றுள்ள டாக்டர்.சாய்சுதா என்பவர் வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி 35 வயது கடந்துள்ள போதிலும், அரசாணை எண்.98, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள்.17.07.2006–ன்படி அரசு பணியில் சேர 5 ஆண்டுகள் தளர்வு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளதால், அதன் அடிப்படையில் இவருக்கு வயது தளர்வாணையில் இருந்து விலக்களிக்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர்.V.சாய்சுதா, மருத்துவ அலுவலர், அவர்கள் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வு மற்றும் தமிழ்நாடு மருத்துவ குறியீடு தேர்விலும் மே 2008–ல் தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும், தனியரின் தாய்மொழி தெலுங்கு என்பதால், தமிழ் மொழி தேர்வில் தகுதிகாண் பருவ (இரண்டு) காலத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டும். இருப்பினும், தனியர் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறாததால் இதுநாள் வரை தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்படவில்லை. தற்போது தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் 24.05.2016 அன்று நடத்தப்பட்ட தமிழ்மொழி தேர்வு எழுதி 07.08.2016–ல் தேர்ச்சி பெற்றுள்ளதால், தனியருக்கு தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட வேண்டும்.

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு–2ன் கீழ் வரும் பதவிகளுக்கு தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்க உரிய அதிகார பங்களிப்பு பெருநகர சென்னை மாநகராட்சி, சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களின் வசம் உள்ளது.

இருப்பினும், தனியர் பணிநியமனம் செய்யப்பட்டு, பணியில் சேர்ந்த நாள் 06.10.2007 முதல் தகுதிகாண் பருவ (இரண்டு) ஆண்டு காலத்திற்குள் பணிவிதிகளின்படி, தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறாமல், ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு அதாவது 24.05.2016 அன்று தேர்வு எழுதி 07.08.2016–ல் தேர்ச்சி பெற்றுள்ளதால், தனியருக்கு தகுதிகாண் முடித்தவராக அறிவிக்க ஆணை வழங்கும் அதிகாரம் அரசின் வசம் உள்ளது.

மேலும், தனியர் மீது துறை ரீதியான எவ்வித குற்றச்சாட்டுகளோ / விசாரணையோ ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர்.V.சாய்சுதா, மருத்துவ அலுவலர், அவர்கள் தகுதிகாண் பருவ காலத்திற்குள் ஊதியமில்லா விடுப்பு 17.03.2008 முதல் 26.03.2008 வரை 10 நாட்கள் துய்த்துள்ளார் என்றும், ஈட்டிய விடுப்பு 08.07.2009 முதல் 22.07.2009 வரை 15 நாட்கள் துய்த்துள்ளார் என்றும் பெருநகர மருத்துவ அலுவலர் / கூடுதல் இயக்குநர் (பொ) அவர்களின் 04.05.2017 மற்றும் 05.07.2017 நாளிட்ட கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியருக்கு மன்றத்தீர்மான எண்.665/2008, நாள்.30.12.2008–ன்படி பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

**பொ.து.ந.க.எண்.ஈ2/16152/2017**

எனவே, மேற்படி, விவரங்களின்படி, டாக்டர்.V.சாய்சுதா, மருத்துவ அலுவலர், அவர்கள் பணியில் சேர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு அதாவது 24.05.2016 அன்று தமிழ்மொழி தேர்வு எழுதி 07.08.2016–ல் தேர்ச்சி பெற்றுள்ளதால், மருத்துவ அலுவலர் பதவியில் தகுதிகாண்பருவம் முடித்தவராக கீழ்கண்டவாறு அறிவிப்பதற்கு அரசிற்கு கடிதம் அனுப்ப சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 12.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்த நாள் | விடுப்பு துய்த்த விவரம் | தகுதிகாண் பருவம் முடித்த நாள் அறிவிக்க வேண்டிய நாள் |
|---|---|---|---|---|
| 1. | டாக்டர்.V.சாய்சுதா, மருத்துவ அலுவலர் | 06.10.2007 முற்பகல் | ஊதியமில்லா விடுப்பு – 10 நாட்கள் (17.03.2008 முதல் 26.03.2008 வரை) ஈட்டிய விடுப்பு – 15 நாட்கள் (08.07.2009 முதல் 22.07.2009 வரை) மொத்தம் – 25 நாட்கள். | 31.10.2009 |

“அரசிற்கு குறிப்பு அனுப்ப சிறப்பு அதிகாரி– மன்றம்அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.

******

**பொ.து.ந.க.எண்.ஈ3/9994/2017**

**தீர்மான எண்.538/2017** நாள்:20–08–2017

**பணியமைப்பு –பொதுத்துறை – திரு.ஆர்.ஜெயசீலன், உதவி செயற்பொறியாளர் (அயற்பணி), வட்டார துணை ஆணையர் (வடக்கு) அலுவலகம், பெருநகர சென்னை மாநகராட்சி, என்பவரின் அயற்பணிக்காலம் 10.07.2017ல் மூன்று ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் – தனியரின் அயற்பணிக்காலத்தினை 11.07.2017 முதல் மேலும் ஓராண்டிற்கு (நான்காம் ஆண்டு) நீட்டிக்க அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப அனுமதி.**

அரசாணை (ப) எண்.241, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்: 23.06.2014 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 04.07.2014 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, திரு.ஆர்.ஜெயசீலன், உதவி செயற்பொறியாளர், திடக்கழிவு மேலாண்மை திட்டம், பல்லவபுரம் நகராட்சி, செங்கல்பட்டு, அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிய ஆணையிடப்பட்டது.

முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களின் 11.07.2014 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, திரு.ஆர்.ஜெயசீலன், உதவி செயற்பொறியாளர், திடக்கழிவு மேலாண்மை திட்டம், பல்லவபுரம் நகராட்சி, செங்கல்பட்டு, அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளராக 11.07.2014 முற்பகல் முதல் அயற்பணி அடிப்படையில் பணிபுரிந்து வருகிறார்.

தனியரின் அயற்பணிக்காலம் 10.07.2017 அன்றுடன் மூன்று ஆண்டுகள் முடிவடைந்த நிலையில், ஆணையர் அவர்களின் 14.07.2017 நாளிட்ட செயல்முறை ஆணையில், திரு.ஆர்.ஜெயசீலன், உதவி செயற்பொறியாளர் (அயற்பணி), அவர்களை பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியிலிருந்து 14.07.2017 பிற்பகல் முதல் விடுவித்து ஆணை வழங்கப்பட்டது.

திரு.ஆர்.ஜெயசீலன், உதவி செயற்பொறியாளர் (அயற்பணி), வட்டார துணை ஆணையர் (வடக்கு) அலுவலகம் அவர்களின் 06.07.2017 நாளிட்ட கடிதத்தில், தன்னுடைய குடும்பம் நிரந்தரமாக சென்னையில் வசித்து வருவதாகவும் மற்றும் 10ம் வகுப்பு படிக்கும் மகளின் கல்வியை கருத்தில் கொண்டும் தனக்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளர் பதவியில் 11.07.2017 முதல் மேலும் ஓராண்டிற்கு (நான்காம் ஆண்டு) பணிநீட்டிப்பு பெற்று வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

தனியரின் கோரிக்கையை ஏற்று, பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 14.07.2017 நாளிட்ட செயல்முறை ஆணை ரத்து செய்யப்பட்டு, தனியரை மீண்டும் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அலுவலகத்தில் உதவி செயற்பொறியாளராக தொடர்ந்து பணிபுரிய ஆணையர் அவர்களின் 03.08.2017 நாளிட்ட செயல்முறை ஆணையின் மூலமாக ஆணையிடப்பட்டது.

மேலும், தற்போது தனியரின் அயற்பணிக்காலம் 10.07.2017 அன்றுடன் மூன்று ஆண்டுகள் முடிவடைந்த நிலையில், அடிப்படை விதி 110, துணை விதி 4 (ii)ல் The maximum period upto which continuance of deputation can be sanctioned should not exceed three years; எனவும், அடிப்படை விதி 110, துணை விதி 4 (iii)ல் While sanctioning further continuance of deputation of the officer concerned the Government order in which the deputation was originally sanctioned and original terms of deputation were fixed should be indicated எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>பொ.து.ந.க.எண்.ஈ3/9994/2017</u>

ஆகவே, திரு.ஆர்.ஜெயசீலன், உதவி செயற்பொறியாளர் (அயற்பணி), வட்டார துணை ஆணையர் (வடக்கு) அலுவலகம், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் அயற்பணி காலத்தினை 11.07.2017 முதல் மேலும் ஓராண்டிற்கு (நான்காம் ஆண்டு) நீட்டிப்பது குறித்து தனியரின் தாய்த்துறைக்கு செயற்குறிப்பு அனுப்ப சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 12.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

“செயற்குறிப்பு அனுப்ப சிறப்பு அதிகாரி– மன்றம்அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.

******

**R.D.C.No.M3/4015/2012**

**Resolution No.539/2017** **Date:20-08-2017**

**Revenue Department – Community Centres – Special announcement made during 2016-17 Budget session – allotment of community centers to public at free of cost –Council Resolution passed – cancellation of – orders of the Government requested – reasons called for – send reasons to Government - Order issue.**

The Council has passed a resolution vide No.264/12, dated 25.07.2012, that all community centers will be allotted for public utility without collecting of rent amount, maintenance charges and only refundable deposit amount will be collected from the public.

Due to huge fiscal pressure in Greater Chennai Corporation, even though is taking active steps to alleviate the situation the said resolution has not been implemented so far.

Hence, in the interest of Greater Chennai Corporation, proposal was sent to Government on 14.06.2017 requesting to cancel the Council resolution No.478a/2016 dated 20.08.2016 by invoking Section 44(2)(i) and 44(2)(b) of the Chennai City Municipal Corporation Act,1919.

The above section reads as follows:

"*Section 44 (2) of Chennai City Municipal Corporation Act, 1919, under the heading of "Powers of the State Government", empowers the State Government to suspend or cancel any resolution passed by the council, in interest or welfare of the Corporation.*

***"44. Power to suspend or cancel resolution etc., under this Act....***

*(2) The State Government may at any time by order in writing ---*

***(i) suspend or cancel in whole or in part any resolution passed ;***

*(ii) suspend or cancel any order issued or licence or permission granted ; or*

*(iii) prohibit the doing of any act which is about to be done or is being done, in pursuance of or under colour of this Act, if, in their opinion ---*

*(a) such resolution, order, licence, permission or act has not been legally passed, issued, granted or authorized.*

***(b) such resolution,*** *order, licence, permission or act is in excess of the powers conferred by, or in contravention of, this or any other Act, or of any rule, notification, regulation or by-law made or issued under this or any other Act, or is an abuse of such powers or* ***adversely affects the financial stability or credit of the corporation or the efficiency of municipal administration as a whole.***

letter dated.28.07.2017 from Principal Secretary to Government, M.A.&.W.S. Department, the Government has requested the Corporation to explain that as it why the Council Resolution No.478-a/2016, dated 20.08.2016 passed by the Corporation Council should not be cancelled by invoking Section 44(2)(i) and 44(2)(b) of the MCMC Act,1919 within 30 days from the date of receipt of the letter.

In this connection, the following explanation may be sent to the Government to cancel the Council Resolution No.478-a/2016, dated 20.08.2016 after getting approval of the Special Officer-Council Resolution.

**R.D.C.No.M3/4015/2012**

1) The rent amount for community halls are being collected by Greater Chennai Corporation from public are much lesser when compared to private Kalyana Mandapams / Marriage Halls / Convention Centers / Party Halls.
2) The Greater Chennai Corporation has purchased chair, table and other utensils for the community centers at a cost of approximately Rs.1 crore and 50 lakhs last year which is being issued to public on booking at free of cost, on collection of refundable security deposit amount.
3) The maintenance cost incurred by the Greater Chennai Corporation for these 47 community centers is approximately Rs.85 lakhs per year.
4) The rent amount collected is essential for the proper maintenance of these community halls and provision of additional infrastructure and facilities.

Hence, orders of the Special Officer-Standing Committee (Taxation and Finance) and Council are therefore requested to send the above said reasons to Government to cancel the Council Resolution No.478-a/2016, dated 20.08.2016.Commissioner's note dated.12.08.2017 is read.

**"Approved by Special Officer-Standing Committee (Taxation and Finance) and Council."**

******

**ம.அ.10.ந.க.எண்.அ9/6603/2017**

**தீர்மான எண்.540/2017** **நாள்:20–08–2017**

**பணியமைப்பு – மண்டலம்–10ல் பணிபுரிந்த செயற்பொறியாளர் – திரு.மா.க.மாரியப்பன் ஓய்வு பெற்று தணிக்கைத் தடை காரணமாக பணிக்கொடை அனுமதிக்காதது தனியரின் பெயரில் – மண்டலம்–10ல் உள்ள தணிக்கைத் தடையை நீக்கம் செய்ய அனுமதி.**

மண்டலம்–10ல் 2011–2012 பத்தி எண்.33ல் குறிப்பிட்டுள்ள தணிக்கைத் தடைகளை நிவர்த்தி செய்ய முன்னதாக அமைக்கப்பட்டிருந்த தலைவர், நிலைக்குழு (கணக்கு) அவர்களின் பார்வைக்கு சமர்ப்பிக்க வேண்டி அறிக்கை தயார் செய்யப்பட்டது. இதற்கான பதில் சமர்ப்பித்து தலைவர், நிலைக்குழு (கணக்கு) அவர்களின் ஒப்புதலுடன் இத்தடையை நீக்கம் செய்யப்பட வேண்டும். அச்சமயத்தில் தக்க பதில் சமர்ப்பிக்கப்பட்டும் நிர்வாக காரணங்களால் நீக்கம் செய்யப்படவில்லை. தற்பொழுது இத்தடை குறிப்பிட்டுள்ள பொறுப்பு அலுவலருக்கு நிறுத்தி வைக்கப்பட்ட பணிக்கொடை தொகையை விடுவிக்க அவசியமான நிலையில் தடைக்கான பதில்களும் தக்க ஆவணங்களும் உள்ள நிலையில் இத்தடையை நீக்கம் செய்ய நிலைக்குழு (கணக்கு) இல்லாத காரணத்தால் தற்பொழுது சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களின் ஒப்புதல் பெற்று நீக்கம் செய்ய கீழ்கண்டவாறு பதில்கள் சமர்பித்துக் கொள்ளப்படுகிறது.

| வ. எண் | தணிக்கைத் தடை எண் | தணிக்கைத் தடைக்கான காரணம் | தணிக்கை தடை நீக்கத்திற்கான பதில் |
|---|---|---|---|
| 1 | 2011–2012 பத்தி எண்.33 | பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–10 கோடம்பாக்கம், கட்டிட அனுமதியின்ற கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு 244(எ) பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட அபராத தொகை குறித்த வவர பதிவுகள் சான்று ஆவணங்கள் தணிக்கைக்கு அளிக்கப்படவில்லை | சென்னை மாநகராட்சியின் மூலம் கட்டிட அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள் மீது (Town & Country Planning சட்ட விதியின்படி தாக்கீது சார்பு செய்யப்பட்டு Lock and Seal செய்து நடவடிக்கை எடுக்கபபட்டு வருகிறது. மேலும், மாநகராட்சி மூலம் கட்டிட அனுமதி (PPA/BA) முறையில் பெறப்பட்டு கட்டிடம் கட்டும் போது விதியினை மீறி (Deviation) கட்டும் கட்டிடங்கள் மீது 244(எ) வசூல் செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 244(எ) தொகை வசூல் செய்ததற்கான (PPA/BA) திட்ட அனுமதி நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, தணிக்கை தடையினை நீக்கம் செய்ய வேண்டப்படுகிறது. |

எனவே, மேற்படி சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதிலினை ஏற்று தணிக்கை தடையை நீக்கம் செய்ய சிறப்பு அதிகாரி–நிலைக்குழு (கணக்கு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 12.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"வ.எண்.1 தணிக்கைத் தடையை நீக்க சிறப்பு அதிகாரி– நிலைக்குழு (கணக்கு) மற்றும் மன்றம்அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**<u>ம.14.வ.து.ந.க.எண்.ஆர்1/3719/2017</u>**

**தீர்மான எண்.541/2017** **நாள்:20–08–2017**

**<u>மண்டலம்–14 – வார்டு 186 –திருமலை நகர் பிரதான சாலையில் 2015–16 ஆம் ஆண்டில் மாமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து புதியதாக கட்டி முடிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தின் முதல் தளத்திற்கு தற்போதைய சந்தை விலையின் அடிப்படையில் – வாடகை நிர்ணயம் செய்ய அனுமதி.</u>**

தலைவர், சோழுங்கநல்லூர் நகர கூட்டுறவு கடன் சங்கம் லிட் அவர்கள் சங்கத்தின் பெருங்குடி கிளை தனியார் கட்டிடத்தில் வாடகையில் இயங்கி வருவதாகவும் சங்கத்தின் பெருங்குடி கிளையை பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–14, வார்டு–186, திருமலைநகர் பிரதான சாலையில் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் காலியாக உள்ள முதல் தள அறையில் இயங்க வார்டு உறுப்பினர் மற்றும் அப்போதைய சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் தெரிவித்ததாகவும், மேலும் வார்டு உறுப்பினர் அவர்கள் அதற்கான இசைவு கடிதம் அளித்துள்ளதாகவும், அதனை தொடர்ந்து பெருங்குடி கிளையை மேற்படி கட்டிடத்தின் முதல் தளத்திற்கு மாற்றம் செய்யவும், பாதுகாப்பு அறை அமைத்திடவும் சங்கத்தின் சார்பாக கூட்டுறவு துறை, நிர்வாக அனுமதி வேண்டி முன்மொழிவு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்து மேற்படி கட்டிடத்தின் முதல்தள அறையினை சங்கத்திற்கு வழங்க தேவையான பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலர் அவர்களின் இசைவு கடிதமும் மற்றும் ஒப்படைப்பு கடிதம் ஆகியவைகளை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–14 அவர்களின் 28.06.2017 நாளிட்ட குறிப்பில் அக்கட்டிடம் எந்த நிதியாண்டில் எவ்வளவு தொகை மற்றும் எந்த நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டு எந்த வருடத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த கட்டிடத்தின் தரைதளம் மற்றும் முதல் தளத்திற்கான அளவுகளையும் வரைபடத்துடன் அனுப்புமாறு உதவி செயற்பொறியாளர், பகுதி–41, மண்டலம்– 14 அவர்களுக்கு குறிப்பு அனுப்பப்பட்டது.

தலைவர், சோழுங்கநல்லூர் நகர கூட்டுறவு கடன் சங்கம் லிட் அவர்கள் சங்கத்தின் பெருங்குடி கிளை பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–14, வார்டு–186 திருமலைநகர் பிரதான சாலையில் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் காலியாக உள்ள முதல் தள அறையில் இயங்க வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் இசைவு கடிதத்தின் அடிப்படையில் இயங்க அனுமதி கோரியிருந்ததாகவும், அதற்கு அனுமதி வழங்குமாறும் மற்றும் இக்கட்டிடத்திற்காக பெருநகர சென்னை மாநகராட்சி நிர்ணயிக்கும் வாடகையை செலுத்த சங்கம் தயாராக உள்ளதாகவும் கடிதம் அளித்துள்ளார்.

மண்டல அலுவலர், மண்டலம்–14 அவர்களின் 04.07.2017 நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–14, வார்டு–186 திருமலைநகர் பிரதான சாலையில் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் காலியாக உள்ள முதல் தள அறையில் சோழுங்கநல்லூர் நகர கூட்டுறவு கடன் சங்கம் லிட் அவர்களின் பெருங்குடி கிளை இயங்க அதற்கான வாடகை நிர்ணயம் செய்யும் பொருட்டு ஆணையர் மற்றும் சிறப்பு அலுவலர் அவர்களின் ஆணை பெற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், பெருநகர சென்னை மாநகராட்சி நிர்ணயிக்கும் வாடகை தொகையை செலுத்த சங்கம் தயாராக உள்ளதாகவும், மேற்படி கட்டிடத்தின் முதல் தள அறையினை மேற்படி சங்கத்திற்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட்ட விவரம் பின்னர் தெரிவிக்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு கட்டிடத்தினை அவர்களுக்கு அளிக்கும் பொருட்டு ஆணை வேண்டி வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

அவ்வாறு கடிதம் அனுப்பப்பட்டதில் வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்கள் மேற்படி கட்டிடத்தை அவர்களுக்கு அளிக்க மன்ற தீர்மானம் பெறப்பட வேண்டும் என்றும் அது குறித்து குறிப்பு சமர்ப்பிக்குமாறு தெரிவித்து கோப்பு திருப்பப்பட்டது.

**ம.14.வ.து.ந.க.எண்.ஆர்1/3719/2017**

உதவி செயற்பொறியாளர் அவர்களின் 17.07.2017 நாளிட்ட குறிப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–14, வார்டு–186, திருமலைநகர் பிரதான சாலையில் உள்ள பல்நோக்கு கட்டிடத்தின் முதல் தளம் 661 ச.அடி கொண்டதாகவும் இந்த முதல் தளமானது 2015–16 ஆம் நிதியாண்டில் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டதாகவும் தெரிவித்து வரைப்படத்துடன் குறிப்பு அனுப்பப்பட்டு இதற்கான வாடகையை நிர்ணயம் செய்ய ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

உதவி செயற்பொறியாளர் அவர்கள் அதற்கான அளவுகளை தெரிவித்து அக்கட்டிடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் தற்போதைய சந்தை மதிப்பு கணக்கீடு செய்யப்பட்டு கீழ்கண்டவாறு சமர்பிக்கப்படுகிறது.

**வார்டு–186 – பெருங்குடி, திருமலை நகர் பிரதான சாலையில் 2015–16 ஆம் ஆண்டில் மாமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ஏற்கனவே இருந்த பல்நோக்கு கட்டிடத்தின் முதல் தள அறை கட்டப்பட்ட கட்டிடம்**

| வ. எண் | அளவு சதுர.அடி | தற்போதைய சந்தை மதிப்பு ஒரு சதுர அடிக்கு (ரூபாய்) | புதிய வாடகை மதிப்பு (மாதம்) ரூபாய் |
|---|---|---|---|
| 1 | 661 | 25 | 16,525 |

மேற்கூறப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமாக கட்டி முடிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தின் முதல் தளத்தின் அருகில் தனியாருக்கு சொந்தமான கடையின் வாடகை ஒப்பந்த நகல் பெறப்பட்டு அதன் அடிப்படையிலும், சம்மந்தப்பட்ட வார்டு உரிமம் ஆய்வாளர் அவர்களின் அறிக்கையின்படியும் (அவ்விடத்தின் அளவு) தற்போதைய சந்தை விலைக்கேற்ப அந்த கட்டிடத்திற்கு வாடகையினை நிர்ணயம் செய்து வணிக வளாக வாடகை நிர்ணயக்குழு, மண்டலம்–14ன் ஒப்புதல் பெற்று தீர்மான நகல் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–14, வார்டு–186ல் திருமலை நகர் பிரதான சாலையில் உள்ள பல்நோக்கு கட்டிடத்தில் 2015–16 ஆம் நிதியாண்டில் மாமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து முதல் தளம் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்திற்கு மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு வாடகை நிர்ணயம் செய்ய சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 12.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அட்டவணையில் குறிப்பிட்டவாறு வாடகை நிர்ணயம் செய்ய சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம்அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

ம.அ.5.ந.க.எண்./சி2/9727/2017

தீர்மான எண்.542/2017 நாள்:20–08–2017

**மண்டலம்–5, கோட்டம்– 49 முதல் 63 வரை துப்புரவு பணி – நிரந்தர பணியாளர்கள் பற்றாக்குறை – தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் கீழ் 640 தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் 01.09.2016 முதல் 31.08.2017 வரை ஆணை பெறப்பட்டது –புதுப்பித்தல் நிரந்தர பணியாளர்கள் இறப்பு மற்றும் வயது முதிர்வு ஓய்வு காரணமாக – கூடுதல் 50 காலி பணியிடங்கள் – தற்காலிக துப்புரவு பணியாளர்கள் நிரப்புவதற்கு அனுமதி.**

மண்டலம்–5, கோட்டம்–49 முதல் 63 வரை உள்ள பகுதிகளில் துப்புரவு பணியினை மேற்கொள்வதற்கு அதாவது தெருக்களில் கூட்டுவது, குப்பைகளை அகற்றுவது மற்றும் இதர பணிகளுக்காக 2012–ஆம் ஆண்டு இக்கோட்டங்களில் உள்ள மக்கள் தொகையின் எண்ணிக்கை, வணிக வளாகங்களின் எண்ணிக்கை மற்றும் இதர முக்கியமான அலுவலகங்களை கணக்கில் கொண்டு தினந்தோறும் உற்பத்தியாகும் குப்பைகளை அகற்றுவதற்கு 2083 பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள் என்பதனை திடக்கழிவு மேலாண்மை துறையின் மூலம் வரையறுக்கப்பட்டது .

மன்ற தீர்மான எண்.516/2012, நாள்.29.11.2012ன்படி 2012 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு மேற்கொண்டு அதனடிப்படையில் காலியாக உள்ள துப்புரவு பணியாளர்களின் பணியிடத்தில் 261 தற்காலிக பணியாளர்கள் தனியார் முகவர்கள் மூலம் 01.10.2012 முதல் 30.09.2013 வரை பணியமர்த்தப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

30.09.2013 அன்று மீண்டும் கணக்கெடுப்பு மேற்கொண்டு முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.03.2013 உத்திரவுபடி காலியாக உள்ள துப்புரவு பணியாளர்களின் பணியிடத்தில் கூடுதலாக 65 தற்காலிக பணியாளர்கள், அதாவது 25% கூடுதலாக பணியமர்த்தப்பட்டு மொத்தம் 326 தற்காலிக பணியாளர்கள் பணிபுரிந்தனர்.

இந்நிலையில் தனியார் ஒப்பந்த முகவரின் பணிக்காலம் 30.11.2013 அன்று முடிவடையும் தருவாயில் சென்னை மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.295/– ஆகும். ஆனால் பணி செய்த பணியாளருக்கு ரூ.215/– முதல் ரூ.225/– மட்டுமே சென்றடைகிறது என புகார்கள் வந்ததை அடுத்து இதை தவிர்க்கும் பொருட்டு உழைத்த உழைப்பாளர்களுக்கு நேரடியாக தினக்கூலியான ரூ.295/– சென்றடைய மாண்புமிகு மேயர் அவர்கள் அறிவுறுத்தியதால் சுவர்ண ஜெயந்தி நகர்புற வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் இப்பணிகளை மேற்கொள்ள மன்ற தீர்மானம் பெறப்பட்டது. (மன்ற தீர்மான எண்.82/2014, நாள்.24.01.2014)

**துப்புரவு பணியாளர் தேவைப்பட்டியல் கணக்கீடு:–**

ஆணையர் மற்றும் துணை ஆணையர் அவர்களால் ஒப்பளிக்கப்பட்ட வார்டு வாரியாக தூய்மை பணியாளர்கள் பட்டியல்

| வ. எண் | கோட்டம் எண் | ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள் | தற்போது உள்ள பணியாளர்கள் | காலிப் பணியிடம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 49 | 102 | 70 | 32 | |
| 2. | 50 | 130 | 70 | 60 | |
| 3. | 51 | 80 | 55 | 25 | |
| 4. | 52 | 124 | 69 | 55 | |
| 5. | 53 | 165 | 101 | 65 | |
| 6. | 54 | 109 | 72 | 37 | |
| 7. | 55 | 87 | 65 | 22 | |
| 8. | 56 | 101 | 72 | 29 | |
| 9. | 57 | 188 | 97 | 91 | |
| 10. | 58 | 158 | 121 | 37 | |
| 11. | 59 | 170 | 152 | 18 | |
| 12. | 60 | 187 | 106 | 81 | |

<u>ம.அ.5.ந.க.எண்./சி2/9727/2017</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | 61 | 169 | 134 | 35 | |
| 14. | 62 | 120 | 74 | 46 | |
| 15. | 63 | 117 | 90 | 27 | |
| 16. | LFZ | 42 | 28 | 13 | |
| 17. | TPF | 34 | 17 | 17 | |
| 18. | SRB | 0 | 0 | 0 | |
| மொத்தம் | | 2083 | 1393 | 690 | |

1. அனுமதிக்கப்பட்ட மொத்தம் துப்புரவு பணியாளர்கள் – 2083
2. தற்போது உள்ள நிரந்தர துப்புரவு பணியாளர்கள் – 1393
3. தேவைப்படும் பணியாளர்கள் – 2083–1393=690

மண்டலம்–5ற்கு கூடுதலாக தேவையான 314 தற்காலிக பதிலி துப்புரவு பணியாளர்கள் மாமன்ற அனுமதி பெற்று (மன்றத்தீர்மான எண்.82/2014, பொருள் எண்.82, நாள்.24.01.2014) 01.09.2016 முதல் ஒரு வருட காலத்திற்கு அதாவது 31.08.2017 வரை பணி செய்ய பணியமர்த்தப்பட்டார்கள். இந்த ஆணை 01.09.2017 அன்று காலவதியாகிறது. மண்டலம்–5ல் துப்புரவு பணி மேற்கொள்ள தற்போது 640 NULM பணியாளர்கள் மற்றும் 1393 நிரந்தர பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர், ஆக மொத்தம் 2033 எனவே, மேலும் கூடுதலாக 50 துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள், (2083 – 2033 = 50)

மண்டலம்–5ஐ சார்ந்த பகுதிகள் சென்னையில் முக்கிய பழமை வாய்ந்த இராயபுரம், பிராட்வே, எம்.சி.ரோடு, வண்ணாரப்பேட்டை, எழும்பூர் போன்ற பகுதிகள் உள்ளடங்கியது ஆகும். மேலும், கடற்கரை சாலைகள், தலைமைச் செயலகம், நேவல் கேஸ், சென்னை உயர்நீதி மன்றம், ரிப்பன் கட்டிடம் உட்புற வளாகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களைக் கொண்டு தனியாக தினமும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தவிர சென்னை மாநகராட்சி, மண்டலம்–5க்குட்பட்ட பகுதிகளில் அரசு ஸ்டான்லி மருத்துவமனை, அரசு பல் மருத்துவமனை, அரசு கண் மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் மற்றும் மகப்பேறு மருத்துவமனை, சென்னை தீவுத் திடல், சென்ட்ரல் இரயில் நிலையம், எழும்பூர் ரயில் நிலையம், பிராட்வே பேருந்து நிலையம், மூலக்கொத்தளம் இடுகாடு, சென்னை பெருநகர் குற்றவியல் நீதிமன்றம், அல்லிக்குளம் வளாகம் மற்றும் நீதிமன்றம், பீச் ஸ்டேஷன் இரயில் நிலையம், பழைமை வாய்ந்த இந்து கோவில்கள், பழைமை வாய்ந்த மசூதிகள், அரண்மனைக்காரன் தெரு, கிறிஸ்துவ ஆலயம், சென்னை துறைமுகம், சென்னை எழும்பூர் அருங்காட்சியகம், பூங்காக்கள், விளையாட்டு திடல், ஓட்டல்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியில் இலவச பொதுக் கழிப்பிடங்கள் சீரிய முறையில் சுத்தமாக பராமரித்திடப்பட வேண்டும். மேற்கண்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகமாக வந்து செல்வதால் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டி உள்ளது.

| தேவைப்படும் பணியாளர்கள் | | – | 690 எண்ணிக்கைகள் |
|---|---|---|---|
| 1. | தினசரி ஊதியம் / நபர் ஒருவருக்கு | – | ரூ.320/– |
| 2. | மொத்த பணி நாட்கள் | – | 365 நாட்கள் |
| 3. | மதிப்பீடு 01.09.2017 முதல் 31.08.2018 வரை | – | 690x320x365= ரூ.8,05,92,000/– |

மேற்கூறிய சூழ்நிலையை கருத்தில் கொண்டு,

அ) மண்டலம்–5, கோட்டம்–49 முதல் 63 வரை இதற்காகும் செலவுத் தொகையான ரூ.8,05,92,000/– கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்திடவும், ஒரு வருடத்திற்கு கணக்கு குறியீடு எண்.40–41–03, Private Conservancy 201–400–601 என்ற தலைப்பில் பட்டியை தீர்வு செய்யவும்,

ஆ) இப்பணியாளர்களை ஒப்பந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள ஒப்பங்கள் கோரவும்,

**ம.அ.5.ந.க.எண்./சி2/9727/2017**

இ) இக்குழுவை ஒப்பந்த புள்ளி நடைமுறையில் ஈடுபடுத்த உத்தேசிக்கப்படும் பட்சத்தில் இக்குழு கட்ட வேண்டிய ஒப்ப வைப்பு தொகை, காப்புத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கவும், இதுக்குறித்து அரசுக்கு முறைப்படி கடிதம் வைத்து பின்னேற்பு ஆணை பெறுவதற்கும்,

மேற்கண்ட அ, ஆ மற்றும் இ ஆகிய இனங்கள் மீது சிறப்பு அதிகாரி– மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில், துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 19.07.2017 நாளிட்ட மேற்குறிப்பில் "Sanction may be given for 6 months" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு அதிகாரி–நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 12.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 19.07.2017 நாளிட்ட மேற்குறிப்புடன் மேற்கண்ட இனங்களுக்கு சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/5052/1993**

**தீர்மான எண்.543/2017** நாள்:20–08–2017

**நிலம் மற்றும் உடைமைத்துறை – குத்தகை நிலங்களுக்கான பயன்பாட்டு இழப்பீட்டு கட்டணம் காலமுறைப்படி உயர்த்திட அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–1 முதல் 15 வரையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களை கல்வி, தொண்டு, வணிகம், மற்றும் குடியிருப்பு போன்ற பயன்பாட்டிற்காக பல ஆண்டுகளுக்கு முன்பே தனியார்களுக்கும் பொதுத்துறை நிறுவனங்களுக்கும் வருவாய் துறை மூலமாக குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்களின் குத்தகைதாரர்கள் அல்லாமல் பிற நபர்கள் அனுபவித்து வருவதை அறிந்து இதனை முறைப்படுத்தி வருவாய் இழப்பீட்டினை தவிர்க்க பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி மன்றத்தீர்மானம் எண்.225/89நாள்.14.03.1989–ல் வணிக பயன்பாட்டிற்கு சந்தைவிலையில் 14% கல்வி/குடியிருப்பு பயன்பாட்டிற்கு7% மற்றும் தொண்டு/அறக்கட்டளை பயன்பாட்டிற்கு 3% இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டதற்கு மூங்கில் பிணைவோர் மற்றும் மர வியாபாரிகள் சங்கம் முறையீடு செய்தது. இம்முறையீட்டினை பரிசீலனை செய்து பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானம் எண்.4945/93 நாள்.16.12.93 மூங்கில் பிணைவோர் குத்தகை நிலங்களுக்கு மாதம் ரூ.30/– என செலுத்தவும், பிறருக்கு கீழ்கண்டவாறு இழப்பீட்டு கட்டணம் செலுத்த அனுமதி அளிக்கப்பட்டது.

| மன்ற தீர்மானம் எண் | வணிகம் | கல்வி/குடியிருப்பு | தொண்டு நிறுவனம் |
|---|---|---|---|
| எண்.4945/93<br>நாள் 16.12.1993 | ரூ.1000/– | ரூ.500/– | ரூ.250/– |

இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டு கட்டணம் 3 ஆண்டுகளுக்கு பின்னர் 15 விழுக்காடு உயர்வு செய்து பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி மன்றத்தீர்மானம் எண்.1741/96, நாள்.17.08.96–ல் கீழ்கண்டவாறு உயர்த்தப்பட்டது.

| மன்ற தீர்மானம் எண் | வணிகம் | கல்வி/குடியிருப்பு | தொண்டு நிறுவனம் |
|---|---|---|---|
| எண்.1741/96<br>நாள் 17.08.1996 | ரூ.1200/– | ரூ.600/– | ரூ.300/– |

இத்தீர்மானம் 1.4.96 முதல் 3 ஆண்டு காலத்திற்கு அமுல்படுத்த அனுமதி அளிக்கப்பட்டது.

இவ்வாறு குத்தகை நிலங்களுக்கு இழப்பீட்டு கட்டணம் நிர்ணயம் செய்யும் போது குத்தகை நிலங்களில் குத்தகைத்தாரர் அனுபவிக்காமல் அவர் வாரிசுதாரர் மற்றும் பிறர் அனுபவித்து வந்த விவரம் அறியப்பட்டது. எனவே, இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மானம் எண்.3540/97, நாள்.29.10.1997ல் நிலங்களை குத்தகைதாரர் அல்லாதோர் பயன்படுத்தி வந்தால் கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அவர்களுக்கு நில ஒதுக்கீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது:–

1) உரிமம் அடிப்படையில் 11 மாதத்திற்கு மட்டும் நிலத்தினை பயன்படுத்த உரிமம் வழங்கவும்,

2) 10 மாத உரிமக் கட்டணத்தை உரிமம் வழங்கும் முன்பாக முன்பணமாக செலுத்தவும்,

3) நிலத்தை பல ஆண்டுகளாக அனுபவித்து வந்தமைக்கு இழப்பீட்டு கட்டணம் அனைத்தையும் நிலுவையில்லாமல் செலுத்திய பின்பு மாநகராட்சி விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டு நிலங்களை பயன்படுத்துவோருக்கே உரிமம் அடிப்படையில் உரிமம் வழங்கவும்,

4) உரிமக் கட்டணத்தை சந்தைவிலை அடிப்படையில் வருவாய் அதிகாரி நிர்ணயம் செய்வதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/5052/1993</u>

மன்றத்தீர்மான எண்.3541/97, நாள்.29.10.97–ல் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயிக்கப்படும் சந்தை விலையில் வணிகத்திற்கு 14 விழுக்காடு, கல்வி போன்ற நிறுவனத்திற்கு 7 விழுக்காடு, அறக்கட்டளை நிறுவனங்களுக்கு 3 விழுக்காடு நடைமுறைப்படுத்துவதால் ஏற்படும் சாதக பாதகங்களை ஆராய்ந்து நடைமுறைப்படுத்த வேண்டியதில்லை என்ற திருத்தத்துடன் உச்சநீதிமன்ற ஆணையின்படி தனி அதிகாரி மன்றத்தீர்மான எண்.1741/96, நாள்.17.08.96–ல் தீர்மானிக்கப்பட்ட முந்தைய குத்தகை கட்டணத்தில் 15% உயர்த்தி அனைத்து குத்தகைதாரர்களிடமிருந்து பயன்பாட்டு இழப்பீட்டு கட்டணம் பெறுவது அனுமதி அளித்து தற்போதுள்ள இழப்பீட்டு கட்டணத்தில் 100 விழுக்காடு உயர்த்தி வசூலிக்கலாம் என்ற திருத்தத்துடன் நிலைக்குழு வரிவிதிப்பு மற்றும் நிதி பரிந்துரையுடன் மன்றம் அனுமதி அளித்துள்ளது. மேற்குறிப்பிட்ட தீர்மான எண்.3541/97 நாள் 29.10.97–ன் படி

1. ரூ.2400/– ஒரு மனைக்கு ஒரு மாதத்திற்கு = வியாபாரத்திற்கு
2. ரூ.1200/– ஒரு மனைக்கு ஒரு மாதத்திற்கு =குடியிருப்பு / கல்விக்கு
3. ரூ.600/– ஒரு மனைக்கு ஒரு மாதத்திற்கு =அறக்கட்டளை போன்றவற்றிற்கு.

மூன்று ஆண்டுகள் முடிவுற்றப்பின் ஏற்கனவே உள்ள உரிம தொகையில் 15 சதவிகிதம் கூடுதலான தொகை வசூலிப்பதற்கு மன்றத்தின் அனுமதியுடன் நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில் உரிமம் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகளுக்கான உரிமம் பெயர் மாற்றம் செய்தல் மற்றும் உரிமத் தொகை உயர்த்துதல் குறித்து அரசின் தெளிவுரையினை அளிக்கக்கோரியதில், அரசாணை எண்.67, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.03.1999–ல் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது அதன் விவரம் பின்வருமாறு

“நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் இடம் / கடைகள் குத்தகை உரிமம் பெற்றவர் அது உள்ளாட்சியின் சொத்து என்பதால், அதை வேறு யாருக்கும் எப்பயனுக்கும் கொடுக்ககூடாதென்றும் பெயர் மாற்றம் செய்யக்கூடாதென்றும் வாரிசுதாரர்களுக்கு கூட மாற்றப்படக் கூடாதென்றும் உரிம காலத்திற்குள் அவர் பயனுக்கு தேவையில்லையெனில் அதை உள்ளாட்சியிடமே ஒப்படைக்க வேண்டுமென்றும், பெயர் மாற்றம் மற்றும் வாரிசுதாரர்களுக்கு மாற்றக்கோரும் கோரிக்கைகளை நிராகரிக்கப்பட வேண்டுமென்றும், ஏற்கனவே மாற்றப்பட்டிருந்தால் அவ்வுரிமம் குத்தகை விதிகளின்படி ரத்து செய்யப்பட்டு அதை மீண்டும் புதியதாக ஏலம் / உரிமம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களையும் அறிவுறுத்தி அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாணையினை பின்பற்றுமாறு அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆணையர்களுக்கு தெரிவிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்”.

மேற்கண்ட அரசாணையினை பெருநகர சென்னை மாநகராட்சியில் அமுல்படுத்தி தக்க நடவடிக்கையினை மேற்கொள்ளபட வேண்டும் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் மன்றத்தின் அனுமதியினை கோரியதில், மாமன்றம் தனது தீர்மானம் எண்.350/99, நாள்.21.04.1999ல் இந்த அரசாணையினை ஏற்பதற்கில்லை என்றும் மன்றம் இயற்றியுள்ள தீர்மானங்களை நடைமுறைப்படுத்த அரசினை வலியுறுத்தி பிரேரணைகள் அனுப்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மன்றத் தீர்மானத்தின்படி மேற்கண்ட குத்தகை முறைப்படுத்தும் மன்றத் தீர்மானங்களை அமுல்படுத்தி பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலங்கள் மற்றும் கடைகளுக்கான குத்தகைகளை முறைப்படுத்த அரசின் அனுமதியினை அளிக்க இவ்வலுவலக 18.05.99 நாளிட்ட கடிதத்தின் வாயிலாகவும் 17.09.99 நாளிட்ட நேர்முக கடிதத்தின் வாயிலாகவும் அரசினை கேட்டுக் கொள்ளப்பட்டது. இதற்கு அரசுக்கடிதம் எண்.28/மாந1/99, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.25.02.2000ல் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான

கடைகள் / இடங்களை ஏலம் / வாடகைக்கு வழங்கும் போது பெருநகர சென்னை மாநகராட்சி அரசின் ஆணையைப் பெறவில்லை எனவும், எனவே இதற்கு அரசு ஆணை தற்போது வழங்கத் தேவையில்லையென அரசு கருதுவதாகவும் தெரிவித்து பெருநகர சென்னை மாநகராட்சி மேற்படியாக செய்ய விரும்புமானால் இவ்வாறு தானே தீர்மானம் செய்து முறைப்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் எதிர்காலத்தில் இவ்வாறு நிகழாதிருக்க தக்க பாதுகாப்புகளை மாநகராட்சி மன்றம் செய்து கொள்ள வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆணையர் அவர்கள் அரசுக்கு அனுப்பிய 13.03.2000 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களை உரிமம் புதுப்பித்தல் மற்றும் பெயர் மாற்றம் செய்தல் குறித்த மன்ற தீர்மானத்தின் விவரம் மட்டுமே அரசு கடிதத்தில் குறிப்பிடப்பட்டு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்றும், குத்தகை நிலங்களை புதுப்பிப்பது குறித்து இயற்றப்பட்டுள்ள மன்றத்தீர்மானங்களின் விவரம் அக்கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை என்றும், ஆகையால், அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரையினை பின்பற்றி குத்தகை நிலங்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மன்றம் இயற்றியுள்ள தீர்மானங்களை பின்பற்றுவது குறித்து அரசின் தெளிவுரையினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது

அரசுகடிதம் எண்.72, ந.நி.ம.கு.வ.துறை நாள்.2.6.2000–ல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கடைகள்/இடங்கள் ஏலம் /வாடகைக்கு வழங்கும்போது பெருநகர சென்னை மாநகராட்சி அரசின் ஆணையைப் பெறவில்லையென்றும் எனவே, அதற்கு அரசாணை வழங்கத் தேவையில்லையென்றும் எதிர்காலத்தில் இவ்வாறு நிகழாதிருக்க தக்க பாதுகாப்புகளை பெருநகர சென்னை மாநகராட்சி மன்றமே முடிவு செய்து கொள்ள வேண்டுமென அரசுக்கடிதம் (2டி) எண்.28, ந.நி.ம.கு.வ. துறை நாள்.25.02.2000–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது போல பெருநகர சென்னை மாநகராட்சி நிலங்களை குத்தகைக்கு விடுதல், உரிமம் வழங்குதல், குத்தகை நிர்ணயம் செய்தல், அரசின் அதிகார வரம்பிற்குள் இல்லாத நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி கோருவது போல் அரசு குறிப்பான ஆணைகள் இட வேண்டியதில்லையெனவும், மேற்படி அரசு கடிதத்தில் குறிப்பிட்ட அறிவுரைகள் பெருநகர சென்னை மாநகராட்சி குத்தகைக்கு விட்ட நிலங்களுக்கும் பொருந்தும் என தெரிவிக்கப்பட்டது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியால் குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலங்கள் மூலக்குத்தகைதாரர்களால் மட்டுமே அனுபவிக்கப்படாமல், அவர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் மூலக்குத்தகைதாரர்களால் மேல் வாடகைக்கு அளிக்கப்பட்டவர்களும் மற்றும் மூலக்குத்தகைதாரர்களிடமிருந்து விலைக்கு வாங்கியவர்களால் அனுபவிக்கப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளதால் 1989 முதல் 2011 வரை மன்றத்தால் இயற்றப்பட்டுள்ள தீர்மானங்களில் பல்வேறு முடிவுகள் மேற்க்கொள்ளப்பட்டு பயன்பாட்டு இழப்பீட்டு கட்டணம் (DAMAGES FEE FOR USE AND OCCCUPATION ) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவைகளின் விவரம் பின்வருமாறு:

| மன்ற தீர்மானம் எண் | காலம் | வணிகம் 2400 சதுர அடிக்கு | கல்வி/குடியிருப்பு 2400 சதுர அடிக்கு | தொண்டு நிறுவனம் 2400 சதுர அடிக்கு |
|---|---|---|---|---|
| 4945/93 நாள் 16.12.93 | 31.03.96 வரை | ரூ.1000/– | ரூ.500/– | ரூ.250/– |
| 1741/96 நாள் 17.08.1996 | 01.04.1996 முதல் 30.09.97 வரை | ரூ.1200/– | ரூ.600/– | ரூ.300/– |
| 3541/97 நாள் 29.10.1997 | 01.10.1997 முதல் 31.03.2000 வரை | ரூ.2400/– | ரூ.1200/– | ரூ.600/– |
| 432/2000 நாள்20.07.2000 | 01.04.2000 முதல் 31.03.2003 வரை | ரூ.2640/– | ரூ.1320/– | ரூ.660/– |
| 500 / 2004 நாள் 23.12.2004 | 01.04.2003 முதல் 31.03.2006 வரை | ரூ.3036/– | ரூ.1518/– | ரூ.759/– |
| 312 / 2006 நாள் 31.08.2006 | 01.04.2006 முதல் 31.03.2009 வரை | ரூ.3492/– | ரூ.1746/– | ரூ.873/– |

| | | | | |
|---|---|---|---|---|
| எண்.29/2011 நாள் 14.01.2011 | 01.04.2009 முதல் 31.03.2012 வரை | ரூ.4016/– | ரூ.2008/– | ரூ.1004/– |
| எண்.473/2017 நாள் 22.07.2017 | 01.04.2012 முதல் 31.03.2015 வரை | ரூ.4618/– | ரூ.2309/– | ரூ.1155/– |

மேலே குறிப்பிட்டபடி பெருநகர சென்னை மாநகராட்சி நிலத்திற்கு பயன்பாட்டு இழப்பீட்டு கட்டணம் நிர்ணயம் செய்வது 1.04.2012 முதல் 31.03.2015–வுடன் முடிவடைந்துள்ளது.

எனவே, மேற்கண்ட மன்ற தீர்மானங்களின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி நிலத்திற்கு ஏற்கெனவே நிர்ணயம் செய்யப்பட்ட 02.04.2012 முதல் 31.03.2015 வரையிலான பயன்பாட்டு இழப்பீட்டு கட்டணத்தில் 15 சதவீதம் உயர்த்தப்பட்டு 01.04.2015 முதல் 31.03.2018 வரை கீழ்கண்டவாறு பயன்பாட்டு இழப்பீட்டு கட்டணம் நிர்ணயம் செய்வதற்கு சிறப்பு அதிகாரி– நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 12.08.2017 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

| பயன்பாடு | தொகை |
|---|---|
| வணிக பயன்பாடு மனை ஒன்றுக்கு மாதம் | ரூ.5311/– |
| குடியிருப்பு மற்றும் கல்வி பயன்பாடு மனை ஒன்றுக்கு மாதம் | ரூ.2655/– |
| தொண்டு பயன்பாட்டிற்கு மனை ஒன்றுக்கு மாதம் | ரூ.1328/– |

“சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம்அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.

******